www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

UK-PRICE-90 P
දිනමුරසු වාරමලර්

பக்கம் 20
ஜன.19–25,1997
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 188

## அரசியல் அரங்கில் இரகசிய சதிகள்

## தலை தூக்கும் புதிய அபாயம்!



சரத் + நக்மா

தம்பதியாகிறார்கள்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## இணக்கம் எதிலே?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

தீர்வுத்திட்டத்தில்
70 வீதம் இணக்கம் என்று
நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.
கேட்க மகிழ்ச்சியாக
இருந்தாலும்-சில
கேள்விகள் எழாமலில்லை!
சத்திர சிகிச்சை வெற்றிதான்
ஆள்தான் பிழைக்கவில்லை
என்றொரு ஜோக் இருக்கிறது.
70சதவீத இணக்கம்தான்
ஆனால்-அரசியல் தீர்வு
உருப்படியாகக் கிடைக்குமா?
என்று கேள்வி எழுகிறது!
நோய்க்கான காரணத்தைக்
கண்டறிவது முதற்படி.
தகுந்த மருந்து செய்வது
இரண்டாவது படி.
இனப்பிரச்சனை என்பது
முற்றிவிட்ட நோய்!
எத்தனையோ வைத்தியர்கள்
வந்தார்கள்- போனார்கள்.
வைத்தியம் மட்டும்
நோய்க்குச் செய்தாரில்லை!
நோய்க்கான காரணம்
யாருக்கும் தெரியாமலில்லை.
தகுந்த மருந்து கண்டு
சிகிச்சை செய்யத்தான்
யாரும் துணிந்தாரில்லை!
இப்போது உடனடித் தேவை
தகுந்த மருந்தும்
தரமான சிகிச்சையும்தான்!
பிரசவ வேதனையில்
நோயாளி துடிக்கும்போது
மருத்துவர்கள் கூடி நின்று
பிறக்கப்போகும் பிள்ளைக்கு
பெயர் என்ன வைப்பது
என்றா ஆலோசிப்பார்கள்?
நம் பாராளுமன்ற தெரிவுக்குழு
வைத்தியர்கள் செய்வது என்ன?
பிரசவம் சுகமாக நடக்குமா
நோயாளியின் உயிர் தப்புமா?
என்பதைப் பற்றி
ஆறுதலாகப் பார்க்கலாம்.
முதலில் பிள்ளையின்
பெயர் என்ன?
சட்டை அளவென்ன
என்பதை ஆராய்வோம் என்று
கூடிக்கூடிப் பேசுகிறார்கள்!
பாராளுமன்ற தெரிவுக்குழுவில்
70சதவீதம் இணக்கம் காணப்பட்டுள்ள
விடயங்கள் அப்படிப்பட்டவைதான்!
வடக்கு-கிழக்கு
ஒரே நிர்வாக அரசியல் அலகு.
மொழி, நில, மக்கள் பாதுகாப்புக்கு
உத்தரவாதமான அதிகாரங்கள்
என்பவைதான்
இனப்பிரச்சனைத் தீர்வுக்கு
அடிப்படையான விடயங்கள்!
அத்திவாரம் இல்லாமல்
கட்டிடம் கட்ட முடியுமா?
அடிப்படை விடயங்களில்
உடன்பாடு காணாமல்
நியாயமான தீர்வை எட்டமுடியுமா?
எதிர்க்கட்சியும், இனவாதிகளும்
தற்போதைய யோசனைகளையே
ஏற்கமறுப்பதால்
அவர்களை திருப்தி படுத்துவது
எப்படி என்ற விடயமே
முன்னுக்கு வந்துள்ளது!
எல்லோரும் எதிர்க்கிறார்கள்
அதனால் தற்போதைக்கு
இதை வைத்துக் கொள்ளுங்கள்
என்று- அரசாங்கமும்
அரைகுறையான தீர்வை
நீட்டுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறதோ
என்று சந்தேகமாக இருக்கிறது!
யாருடைய அதிகாரத்தையும்
பறித்துத் தருமாறு
தமிழ் பேசும் மக்கள் கேட்கவில்லை.
"வாழு, வாழவிடு" என்கிறார்கள்.
"எல்லோரும் இந்நாட்டு குடிமக்கள்
என்றால்-அதிகாரத்தைப்
பகிர்ந்து கொடு" என்கிறார்கள்!
அதுதான் தகுந்த நியாயம்.
அரசாங்கம் யாருக்கும்
பயந்து கொண்டு தருவதுபோல
நடந்து கொள்ளக் கூடாது!
எனவே- இப்போது தேவை
அடிப்படைப் பிரச்சனைகளில்
காணப்படவேண்டிய இணக்கம்தான்!
இணக்கம் காண்பது
முடியாதென்று இருந்தால்
கணக்கமே இல்லாமல்
அரசாங்கம் தனது
இறுதித் தீர்வுத் திட்டத்தை
துணிந்து முன்வைக்கவேண்டும்!
இனிப்பான பேச்சுக்களைவிட
கசப்பாக இருந்தாலும்
நல்மருந்தே நோய்தீர்க்கும்!
தேவையும் அதுவே!
நீதியமைச்சர் கவனிப்பாராக!!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்குவரை
என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்

# ஆன்மீகம்

## வழிபாடு

நாம் வழிபாட்டுக்காக செல்கின்றோம். ஆண்டவருடைய சத்தியங்களை திருமறைக்கூடாக தெளிவுற அறிகின்றோம். கேட்ட சத்திய போதனைகளுக்கு ஏற்ப வாழ வேண்டுமென்ற அறிவுறுத்தலையும் அறிந்திருக்கின்றோம். ஆனால் அநேகருடைய வாழ்க்கை வழிபாட்டோடு மட்டும் நின்று விடுகின்றது. வழிபாட்டில் கடவுள்; அன்றாட வாழ்க்கையில் இல்லை என்றாகி விடுகின்றது.



சமுதாயத்தில் கடவுளுக்குப் பிரியமற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, வழிபாட்டிலும் ஆலயக்காரியங்களிலும் சடங்காச்சாரங்களிலும் தங்களை பக்திமான்களாகக் காட்டிக் கொள்ளும் மக்களை நோக்கி... "உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கின்றேன், உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்கு பிரியமில்லை (ஆமோஸ் 5:21) உன் பாட்டுக்களின் இரைச்சலை என்னை விட்டு அகற்று; உன் வீணைகளின் ஓசையை நான் கேட்க மாட்டேன்." (ஆமோஸ் 5:23) என்று கடவுள் கூறுகின்றதை காணுகின்றோம்.

நம்முடைய வழிபாடும் வாழ்க்கையும் ஒன்றாக இருக்கின்றதா? என்பதை நாம் சீர்தூக்கிப் பார்த்து வழிபாட்டையும் வாழ்க்கையையும் ஒன்றாக்க முனைவோமாக. அவ்வாறு செய்வதே உண்மையான இறை வழிபாடாகும்.

சகோ. எஸ். யேசுநாதன், மெதடிஸ்த ஆலயம், வாழைச்சேனை.

## நோன்பு

*"நோன்பு எனக்குரியது. அதற்கு நான் கூலி கொடுப்பேன்!" என்று அல்லாஹுதஆலா கூறுகின்றான்.

* நோன்பாளிக்கு இரண்டு விதச் சந்தோஷம். ஒன்று நோன்பைத் திறக்கும்போது, மற்றது அவனது நாயனைச் சந்திக்கும்போது.

* நோன்பாளியின் வாய் நாற்றம் அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியின் வாடையைப் பார்க்கினும் மணமானது.

* வானங்களையும் பூமியையும் அல்லாஹ் பேச வைத்தால், அவை றமழானில் நோன்பு நோற்றவருக்கு சுவர்க்கம் இருப்பதாக இரண்டும் நற்செய்தி கூறும்.

* ஒவ்வொரு வஸ்துவிற்கும் ஸக்காத்து இருக்கிறது. உடலுக்கு ஸக்காத்து நோன்பு.

* நோன்பாளியின் தூக்கம் வணக்கமாய் இருக்கிறது. அவர் மூச்சு விடுவது தஸ்பீஹ் செய்வதாக இருக்கிறது. அவருடைய நற்கிரியை இரட்டிப்பு ஆக்கப்படுகிறது.

பாத்திமா பர்ஸானா மன்சூர், மாத்தளை.

## கவிதைப் போட்டி இல.185



**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்**

பரிசுக்குரிய கவிதை

### வியர்வைக் கனிகள்

மழைதூறக் குடைபிடித்து
மகிழ்ந்திருக்கும் சின்னச்சிட்டு
சின்னஞ்சிறு தீவினிலே-
சீரழிந்த பகுதியிலே-
வியர்வைத் துளி சிந்தி
விதைத்தெடுத்த கனிகளுடன்!

நஸ்பியா பஹ்ரதீன்-
பெருக்குவட்டான், புத்தளம்.

### விலை என்ன?

வீதியிலே கடை விரிப்பு!
வெயிலுக்கு குடை விரிப்பு!
விழியிரண்டால் வலை விரிப்பு!
விலையென்னவோ உன் சிரிப்பு?

சி.மு.சுந்தரேசன்-அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

### சிரிப்பு நிலைக்கட்டும்.

எட்டாக் கனிக் கொன்றும்
கொட்டாவி விடவில்லை;
எட்டி விட்ட கனிவிற்று
தட்டிடுவேன் பஞ்சமதை!
என் றெண்ணும் சின்னவளே!
புன்சிரிப்பு என்றும்
உன் முகத்தில் நிலைத்திடட்டும்!

தர்ஷிக்கா கனகசிங்கம்-
மட்டக்களப்பு.

### இனிய தேசம்

இனிய தேசம் எங்கும்
இடறுகள் வந்தபோதும்
கொட்டும் மழையினிலும்
இனிக்கும் பழங்களுடன்
புன்னகைக்கும் நெஞ்சமிங்கு.....!

ஏ.எஸ். மரைக்கார்-
மண்டலக்குடா, கல்பிட்டி.

### நிஜத்தின் நிழல்

பராக்கு எதற்கு
பாவையே உனக்கு?
பஞ்சம் அதிகம்
பழம் பத்திரம்!

அ. லலிதா- சக்கடத்தார் வீதி,
கருவாஞ்சிகுடி.

### பொல்லாத காலம்

முத்துப்பல்காட்டி முறுவலிக்கும் சிங்காரி!
முன்னாலே பார்த்துந்தன் தொழில்தன்னை புரிந்திடம்மா!
கண்திறந்து இருக்கும்போதே கண்பிடுங்கும் காலமம்மா;
கருத்தோடு இல்லாவிடின் கவர்ந்திடுவார் பழங்களினை.

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### ஜாக்கிரதை

வானம் அடை மழையில்
வாழ்க்கை உருண்டோட
வண்ணக் குடை பிடித்து
வந்தமர்ந்த வனஜாவே!
திரும்பிப் பார்க்காதே!
திருடர்கள் ஜாக்கிரதை!

தெ. லோஜனா- கொழும்பு-15.

## கவிதைப் போட்டி இல-188



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 25.01.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.188 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### வேண்டும்

பண்டம் மலிய வேண்டும்-எங்கும்
பயிர் செழிக்க வேண்டும்!
சண்டைகள் ஓயவேண்டும்-எவரும்
சகோதரர் ஆகவேண்டும்!

க. விஜயராணி-கிரிப்போருவ, எட்டியாந்தோட்டை.

### தஞ்சம்

வானமே கூரையாகும்
வாழ்க்கை சக்கரத்திலே
நடமாடும் சந்தை-உனக்கு
குடைதான் தஞ்சமா.....?

அன்பரசி தவபாலன்- திருமலை.

## வாசக(ர்) சாலை

முரசின் சேவைக்கு என் பாராட்டுக்கள். மலையக அரசியலிலும் காவான்கள் இருக்கின்றன. முரசு இனம் காட்டவேண்டும் என்பதே என்போன்றவர்களின் அவா. அரசியல் என்பது சாக்கடைதான் என்பதை சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் நம் அரசியல்வாதிகள். மலையக மக்கள் ஓட்டாண்டிகளாக இருக்க, அவர்கள் பெயரில் அரசியல்வாதிகளும், தொழிற்சங்கங்களும் ராஜபோகம் நடத்துகிறார்கள். முரசே! இனம் காட்டு!

வி.பவானந்தன், நுவரெலியா.

♠ ♣ ✎

எடுத்த வீச்சில் ஜனாதிபதிக்கு கடிதம் போடும் தமிழ் கட்சிகளுக்கு அதிரடி அய்யாத்துரையாரின் குத்தல் வலித்திருக்குமா? கடித அரசியல் நடத்தி கலக்கிக் கொண்டிருக்கிறார்கள் தமிழ்க் கட்சிகள். அறிக்கை விடுவது பழைய ஃபாஷனாக்கும்!

எம்.திருச்செல்வம், கொழும்பு-06

### சொல்வதெல்லாம் கற்பனையா?

கற்பனை என்று சொன்னாலும் காதிலை பூ கந்தசாமியாரின் கிண்டல்கள் கற்பனையாகத் தெரியவில்லை. நடப்பதையும், நடக்கப்போவதையும் நயமாகச் சொல்லிவிடுகிறார் மனுசன்! யாரய்யா அந்த காதிலை பூ கந்தசாமி?

எம்.எச்.கபூர், கல்முனை.

♠ ♣ ✎

பூலான்தேவி சூடாகச் செல்லும்போது, இலக்கிய நயம் மூலம் சூட்டுக்குச் சுவை சேர்க்கிறார் ரசிகன்.

கா.ஜெயலட்சுமி, பதுளை

♠ ♣ ✎

கவிதை நடையில் இலக்கிய நயம் மிக அருமை. இராமாயணத் தொடர் மற்றொரு இலக்கிய விருந்து. ரசிகனுக்கும், இராஜகுமாரனுக்கும் பாராட்டுக்கள்.

ஜோ.ராஜாராம், கற்பிட்டி.

♠ ♣ ✎

அதிரடி அய்யாத்துரையாரோடு போட்டிக்கு வந்துவிட்டார் காதிலைபூ கந்தசாமி. சபாஷ்! சரியான போட்டி! போட்டியால் இலாபம் நமக்குத்தான்.

செல்வி ஆர்.பவானி, வவுனியா.

♠ ♣ ✎

வாரம்தோறும் தாயகச் செய்திகளோடும் இனிப்பான அம்சங்களுடனும் வந்து முத்தமிடும் முரசுக்கு கைகுலுக்கல். முரசு இங்கு வரும் நாட்களில் விரைவாக வேலை முடியாதா என்று துடிப்பாக இருக்கும். கடையில் முரசு வாங்கியதும்தான் சந்தோசம். உண்மை இது. முரசுக்கு முகஸ்துதி தேவையில்லை.

என்.வில்சன், கவிற்லர்லாந்து.

♠ ♣ ✎

'தூக்குமேடைக்குறிப்பு' கடந்த காலத்தின் பதிவாக இருந்தாலும், நிகழ்கால நடப்பாக உணர்வு தருகிறது. சாவின் விளிம்பில் நின்றுகொண்டும் வாழ்க்கையை ரசிக்கிறாரே ஜுலிஸ் பூசிக்! அதுதான் மன உறுதியா? சோகம் ஒரு புறம், வியப்பு மறுபுறம். முரசின் தொடர்களில் இது மற்றொரு முத்து.

கோ.உலகநாதன், தெகிவளை.

அனிதா இளம் மனைவி' முடிவுக் கட்டத்தை நெருங்குகிறது போலிருக்கிறதே! அடுத்ததாக முரசு வழங்கப்போகும் தொடர் என்னவோ?

♠ ♣ ✎

எஸ்.பர்ஸான், மருதானை.



முரசொரு பெண்ணாக
குலவுகின்ற அழகோ
பொன்முக மாதரெலாம்
ஏந்திவரும் நளினமோ
சுடச்சுடச் செய்திகளை
தொகுத்துத்தரும் விதமோ
பலே! பலே! முரசு பலே!
என்றும் எங்கள் இதயங்
களில் நீங்காத இடம் உனக்கு.

ஐ.எம். இர்ஷாத்,
குறிஞ்சாக்கேணி-1,கிண்ணியா.

♠ ♣ ✎

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சமும் படு சூப்பர்தான். காதிலை பூ கந்தசாமியார் (02.01.97) அன்று வெளிவந்த வாரமலரில் "நட்சத்திரங்களுக்கு கிரிக்கெட் ரெயினிங்" அருமையிலும் அருமை. எமக்கு தொடர்கதையாக இராமாயணத்தை தினமுரசுக்கு எழுதி வழங்கிவரும் இராஜகுமாரன் அவர்களுக்கு எனது நன்றிகள்.

வை. சிவரஞ்சினி, பேச்சியம்மன்
கோயில் வீதி, ஆரையம்பதி-02.

♠ ♣ ✎

முரசுதரும் 'அதிரடி அய்யாத்துரை' பகுதி அருமை. வடபகுதி மண்ணின் பேச்சுவழக்கில் சம்பவங்களை விமர்சித்தல் அதிரடியல்ல நெத்தியடி.

வாழ்த்துக்கள்

பே. கிறிஸ்ரி அன்ரனி,
கொழும்பு-06.

அன்பிற்கினிய முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் தேன்கிண்ணம் திகட்டாத ஒன்று. பூலானின்கதை மெய்சிலிர்க்க வைக்கிறது. அனிதா இளம் மனைவி ஒவ்வொரு அங்கமும் விறுவிறுப்பாகச் செல்கிறது. சிந்தியா பதில்கள் அசத்துகின்றன. சிந்தியா ஒவ்வொரு கேள்விக்கும் படு ஜோராக பதில் கூறுகிறார்.

எஸ். ரம்ஸியா, பதுளை.

♠ ♣ ✎

முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் கவிதைப்போட்டி, கொள்ளை ராணி பூலான்தேவி, லேடீஸ் ஸ்பெஷல், பாப்பா முரசு என்பன என்னை மிகவும் கவர்ந்தவை. மென்மேலும் உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

ரிஷாதா, பதுளுப்பிட்டிய வீதி, பதுளை.

மடல் அனுப்பியவர்களில் இடம்உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:

* ஏ.ஜே.எம்.ஜஃபர், கொழும்பு-15.
* ப.தீபவதனன், தெகிவளை
* நா.ஆனந்தன், கண்டி.
* அ.அரசரெத்தினம், மூதூர்.
* ம.இந்துமதி, மட்டக்களப்பு.
* கோ.செல்வின், ஃபிரான்ஸ்.
* எஸ்.கிருபாகரன், கோட்டைக்கல்லாறு.
* எஸ்.அன்னலெட்சுமி, மன்னம்பிட்டி.
* க.எல்.சல்மா, அக்கரைப்பற்று-06.
* ஜெ.எம்.பஸீர், மருதமுனை.
* கே.நித்தியானந்தன், பெல்மதுளை.
* பு.பூரணச்சந்திரன், திருக்கோணமலை.
* திருமதி ராதா சிவபெருமாள், வெளிமடை
* பொன்.லோகநாதன், பலாப்பத்வெல.
* ஏ.எம்.முஸம்பிர், கிண்ணியா-03.
* ஏ.சி.எம்.அஸ்கர், கற்பிட்டி வீதி.
* வி.என்.எட்வேட், பெரிய நீலாவணை-01.
* வி.அன்பழகன், பசறை.
* ஸம்சுதீன் ஏ.ஜெலீல், பிபிலை.
* ஏ.சி.பிறாஸ், அக்கரைப்பற்று-06
* எம்.ஐ.முஸாதீக், திருகோணமலை.
* இரா.சாந்தராஜா, இரத்தினபுரி.
* எம்.செல்வக்குமார், மஸ்கெலியா.
* ஏ.வேல்முத்து, உடப்பு.
* எச்.எம்.ஹம்ஸா, களுத்துறை தெற்கு.
* எம்.எம்.நியாஸ், மருதமுனை-01
* எஸ்.கிருபாலினி, இரத்தினபுரி.
* கே.புவனலோஜினி, இறக்குவானை.
* ஆர்.சௌந்திரன், ஜெர்மனி.
* எஸ்.தங்கவடிவேல், கண்டி.

என் இனிய தினமுரசே!

ரசிகனின் பூலான் தேவி தொடர் மிகவும் விறுவிறுப்பாகத் தொடர்கின்றது. பூலான் கொள்ளை ராணியாக மாற, அவளது உணர்ச்சிகளும், வேதனைகளுமே காரணமாகும். ஒரு பூவைப் புயலாக்கிய அந்த மனித வெறிநாய்களைப் பூலான் பழிவாங்குவாள், என்பதில் சந்தேகமில்லை.

க. புலியந்திரன், பெரியபோரதீவு.

♠ ♣ ✎

இலங்கை இனப்பிரச்சனை சம்பந்தமாக ஆனந்த விகடன் கருத்துக் கண்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

'தடை தாண்டும் பயணங்கள்' சிறுகதையின் மூலம் நம் நாட்டில் உள்ள நாட்டு பயணங்களுக்கு உள்ள தடைகள் சிரமங்கள் எடுத்துரைப்பதாக இருந்தது. காலத்துக்கேற்ப தமிழ் மக்களின் அவலங்களை மிகவும் தத்ரூபமாக எழுதியிருந்தார் ஸ்ரீ.மு. கலை பாராட்டுக்குரியவர்.

மகேஸ்வரி ராமதாஸ், வத்தேகம.



படிப்பகம்

www.padippakam.com

# எதிர்க் கட்சியின் இரகசிய வியூகம்

## தூண்டப்படும் இனவாத அமைப்புக்கள்!

அரசின் அரசியல் தீர்வு யோசனைகளுக்கு நேரடியான எதிர்ப்பைக் காட்டாமல், இனவாத அமைப்புக்களின் பிரசாரங்களைத் தூண்டிவிட ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஒரு பிரிவினர் முயன்றுவருகின்றனர்.

பொதுஜன முன்னணிக்குள் உள்ள லலித் பிரிவினரின் உதவியுடன் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தீர்வு யோசனைகளை தோல்வி அடையவைக்கவும் முயற்சிகள் நடக்கின்றன.

புலிகளின் தாக்குதல்கள் தீவிரமாகும் போது தெற்கில் இனவாதச் சூழல் ஒன்றையும் தோற்றுவித்து ஆளும் தரப்புக்கு நெருக்கடி ஏற்படுத்துவதே ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள தீவிரவாதப் பிரிவினரின் நோக்கம் என்று தெரிகிறது.

### லலித் பிரிவு

உள்ளூராட்சித் தேர்தல்களை தெற்கில் அரசு நடத்துமானால் லலித் பிரிவினரை தனியாகப் போட்டியிட வைக்கவும் எதிர்க் கட்சி பிரமுகர்கள் சிலர் முயற்சி செய்து வருகின்றனர்.

லலித் பிரிவினர் இனப்பிரச்சனைத் தீர்வில் கடும்போக்கையே மேற்கொள்ளுகின்றனர். வடக்கு-கிழக்கு இணைப்பு, ஒற்றையாட்சி முறையை மாற்றுதல்- இரண்டையும் அவர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

இந்நிலையில் அரசியல் தீர்வு தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குள் ஒத்த கருத்து ஏற்பட இடமில்லை என்பது தெளிவாகிவிட்டது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அரசியல் தீர்வு யோசனை தம்மால்தான் தோல்வி கண்டது என்று தமிழ் மக்கள் கருதிவிடுவார்களோ என்று எதிர்க்கட்சி நினைக்கிறது. அதனால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் மேலும் தாமதத்தை ஏற்படுத்திக் கொண்டு, அரசாங்கத்துக்கு இனவாத அமைப்புக்கள் மூலம் அச்சுறுத்தல் விடுப்பதுதான் எதிர்க் கட்சியின் தந்திரம்.

அரசாங்கமே தீர்வு யோசனைகளை கிடப்பில் போடக்கூடிய வகையில் இனவாத அமைப்பின் பிரசாரத்தைத் தூண்டிவிடப் போகிறார்கள்.

### தேர்தல் பிரசாரம்

அதே நேரம் உள்ளூராட்சித் தேர்தல்களிலும் ஆளும்தரப்பை பலவீனமாக்க, லலித் பிரிவினரை பயன்படுத்தும் திட்டமும் இருக்கிறது. திருமதி ஸ்ரீமணி அத்துலத்முதலி மூலமாக ஆளும் தரப்புக்கு எதிரான பிரசாரத்தை நடத்தினால் மக்களிடம் ஏடுபடும் என்று நினைக்கிறார்களாம்.

ஆளும் தரப்பில் இருந்த ஒருவர் மூலமாகவே அத்தரப்பை தாக்குவது பயன்தரும் என்று கருதப்படுகிறது. முக்கிய தருணத்தில் அமைச்சுப் பொறுப்பை உதறிவிட்டு ஸ்ரீமணி வெளியே வருவார். பின்னர் தமிழ்க்கட்சிகளின் ஆதரவையே அரசாங்கம் நம்பியிருக்க வேண்டும்.

'தமிழ்க் கட்சிகளே ஆட்சி நடத்துகின்றன. அதனால்தான் தமிழர்களுக்கு நாட்டைத் தாரைவார்க்க நினைக்கிறது அரசாங்கம்' என்று இனவாத அமைப்புகள் பிரசாரம் செய்யவும் வாய்ப்பு ஏற்படும். அதனால் அரசாங்கத்தின் நிலை தர்மசங்கடமாகிவிடும் என்று கணக்குகள் போடப்படுகின்றன. எதிர்க்கட்சி வட்டாரத்திற்கு நெருக்கமான ஒரு பிரமுகர் மூலமாக மேற்கண்ட தகவல்கள் முரசுக்கு கிடைத்துள்ளன.

# யாழ் குடாநாட்டில் புதிய கெரில்லாக்கள்!

## தாக்குதலை வேகப்படுத்த புலிகள் திட்டம்

யாழ் குடாநாட்டில் புதிய தாக்குதல் பிரிவுகளை பிரபாகரன் அனுப்பிவைத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஏற்கனவே அங்கு இருந்த புலிகளின் அணிகளின் தாக்குதல்கள் மந்தமாக இருப்பதாகக் கருதியே புதிய அணிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்திய அமைதிப்படை காலத்தில் தனி நபர்களைக் கொல்ல, சிறு குழுக்களாகவும் இயங்கி தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட உறுப்பினர்களும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய அமைதிப்படை காலத்தில் பல தாக்குதல் சம்பவங்களில் பங்குகொண்ட தக்காளி, வீமன் ஆகியோர் உட்பட பலர் சமீபத்தில் தென்மராட்சிப் பகுதியில் காணப்பட்டனர். தென்மராட்சிப் பகுதிக்கு பொறுப்பான பாப்பாவும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தென்மராட்சியில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு சென்று பாப்பா மக்களைச் சந்தித்து வருகிறார். பாப்பா குறிப்பிட்ட பகுதி ஒன்றில் நிற்பதாகத் தகவல் கிடைத்து படையினர் சென்றதாகவும், பாப்பா தப்பிச் சென்றதாகவும் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

இதேவேளை யாழ்ப்பாணத்திற்கு புதிய அணிகள் சென்றபின்னரே தென்மராட்சியில் உள்ள கச்சாயில் இரண்டு தாக்குதல்கள் புலிகளால் நடத்தப்பட்டன. பாப்பா தலைமையிலேயே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக நம்பப்படுகிறது.

11.01.97 நள்ளிரவில் கச்சாயில் இருந்த சிறிய முகாமொன்று புலிகளால் தாக்கப்பட்டது. 12.01.96 அன்று மதியம் 3.35 மணியளவில் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றும் நடத்தப்பட்டது. அதில் எட்டுப் படையினர் பலியானதாக படையினர் தெரிவித்துள்ளனர். இரண்டு தாக்குதல்களிலும் தமது தரப்பில் இழப்பு எதுவும் இல்லை என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ் குடாநாட்டுக்கு ஏனைய தமிழ்க் கட்சிகள் செல்லத் தொடங்கியுள்ளன. இந்நிலையில் புலிகளின் இலக்காக தமிழக கட்சி உறுப்பினர்களும் அமையலாம் என்று நம்பப்படுகிறது.

இந்திய அமைதிப்படைக் காலகட்டம் போல யாழ் குடாநாட்டு நிலவரங்கள் மாறப் போகின்றன என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி.யினர் யாழ் சென்று அலுவலகம் திறந்துள்ளனர். பொங்கல் தினத்தன்று புளொட் உறுப்பினர்கள் யாழ் சென்றுள்ளனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பும் யாழ் செல்ல பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கோரியுள்ளது.

"புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவது எமது நோக்கமல்ல; மக்களின் உடனடிப் பிரச்சனைகளில் உதவுவதே தமது நோக்கம்," என்று ஈ.பி.டி.பி.யாழ் மாவட்டப் பொறுப்பாளர்களில் ஒருவரான ஜெகன் யாழ்ப்பாணத்தில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## "புலிகளால் அப்பாவிகள் பலி!"

### யாழ் இராணுவம் தெரிவிப்பு

யாழ் குடாநாட்டில் உள்ள இராணுவத்தினரால் அடிக்கடி பத்திரிகை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு தமது கருத்துக்களைத் தெரிவிப்பதோடு தமக்கு ஆதரவு தருமாறும் இராணுவத்தினர் அந்த அறிக்கைகள் மூலம் கோருகின்றனர்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் வெளியிட்ட அறிக்கையில்; புலிகள் இயக்கத்தினரின் தாக்குதலால் அப்பாவி மக்களே பலியாகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் பல கோடி ரூபாய்களை செலவிட்டு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆனால் புலிகள் இயக்கத்தினரோ சகஜ வாழ்க்கையை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

பாடாசலை செல்லும் மாணவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தவும் புலிகள் முயற்சி செய்கின்றனர். அதனால் பொய்யான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். சுண்டிக்குளி பாடசாலை மாணவிகள் காணாமல் போனதாகவும் புலிகள் பொய்யான பிரசாரத்தில் ஈடுபட்டனர் என்றும் இராணுவத்தினர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## 230 இலங்கை அகதிக் குழந்தைகள்

### கர்நாடக மாநிலத்தில் பட்டினி

இந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் பெங்களூரில் உள்ள பள்ளியொன்றில் 230 இலங்கைத் தமிழ் அகதிக் குழந்தைகள் பட்டினியால் வாடுகின்றன.

'பிரைட் சொசைட்டி' என்னும் பெயரில் ஈ.என்.டி.எல்.எஃப் இயக்கத்தினரால் பெங்களூரில் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு 230 அகதிக் குழந்தைகள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்தப் பள்ளியை சொல்லி ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கத்தினர் நிதி திரட்டியும் வருகின்றனர். அவ்வாறு இருந்தும் அகதிக் குழந்தைகள் கடந்த சில மாதங்களாக போதிய உணவின்றி பட்டினி கிடக்கின்றன.

இந்தியப் பிரதமர் தேவகவுடா கர்நாடக முதல்வராக இருந்தபோது இப் பள்ளிக்கு உதவுவதாகத் தெரிவித்தாராம். அதன் பின்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். தற்போதைய கர்நாடக அரசும் உதவி செய்ய முடியாது என்று கைவிரித்துள்ளதாம்.

கிழிந்த ஆடைகளுடன் எலும்பும் தோலுமாகக் காணப்படும் இந்த அகதிக் குழந்தைகள் விடயத்தை தமிழக பத்திரிகையான 'தினமணி' புகைப்படங்களுடன் பிரசுரித்தது. அதன் பயனாக மனிதாபிமானிகள் பலர் நன்கொடை வழங்கியுள்ளனர்.

## காணாமல் போனோர் விசாரணை

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகள் 18.01.1997 முதல் 20.01.97 வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் அரச அதிபரிடம் முறைமீடு செய்த 60 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

சாட்சியமளிப்போர் தமது உறவினர்கள் காணாமல் போனது தொடர்பாக நிரூபிக்கக் கூடிய ஆதாரத்துடன் சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். எவ்வாறான ஆதாரத்தை சமர்ப்பிப்பது என்று தெரியாமல் சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட சிலர் அங்கலாய்க்கின்றனர்.

இவ்வாறான விடயங்களில் ஆதாரங்கள் சமர்ப்பிப்பது கடினமான காரியம் என்று கூறப்படுகிறது.

## பாடசாலைக்குச் செல்லாத அதிபர்கள்

### மத்திய மாகாணத்தில் கல்வி சீரழிவு!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் ஒரு தமிழ்ப் பாடசாலையாவது தேசிய பாடசாலையின் அந்தஸ்த்தைப் பெறவில்லை என மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு.தர்மலிங்கம் தெரிவித்தார்.

திரு.பத்ம கீர்த்தி ஹேமச்சந்திர தலைமையில் நடைபெற்ற மத்திய மாகாண சபையின் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசும்பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு மாகாண சபை உறுப்பினர் திரு. வீ.டி.தர்மலிங்கம் தொடர்ந்தும் கூறியதாவது:

"மலையகத்தில் ஒரே பாடசாலையில் ஏழு அல்லது எட்டு வருடங்கள் அதிபராக வேலை செய்யும் அதிபர்களும் ஆசிரியர்களும் அலுத்துப் போய்விட்டனர். தமிழ்ப்பாடசாலைகளின் நலன் உரிய முறையில் பேணப்படுவதில்லை.

ஒரே பாடசாலையில் நீண்ட காலமாக ஆசிரியர்களை சேவை புரிய இடமளிக்கக் கூடாது. நான் அதிபராக இருந்து கருமம் பார்த்தவன். நான் பெற்ற அனுபவத்தைக் கொண்டே இப்படிக் கூறுகிறேன். சில அதிபர்கள் அலுவலகம் போவதாகக் கூறி பாடசாலைக்குச் செல்லாமல் நாளைக் கடத்தி வருகின்றனர். தரம் கிடைத்த அதிபர்கள் வேலை செய்வதில்லை. அதே வேளையில் தொண்டர் ஆசிரியர்கள்கூட தமக்கு அதிபர் தரம் வேண்டுமெனக் கேட்கின்றனர்.

மலையகத்தில் உள்ள ஆசிரியர்கள் இப்பொழுது தமக்கு அதிபர் தரம் கிடைக்க அரசியல்வாதிகளை நாடுகின்றனர். சிறந்தவர்களுக்கு அதிபர் தரம் வழங்குவதில் தப்பில்லை. 'கிரேட்' இல்லாதவர்கள்தான் கல்வி அலுவலகம் அடிக்கடி செல்கிறார்கள். அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி, தலவாக்கெலை தமிழ் மகாவித்தியாலயம் போன்ற பல பாடசாலைகளிருந்தும் அவை ஒன்றுகூட தேசிய பாடசாலையாக அந்தஸ்துப் பெறவில்லை. இவற்றை அபிவிருத்தி செய்ய கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்!" என்று தெரிவித்தார்.

## காரைநகரில் இருவர் பலி

யாழ்ப்பாணம் காரைநகரில் இரு இளைஞர்கள் கடற்படையினரின் துப்பாக்கி வேட்டுக்குப் பலியாகினர்.

தேவராசா விக்கினேஸ்வரன், வயது 22, சோமசுந்தரம் சிவகுமார், வயது 22 ஆகியோரே பலியானவர்கள் ஆவர். 11.01.1997 அன்று இரவு 8.35 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது. தாம் நிற்குமாறு கூறியும் இரு இளைஞர்களும் கேட்காமல் சென்றதால்தான் சுடப்பட்டனர் என்று கடற்படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவருக்கும் தலைப்பகுதியில்தான் சூடு விழுந்துள்ளது. இச் சம்பவம் தொடர்பாக பொதுமக்கள் சந்தேகம் தெரிவித்ததை அடுத்து யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி. பா.உ- யூ. பாஸ்கரன் கடற்படை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

## வவுனியாவில் தாக்குதல்

வவுனியா பூவரசங்குளத்தில் அமைந்திருந்த படையினரின் காவலரண்கள்மீது 12.01.1997 அன்று புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

இராணுவத்தினர் தரப்பில் ஐந்துபேர் பலியானார்கள். புலிகளின் தரப்பில் இருவர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கப்டன் தமிழ் வாணன் (எஸ்.சிவானந்தன்- ஒட்டிசுட்டான்), மதிவாசன் ஆகியோரே பலியானதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர். 60 மில்லி மீற்றர் மோட்டர் மற்றும் ஆயுதங்கள் தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும், சில நிமிடங்கள் மட்டுமே தாக்குதல் நீடித்ததாகவும் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## பரந்தன் சமர் காட்சிகள்

### புகைப்படங்கள் பிரசுரம்

வன்னியில் இருந்து வெளியாகும் 'ஈழநாதம்' பத்திரிகையில் பரந்தன் சமர்க் காட்சிகள் புகைப்படங்களாகப் பிரசுரமாகியுள்ளன.

ஆயுதத் தளபாடங்கள் படையினரால் அழிக்கப்பட்டதாக வெளியான செய்திகளை ஆதாரத்துடன் மறுக்கவே புகைப்படங்கள் பிரசுரித்துள்ளதாக புலிகள் தெரிவித்தள்ளனர்.

ஆட்டிலறிகளுக்கு அருகே புலிகள் நிற்கும் புகைப்படங்களும், அவற்றைத் தகர்க்கும் படங்களும் பிரசுரமாகியுள்ளன.

இதேவேளை ஆட்டிலறித் தளத்தைக் கைப்பற்றிய புலிகளின் அணி, அந்த ஆட்டிலறிகள் மூலம் ஆனையிறவு தளம் நோக்கி தாக்கியிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. அதனால்தான புலிகள் முல்லைத்தீவில் கைப்பற்றிய ஆட்டிலறிகளால் தாக்கியதாகச் செய்திகள் வெளியாகியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## பெண்புலிகளின் கொமாண்டோ அணி

பரந்தன் சமரில் புலிகளின் பெண் உறுப்பினர்களைக் கொண்ட கொமாண்டோ அணிகள் களத்தில் இறக்கப்பட்டன.

வன்னியில் விசேஷ பயிற்சி கொடுக்கப்பட்ட அந்த கொமாண்டோ அணிகளே பரந்தன் சமரில் முக்கிய பங்கு வகித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. பரந்தன் சமரில் 78 பெண்புலிகள் பலியாகியுள்ளனர். புலிகளின் பெண் அணியில் ஏற்பட்ட மூன்றாவது பாரிய இழப்பு இதுவாகும்.

1991ல் ஆனையிறவு ஆகாய கடல் வெளிச் சமரில் 119 பெண் புலிகள் பலியாகினர். 1995ல் மணலாற்றில் நடைபெற்ற சமரில் 128 பெண் புலிகள் பலியாகினர். மணலாற்றில் பலியான 223 புலிகளில் 128 பேர் பெண் புலிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனையிறவுத் தளத்திலிருந்து கிளிநொச்சி நகரைக் கைப்பற்ற படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் ஆரம்பமானது.

சத்ஜய 1,2,3 ஆகியவற்றுக்கு எதிரான சமரிலும், சமீபத்திய பரந்தன் சமரிலுமாக, புலிகளின் விபரப்படி, மொத்தம் 338 புலிகள் இதுவரை பலியாகியுள்ளனர்.

## மூன்று மாணவரைக் காணவில்லை!

படையினரால் கைது செய்யப்பட்டதாகக் கருதப்படும் யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் மூவரைக் காணவில்லை. சின்னையா சோமாஸ்கந்தன் என்னும் யாழ்-பல்கலைக் கழக மாணவர் உட்பட கலைப்பீட மாணவர்கள் இருவரும், விஞ்ஞான பீட மாணவர் ஒருவருமே காணாமல் போயுள்ளனர்.

இது தொடர்பாக யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் யாழ்ப்பாணத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. யாழிலுள்ள படை அதிகாரிகளுக்கும் இது தொடர்பாக கவனத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது.

## "11 ஆட்டிலறிகள் அழிக்கப்பட்டன"

### புலிகள் வெளியிட்டுள்ள செய்தி

பரந்தன் பகுதியில் நடைபெற்ற சமரில் தமது நோக்கம் நிறைவேறிவிட்டதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"09.01.97ல் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பெரும் தாக்குதல் நடவடிக்கை தன் இலக்கை வெற்றிகரமாக அடைந்ததும் முற்றுப்பெற்றது.

பரந்தன்- ஆனையிறவின் மத்திய பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ நிலைகள் புலிகளால் கைப்பற்றப்பட்டு தாக்கியழிக்கப்பட்டன.

அதி உயர் பாதுகாப்பைக் கொண்ட ஆட்டிலறித்தளம் மற்றும் அயுதக் கிடங்கு என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட அயுதங்கள் உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டன. கொண்டு செல்ல முடியாத ஆயுதங்கள் அழிக்கப்பட்டன.

11 நீண்ட தூர ஆட்டிலறிப் பீரங்கிகள் தகர்க்கப்பட்டன. அவற்றில் ஒன்பது ஆட்டிலறிகள் 120 மில்லி மீட்டர் ரகமானவை. ஏனைய இரண்டு ஆட்டிலறிகள் 130 மில்லி மீட்டர் ரகமானவை.

120 மில்லி மீட்டர் மோட்டர்கள் மூன்று, கலிபர் 50 ரக துப்பாக்கிகள் மூன்று உட்பட நூற்றுக்கணக்கான ஆயுதங்களும், ரவைகளும், மோட்டார் ஷெல்களும் கைப்பற்றப்பட்டன.

படையினரின் சுடுதிறனையும், பிரதான விநியோகப் பகுதியையும் தாக்குவதை நோக்கமாகக் கொண்டே தாக்குதல் நடத்தப்பட்டது.

140 புலிகள் பலியாகினர். அவர்களில் 78 பேர் பெண்புலிகளாவர். படையினர் தரப்பில் 300 பேர்வரை கொல்லப்பட்டனர். 400 பேர்வரை காயமடைந்தனர்" என்று புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை படையினர் தரப்புச் செய்தியின்படி தமது தரப்பில் 223 பேரே பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகளால் எடுத்துச் செல்லப்பட்ட 29 படையினரின் சடலங்களின் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை. அந்த உடல்களை அடையாளம் காணமுடியவில்லை என்று படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## கொலையாளி புலிகளின் பிடியில்!

(ஏறாவூர் நிருபர்)

சமீபத்தில் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்ட ஏறாவூர் முஸ்லிம் நபர் இ. வெள்ளைத்தம்பியின் கொலை தொடர்பாக கொள்ளைக்காரரான கொலையாளியைப் புலிகள் பிடித்துள்ளனர். கிரானைச் சேர்ந்த இந்நபர் தற்சமயம் புலிகளின் தீவிர விசாரணையிலுள்ளாரென்றும் இவர் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார் என்றும் புலிகள் தெரிவித்ததாகவும் அறியவருகிறது.

இந்த முஸ்லிம் நபரின் கொலைக்கும் தமக்கும் எதுவித தொடர்புமில்லை என முன்னர் மறுத்திருந்த புலிகள், கொலையாளியைக் கண்டு பிடித்துத் தண்டனை வழங்கப் போவதாகவும் தெரிவித்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே கடந்த வாரம் காத்தான்குடி ஊர் வீதியில் வைத்து ஒரு ஊர்காவல் படைவீரரை சில நபர்கள் மடக்கித் தாக்கி அவரை வாளால் வெட்டிவிட்டு அவரது துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு மறைந்துவிட்டனர். தாக்குதலுக்குள்ளான ஊர்காவல் படைவீரர் மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக 5 முஸ்லிம் நபர்களைக் காத்தான்குடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் முன்னர் புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்து பின்னர் அவ்வியக்கத்தை விட்டு விலகியவர்கள் என்று கூறப்படுகிறது.

## காட்டுப் பகுதி நடவடிக்கைகளின் எதிரொலி

### நகருக்குள் தாக்குதல் அதிகரிக்கலாம் என்று அச்சம்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் காட்டுப் பகுதிகளில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடியழிப்பு நடவடிக்கைகளின் காரணமாக படையினரின் கண்காணிப்பின் கீழ் உள்ள நகர்ப்புறங்களுக்குள் புலிகள் நுழைந்திருக்கலாம் என்ற சந்தேகத்தினால் படையினர் தமது தீவிர கவனத்தை நகர்ப்புறங்களுக்குள் இப்போது திருப்பியுள்ளனர்.

மட்டக்களப்புக்கும் காத்தான்குடிக்கும், மட்டக்களப்புக்கும் வாழைச்சேனைக்கும் இடைப்பட்ட பரந்த பகுதிகள் அடிக்கடி சுற்றிவளைப்புத் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு நகருக்குள் சைக்கிள் குண்டொன்றும் வேறு இரு பார்சல் குண்டுகளும் படையினரால் கண்டு பிடிக்கப்பட்டன. புலி இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரும் கைது செய்யப்பட்டார். இவர் கொடுத்த தகவலின்பேரிலேயே சைக்கிள் குண்டு கண்டு பிடிக்கப்பட்டது. இதன்பின்னர் மட்டக்களப்பு பெரிய பாலத்தடியில், நகர நுழைவுச் சோதனையின்போது சைக்கிள்கள் தீவிரமாகத் தட்டிச் சோதிக்கப்படுகின்றன. சைக்கிள் 'பார்'களில் சுற்றப்பட்டிருக்கும் இறப்பர் வயர்கள் படையினரால் அறுத்தெறியப்படுகின்றன.

தற்சமயம் நகருக்குள்ளும், தமது கண்காணிப்பின் கீழுள்ள இதர பகுதிகளிலும் பாதுகாப்புப் படையினரின் கவனம் தீவிரமாகியுள்ளது.



படிப்பகம்

# பெயர்ப் பலகைகளில் தமிழ் மறைவு
## கண்டியில் தமிழ் பேசும் மக்கள் கவலை!

(கண்டி நிருபர்)

கண்டி சித்தி லெப்பை மாவத்தைக் குச் செல்லும் பெயர்ப் பலகையில் காணப்படும் எழுத்துக்கள் கறுப்பு மையி னால் எழுதப்படாமல் வெறுமனே வெண் ணிறமாக விடப்பட்டிருப்பதால் தமிழ் பேசும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அறிஞர் சித்திலெப்பை கண்டி மாநகர சபையின் உறுப்பினராக இருந்து வழக்கறிஞர் தொழிலையும் மேற்கொண்டு தமிழ்ப்பணி புரிந்த மேதை. இவரது பெயரைக் கொண்டு அவர் வாழ்ந்த வீட்டுக்குச் செல்லும் வீதியை 'சித்தி லெப்பை மாவத்தை' எனப் பெயரிட வேண்டுமென முன்னாள் மாநகர சபை உறுப்பினர் ஜனாப் ஐ.குத்தூஸ் கொண்டு வந்த தீர்மானத்திற்கு இசையவே அறிஞ ரின் பெயர் (பழைய மாத்தளை வீதி) அவ்வீதிக்குச் சூட்டப்பட்டது.

நீண்ட காலமாக மும் மொழிகளிலும் வீதிப்பெயர் இடம் பெற்றிருந்தது. பின்னர் பெயர்பலகையில் சிங்களமும் ஆங்கிலமும் மாத்திரமே இடம் பெற்றதுடன் தமிழ் எழுத் துக்கள் அதிலிருந்தும் அகற்றப்பட்டன. இப்பொழுது வெண்ணிற சுண்ணாம்பு பூசப்பட்ட பெயர்ப்பலகை மாத்திரமே அங்கு காணக் கூடியதாக இருக்கின்றது.

கண்டி நகரில் உள்ள வீதிகளின் பெயர்ப் பலகைகளில் அண்மைக்காலமாக தமிழ் எழுத்துக்கள் அகற்றப்பட்டுவருவதும் அறிஞர் சித்திலெப்பையின் பெயர் முழுமை யாகவே பார்வைக்கு இல்லாமல் வெண்ணிற சுண்ணாம்பு பூசப்பட்டிருப்பதும் தமிழ் பேசும் மக்கள் மீது காட்டப்படும் இனக் குரோதமா என பலரும் முரசு நிருபரிடம் கேட்க விழைந்தனர்.

ஏற்கனவே சில வருடங்களுக்கு முன்னர் கண்டி மாநகர சபை உறுப்பினர் கேட் முதலியார் கனகநாயகம், திரு குருசுவாமி ஆகியோரின் பெயர்களைச் சூட்டுவதற்கும் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை மாநகர சபை தட்டிக் கழித்துவிட்டது. அதனையும் நினைவு கூரும் அவர்கள், அறிஞர் சித்தி லெப்பை மாவத்தையின் பெயரையும் அப் படியே எடுத்துவிடவும் கருதியிருக்கும் ஒரு பின்னணியாகவே பெயர்ப்பலகை, வெறு மனே சுண்ணாம்பு பூசப்பட்டிருப்பதும் குறித்து கவலை தெரிவிக்கப்படுகின்றனர்.

# யானைப் பசிக்கு சோளப் பொரி!
## 5 மாதங்களுக்கே ஊக்குவிப்புப் படி!

(மன்னார் மாவட்ட நிருபர்)

வன்முறைப் பிரதேசத்தில் கடமைபுரியும் அரச ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்குவதில் வட-கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட இழுபறி இன்னமும் முடிவுக்கு வரவில்லை.

1995 ஏப்ரல் தொடக்கம் வழங்க வேண்டிய இக்கொடுப்பனவு மன்னார் மாவட்டத்துக்கு 1996ஆம் ஆண்டுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. இதில் ஆசிரியர்கள், இ.போ.ச ஊழியர் போன் றோருக்கு கடந்த 07.01.97வரை ஒரு சதமேனும் வழங்கப்படவில்லை.

எனினும் கடந்த மாதம் கிடைத்த தகவலின்படி, மன்னார் மாவட்ட ஆசிரியர் களுக்கு இறுதி மூன்று மாதங்களுக்கு மட்டும் இதனை வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளதாகவும், அதன்படி சம்பந்தப் பட்டவர்களுக்கு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிய வந்தது.

இதேவேளை கடந்த 06.01.97 அன்று மாவட்ட கல்வித் திணைக்களத்திற்குக் கிடைத்த தொலைபேசி தகவலையடுத்து மேலும் இரு மாதங்களுக்கு இக்கொடுப் பனவு வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே 3 மாதங்களுக்கான கொடுப்பனவு வழங்க சகல ஆயத்தங்களும் நடைபெற்று முடிந்த பின் புதிய பணிப்புரை கிடைத்துள்ளதால் சில தாமதங்கள் ஏற்படுமென, இதனை வழங்கும் பொறுப்பு உத்தியோகத்தர் அலுத்துக் கொண்டதாகத் தெரியவரு கிறது.

ஐந்துமாதக் கொடுப்பனவு தொடர் பாக, இலங்கை தமிழர் ஆசிரியர்சங்க மாவட்ட செயலாளரும், மன்னார் மாவட்ட அரச கூட்டுத்தாபன நியதிச் சபை ஊழியர் தொழிற்சங்கங்களின் ஒன்றியத் தலைவரு மான திரு.எஸ்.எஸ்.லெம்பேட் ஜே.பி. தகவல் தருகையில், 12 மாதங்களுக்கான கொடுப்பனவு கிடைக்கும் வரை எமது தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என்று தெரிவித்தார்.

# காரைதீவில் ஆடு-புலி ஆட்டம்

(காரைதீவு நிருபர்)

விஷேட அதிரடிப்படை உதவி கொம டோர் திரு.உபாலி சகபந்து அண்மையில் தற்கொலைத்தாக்குதலில் கொல்லப்பட்டமை தெரிந்ததே. அதன் பிறகு கல்முனை-அம்பாறை வீதியிலுள்ள காரைதீவு எஸ்.ரி.எஃப்.முகாமிற்கு சற்றுமுன்பதாக சோதனைச் சாவடி ஏற்படுத்தப்பட்டு தீவிர சோதனை நடாத்தப்பட்டு வருகிறது.

இதேவேளை அம்பாறை புறநகர்ப் பகுதியிலுள்ள முகாம்கள் வாபஸ் பெறப் பட்டுள்ளன. அடிக்கடி பாண்டிருப்பு, அக்கரைப்பற்று தமிழ்ப்பிரிவுகள் சுற்றி வளைப்புக்குள்ளாகின்றன. இருப்பினும் முன்னரைவிட புலிகளின் நடமாட்டமும் சற்றுக் கூடுதலாகவே காணப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள புலிகளின் பிரதான தளம் கஞ்சிகுடிச்சாறு. தற்போது இராணுவம் அந்தப்பக்கமே தலைவைத்துப் படுப்பதில்லை. திருக்கோயில், கோமாரி போன்ற பகுதிகளில் "ஆடுபுலி ஆட்டம்" நடப்பதாக தகவல். படைமுகாமிற்கு ஒரு மைலுக்கு அப்பால் நின்று போரிட வருமாறு அழைப்புக்கொடுக்கிறார்களாம் புலிகள். "நமக்கேன் வம்பு" என்றுகூறி படைகள் அழைப்பை நிராகரிப்பதாகச் செய்தி.

திருக்கோவில் பிரதேசத்திற்கு உணவுப் பொருட்கள் கொண்டுசெல்வதில் பொது மக்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக் கிறது. அங்குள்ள ஊர்க்கடைகளும் மெயின் வீதிக்கு வரவேண்டும்! ஓடர் இது! ஆனால் இவை புலிகளைக் கட்டுப்படுத்தியதாக இல்லை. தாராளமான உணவுகள் அவர் களிடம் உண்டாம்.

# இ.போ.ச. டிப்போக்களுக்கிடையில் சர்ச்சை!
## கொளுத்தும் வெய்யிலில் பயணிகள் தவிப்பு

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டப் பயணிகளுக் குப் பெரியதொரு பயண நெருக்கடி நீண்டகாலமாக இருந்து வருகிறது. ஒழுங் கற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் போக்குவரத்துச் சேவையும், மட்டக்களப்பு வாழைச்சேனை ஆகிய இ.போ.ச. டிப் போக்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள சர்ச் சையுமே இந்தச் சீர்கேட்டுக்குக் காரண மாகும். இந்த இரு டிப்போக்களும் பயணிகளை அதிகம் ஏற்றி ஒன்றை யொன்று வசூலில் அதிகம் முந்திக் கொள்ள வேண்டும் என்று நினைப்பதால் பயணிகளின் நலன்களை மறந்துவிடு கின்றன. இதனால் மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்தில் அடிக்கடி குழப்பநிலை ஏற்படுகிறது.

வாழைச்சேனை டிப்போ பஸ்களும், மட்டக்களப்பு டிப்போ பஸ்களும் மட்டக் களப்பு பிரதான பஸ் நிலையத்தில் பயணத்திற்காக நிறுத்தப்படுகின்றன. இவ் வேளையில் இரு பஸ்களும் ஒரே ஊருக் குப் புறப்படுவதாக இருந்தால், மட்டக் களப்பு டிப்போக்காரர்கள் வாழைச் சேனை டிப்போ பஸ்ஸில் பயணிகளை ஏறவேண்டாம் என்று தடுக்கின்றனர்.

மனிதாபிமானமற்ற முறையில்- கொளுத்தும் வெய்யிலில் வேறு பஸ் களிலும் செல்லவிடாது தாமும் பயணி களின் தேவைக்கேற்ப பஸ்சேவைகளை நடத்தாது முறையற்ற விதத்தில் நடந்து கொள்வது நியாயமானதா என்று பயணிகள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க, ஒரு டிப்போவி னால் வழங்கப்பட்டுள்ள பருவகாலச் சீட்டுக் களைக் (சீசன் டிக்கட்) கொண்டு மற்ற டிப்போ பஸ்ஸில் மாணவர்கள் ஏறும்போது நடத்துநர்கள் திட்டித்தீர்க்கிறார்களாம்.

சிங்களப் பகுதிகளிலுள்ள தனியார் பஸ் சேவையினரும், இ.போ.சபையினரும் இணைந்து நேர அடிப்படையில் மக்களுக்குச் சிறப்பான சேவையாற்றி வருகின்றதை இப் பகுதியிலுள்ள இ.போ.ச. டிப்போக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். பொலன்ன றுவை, கண்டி டிப்போக்கள் இவ்விதமே இணைந்து சேவையாற்றுகின்றன. தமது உள் முரண்பாடுகளில் பயணிகளைச் சிக்க வைப்பது கண்டிக்கப்பட வேண்டியது என்று மக்கள் தெரிவிக்கிறார்கள்.

# புதிய ஆசிரியர்கள் நியமனம்

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் இயங்கும் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளுக்கு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 321 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

மத்திய மாகாண கல்வி அமைச்சு இவர்களுக்கான நியமனங்களை கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களில் கடந்த வாரம் நேரடியாக வழங்கியது.

கல்விச் சேவைகள்சபை, மாகாணசபை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்த பெயர்ப்பட்டியலின் கீழ் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியர் தெரிவுக்காக இடம்பெற்ற போட்டி எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப் படையில் இவர்கள் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நியமனங்களைப் பெற்றுள்ளனர்.

தோட்டப் பாடசாலைகளுக்கு 253 பேரும் ஏனைய தமிழ்- முஸ்லிம் பாடசாலைகளுக்கு 68 பேரும் இவ்வாறு நியமனங்களைப் பெற்றுள்ளனர். 68 பேரில் முஸ்லிம்கள் 50 பேர். ஏனையோர் தமிழர். 253 பேரில் 5 முஸ்லிம்கள். ஏனையோர் இந்திய வம்சாவளியினர்.

# முஸ்லிம் மாணவர்களுக்கு தனிப்பாடசாலை!
## மாகாண சபையில் கோரிக்கை

"மத்திய மாகாணத்தின் தலைநகரான கண்டியில் முஸ்லிம் ஆண் மாணவர்களுக் கான பாடசாலை ஒன்று அமைக்கப்பட வேண்டும்!" இவ்வாறு மத்திய மாகாண சபைக் கூட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் இலாஹி ஆப்டின் குரல் எழுப்பியுள்ளார். அப்போது ஆளும்கட்சி முஸ்லிம் உறுப்பினர் கள் மௌனம் சாதித்தனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

"முஸ்லிம் பாடசாலை விவகாரம் எழுப் பப்படும்போது அது இனவாதமாகவே நோக்கப்படுகிறது. முஸ்லிம் பாடசாலை களின் நலன்களைக் கவனிக்க மத்திய மாகாண சபையில் முஸ்லிம் அமைச்சு ஒன்றை உருவாக்கி, ஆண்டுதோறும் 20 இலட்சம் ரூபா ஒதுக்கப்படுகிறது. முஸ்லிம் பாடசாலைக் கோரிக்கை இனவாதமாக இருந்தால் முஸ்லிம் அமைச்சு ஒன்றே இச்சபைக்குத் தேவைப்படாது.

கண்டி சித்திலெப்பை மகாவித்தியாலய மாடிக் கட்டிடம் இடிந்துவிழும் நிலையில் இருக்கிறது. முஸ்லிம் கல்வி அமைச்சு இதனைக் கவனிக்க முடியாது போனால் அமைச்சர் தொடர்ந்தும் பதவியில் இருப் பதில் அர்த்தமில்லை," என்று தெரிவித்தார்.


## மனோதத்துவ வைத்தியம்
### (GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்த, கனவில் சக்தியிழந்த, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களில் சந்திக்கவும்.

ஜனவரி 19 முதல் 31 வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO:10. RECLAMATION ROAD. (ENTRANCE BANKSHALL ST.. Opposite Ranjanas) COLOMBO 11. T.P. 436383, 436390, 078-71101 பெப்ரவரி 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஓட்டமாவடியிலும், பெப்ரவரி 8, 9, 10 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR.P.ARUMUGAM** No: 33, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD. BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

## தேவை

ஜுகி மெசின் ஒப்பரேட்டர் தேவை. குறைந்தது இரண்டு வருட அனுபவமுடையவர். தூர இடங்களிலிருந்து வருபவர் களுக்கு இலவச தங்குமிட வசதி செய்து தரப்படும். சம்பளம் ரூபா **3350/=**ற்கு மேல் கொடுக்கப்படும். மேலும் பல சலுகைகள் உண்டு. அம்பாறை மாவட்டம் போன்ற தூர இடங்களிலிருந்து வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் சகல ஆவணங்களுடன் நேரில் வரவும்

முகவரி:-

**SAPPHIRE GARMENTS (PVT) LTD**
**NO: 225/11 SRI SANGARAJA MAWATHA COLOMBO - 10.**
(CROWN பட மாளிகை அருகே)

## RAJA VAJEEKARANA (Rasayana) LEGIUM
## ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்



**(முஸ்லீம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக் கப்பட்டது.)**

சலாமிசிரி, பதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுணை யானது.

ஸ்திரீ புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி சுறுசுறுப்பையும் தேக காந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும். மூலச்சூட்டைப் போக்கும். இருமல் மார்பு இடுப்புவலி, கால் கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும், சிறுவர் சிறுமியருக்கும் சிறந்தது.

நாள்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

**500 gram 225/=** **250 gram 115/=**

வி.பி.பி ஆடர்கள் கவனிக்கப்படும்.

**Ayur Dr. K. Sivasubramaniam**
**முருகானந்தா வைத்தியசாலை**

G/ 02, கொழும்பு மத்திய சுப்பர் மார்கெட் மீன்கடை மேல (நிலமாடி) கொழும்பு - 11.

## ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
*187, செட்டியார் தெரு, கொழும்பு 11,*
*போன்: 421398*

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06
*T.P: 586218, 078-63611*
*Fax: 503030*



33 வருடமாக நற்பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது எமது நிறுவனம். வாடிக்கையாளர்களிடம் அவர்களது குறைகளைக் கண்ட மாத்திரமே எடுத்துக்கூறி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே செயல்படுகிறோம்.

**மலையாள மாந்திரீகம்**

எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம். காலை 09 மணி முதல் மாலை 6 மணி வரை.

தொடர்புகளுக்கு:-
**P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.**
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD
KOTAHENA, COLOMBO-13
தொலைபேசி வரிசைகள்:
342463-344631-344832-431137-07841571
பக்ஸ் இல-342464
பேஜர் சென்டர் இல- 588407
தொடர்பு கொண்டு இல- 972 இனைக் கேட்கவும்.

வெளிநாட்டில் உள்ளவர்கள்
**COMPUTER INTERNET. NO.....**
**E/MAIL/SAMY 1.2 @ SLT.LK,**
**WWW LGO SLT.LK.**

நேரில் சந்திக்க-
காலை 9 முதல் 12 வரை
மாலை 3 முதல் 6.30 வரை
அப்பாயின்ட்மெண்ட் பெற்று வரவும்.
வெள்ளிக்கிழமை விடுமுறை.

## இதோ ஓர் சிறப்பான சந்தர்ப்பம்!
## புத்தளத்தில் கம்பியூட்டர் பாடநெறி

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற **ACS,BCS** மற்றும் அரசால் நடாத்தப்படும் கம்பியூட்டர் பாடநெறிகளுக்கு ஓர் ஆரம்பப்படியாக அமைகின்றது.
- கட்டணம் ரூ.**2950/=** மட்டுமே.
(ஸ்கொலசிப் மற்றும் தவணைக் கட்டண வசதிகள் உள்ளன)
- தமிழ்மொழி மூலம் விரிவுரைகள்.
- **16** வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும்.
வயதுவந்தவர்களுக்கு விசேஷ வகுப்பு ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளன.
- இலவசப் பாடநெறிக்குப் போட்டிப் பரீட்சை மூலம் விண்ணப்ப தாரர்கள் தெரிவு செய்யப்படுவர். (பதிவுக் கட்டணம் ரூ.**100/=**)
- விண்ணப்ப முடிவு திகதி- **25 - ஜனவரி, 1997.**

**MICS**
**NO-9, 19TH LANE, COLOMBO-03.**
**BRANCH: NO-36, 2nd CROSS STREET, PUTTALAM.** T.P: 456370

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இருமுனைத் தாக்குதல் அழித்தொழிப்பு யுத்தம்

நாரதர்

**9.1.97** ஒரு விபரீதத்துக்கான வியாழக்கிழமையின் அதிகாலை மூன்று மணி. அமாவாசைக்கால பின்னிரவு என்பதால் இருள் போர்வையாக விரிந்திருக்க, மார்கழிக் குளிர் பூமியை ஈரப்படுத்திக் கொண்டிருந்தது.

பரந்தனில் இருந்து கிளிநொச்சிவரை நீண்ட நிலப்பரப்பில் சுமார் பத்துகிலோ மீற்றர் தூரம் நிலைகொண்டிருந்த படையினருடன் காவல் நிலைகள் அமைதியாக இருந்தன.

புயலுக்கு முந்திய அமைதிதான் அது என்பது படையினருக்குத் தெரியாவிட்டாலும், பரந்தனின் கிழக்கில் இருந்தும், மேற்குப் பக்கம் இருந்தும் முன்னேறிக் கொண்டிருந்த புலிகளின் அணியினருக்குத் தெரிந்தே இருந்தது.

கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேர் கொண்ட புலிகளின் அணிகள் ஊடுருவி அழித்தொழிக்கும் தாக்குதல் ஒன்றுக்காக முன்னேறிச் சென்றன.

தாக்குதல் இரண்டு கட்டமாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

முன்னரங்க காவல் அரண்களைத் தாக்கிக் கைப்பற்றுவது முதல் கட்டம்.

காவலரண்களைத் தாக்கி உள்ளே ஊடுருவும் வழி திறக்கப்பட்டதும், புலிகளின் அதிரடித் தாக்குதல் படையினர் மின்னல் வேகத்தில் உட்பிரவேசித்து தாக்குதலைத் தொடர்வது இரண்டாவது கட்டம்.

ஆனையிறவுக்கும் கிளிநொச்சி நகருக்கும் இடைப்பட்ட மத்திய பகுதி பரந்தன் சந்தி. ஆனையிறவு பிரதான தளத்தில் இருந்து கிளிநொச்சி நகர் வரை இராணுவ வேலியாக படையினர் நீண்டு நிலை கொண்டிருக்கின்றனர். அவ்வாறு நிலைகொண்டுள்ள படையினருக்கு இதயம் போன்றது பரந்தன்.

பரந்தன் சந்திக்கு முரசுமோட்டை ஊாக ஒரு பாதையும், பெரிய பரந்தன் குமாரபுரம் வழியாக இன்னொரு பாதையும் செல்கின்றன.

சத்ஜய மூன்றாம் கட்ட நடவடிக்கையின்போது முரசு மோட்டை ஊடாகவும், குஞ்சுப் பரந்தன் ஊடாகவும் ஊடுருவி புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதாவது பரந்தனின் கிழக்குத் திசையில் இருந்தும், மேற்குத் திசையில் இருந்தும் புலிகள் ஊடுருவித் தாக்கியிருந்தனர்.

பரந்தன் முன்னரங்க நிலையிலிருந்து கிளிநொச்சி நகர் நோக்கி முன்னேறிய படைகள் மீதே புலிகள் அப்போது தாக்கினார்கள்.

இம்முறையும் பரந்தனின் கிழக்குப் புறமாக இருந்தும், மேற்குப் புறமாக இருந்துமே புலிகளின் அணிகள் தாக்குதலை ஆரம்பித்தன.

பரந்தனின் மேற்குப் புறமாக பெரிய பரந்தன் பகுதியூடாக புலிகளின் அணியொன்று தாக்குதல் நடத்திக்கொண்டிருக்க, பிரதான தாக்குதல் அணிகள் கிழக்கில் முரசுமோட்டையில் இருந்து பாரிய தாக்குதலை தொடுத்தபடி ஊடறுத்துப் பாய்ந்தன.

அதனால் படையினரின் கவனம் ஒரு திசையில் குவிய முடியாமல் போனது. மேற்குப்புறத் தாக்குதல் பாரியளவில் இல்லையென்றாலும், படையினரின் கவனத்தை திசை திருப்பியது.

முரசு மோட்டைப் பகுதியில் இருந்து தாக்குதல் தொடுத்த அணிகள் முன்னரங்க காவலரண்களை தகர்த்து பாதையைத் திறக்க, புலிகளின் அதிரடிப் படையணி உள்ளே ஊடறுத்துச் சென்று பிரதான இலக்குகளைத் தாக்கத் தொடங்கியது.

முன்கூட்டியே வேவு நடவடிக்கைகள் மூலமாகப் பெறப்பட்ட துல்லியமான தகவல்கள் புலிகளின் கையில் இருந்தன.

அதனால் முக்கியமான முன்னரங்க நிலைகள், ஆட்டிலறித் தளங்கள் போன்றவற்றை துரிதகதியில் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது. இருள் சூழ்ந்த நேரத்தில் துல்லியமான நகர்வுகளை மேற்கொள்ள வேண்டுமானால் வேவுத் தகவல்கள் பிரதானமானவையாகும்.

படையினருக்கு புலிகளின் நகர்வுகள் தெரியவில்லை. அதனால் புலிகளின் நகர்வுகளை அவதானித்து பதில் தாக்குதலில் ஈடுபட முடியவில்லை.

காவலரண்களை நோக்கி ஆர்.பி.ஜி. லோஞ்சரால் தாக்குவது. காவலரணுக்குள் விழுந்து ரொக்கட் லோஞ்சர் வெடித்ததும் அதையடுத்து சில விநாடிகள் காவலரணுக்குள் உள்ள படையினர் எதுவும் செய்ய முடியாது. மீண்டும் அவர்கள் தாக்கத் தொடங்க தேவைப்படும் சில விநாடிகளுக்குள் காவலரண் நோக்கி புலிகள் பாய்ந்து சென்றுவிடுவர். புலிகளின் வழக்கமான தந்திரம் அதுதான்.

அதே தந்திரத்தை பரந்தன் கிளிநொச்சி காவலரண்களைத் தாக்கவும், ஆட்டிலறித் தளங்களைக் கைப்பற்றவும் புலிகள் பயன்படுத்தி இருக்கலாம்.

கரும்புலிகள் யாரும் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக புலிகள் இதுவரை அறிவிக்கவில்லை. அதனால் ஆட்டிலறித் தளங்களுக்குள் கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்க முடியாது.

தாக்குதல் ஆரம்பித்த சில மணி நேரங்களுக்குள் பரந்தன் பகுதியில் இருந்த முக்கிய விநியோக மையங்களும், ஆட்டிலறித் தளங்களும் புலிகளின் கையில் வீழ்ந்தன.

ஆனையிறவு பிரதான தளத்துக்கும் பரந்தனுக்கும் இடையிலான இராணுவ வேலி பிளந்தது. அதனால் ஆனையிறவு தளத்தில் இருந்து படையினர் உதவிக்கு விரைய முடியவில்லை.

தொலைத் தொடர்புகளும் முற்றாக ஸ்தம்பிக்கச் செய்யப்பட்டதால், ஆனையிறவு தளத்தில் இருந்த படையினரால் பரந்தனில் நடப்பதை அறிய முடியவில்லை. ஆனையிறவுத் தளம் நோக்கியும் புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தினார்கள்.

அதேவேளை பரந்தனில் உள்ள முக்கிய நிலைகளை புலிகள் கைப்பற்றிய போதும், கிளிநொச்சி நகரில் இருந்த படையினரின் உதவியுடன் பரந்தனில் நிலை கொண்டிருந்த ஒரு பகுதி படையினர் இணைந்து பதிலடிகளில் ஈடுபட்டனர்.

விமானப்படை விமானங்களும் காலை முதல் உதவிக்கு விரைந்தன.

கிளிநொச்சி நகரில் இருந்தும் ஆனையிறவு தளத்தில் இருந்தும் படையினர் பரந்தன் மையப்பகுதி நோக்கி முன்னேற ஆரம்பித்தனர்.

முன்னேறும் படைகளைத் தாமதப்படுத்திக் கொண்டு; கொண்டு செல்ல முடியாத ஆயுதங்களையும், காவலரண்களையும் நாசம் செய்யும் நடவடிக்கையில் புலிகளின் அணிகள் ஈடுபட்டன.

ஆட்டிலறிகளை கொண்டு செல்ல முடியாத நிலையில் அவற்றை தகர்த்தனர்.

எங்கும் தீப்பிழம்புகள் தோன்றிக் கொண்டிருந்தன. கிட்டத்தட்ட பரந்தனில் இருந்து ஐந்து ஆறு கிலோமீற்றர் பகுதிகள் புலிகளின் தற்காலிக கட்டுப்பாட்டில் இருந்தன.

ஊடுவித் தாக்குவதைவிட களத்தில் இருந்து திரும்புவதுதான் ஆபத்தானது. விமானப்படை விமானங்கள் சுலபமாக இனம் கண்டு தாக்கிவிடும்.

பெருந்தொகையான உறுப்பினர்கள் களத்தில் இறக்கப்பட்டதால், அதிக இழப்புக்கள் இல்லாமல் அணிகளைத் திரும்பப் பெறுவதுதான் புலிகளின் முக்கிய நோக்கமாக இருந்தது.

அதனால்தான் ஆட்டிலறிப் பீரங்கிகளை கட்டி இழுத்து கால தாமதப்பட்டுக்கொண்டிருக்காமல் அழித்துவிட்டு பின்வாங்கினார்கள்.

ஆட்டிலறிப் பீரங்கிகள் எதனையும் புலிகள் கைப்பற்றவில்லை, 120 எம்.எம். மோட்டார் மூன்றும், 50 கலிபர் துப்பாக்கிகள் மூன்றுமே புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் பாரியவையாகும். தானியங்கி துப்பாக்கிகள் நூற்றுக்கணக்கானவையும் ரவைகளும் தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் முல்லைத்தீவில் கைப்பற்றிய ஆட்டிலறிகளால் புலிகள் தாக்கியதாக வெளியான செய்திகளும் மிகைப்படுத்தல் தான்.

ஆட்டிலறிகளை கொண்டு சென்று சண்டையிடக் கூடிய களமாக அது அமையவில்லை. ஆட்டிலறிகளை கொண்டுவந்து தாக்க முடியுமானல், கைப்பற்றிய ஆட்டிலறிகளில் சிலவற்றையாவது புலிகள் கொண்டு செல்லவும் முடிந்திருக்கும்.

பரந்தனில் நடைபெற்றது அழித்தொழிப்பு யுத்தம். ஆனால் தாக்குதல் கெரில்லாப் பாணியில்தான் மேற்கொள்ளப்பட்டது.

ஊடுருவும் அதிரடித் தாக்குதல்களில் ஆர்.பி.ஜி ரொக்கட் லோஞ்சர்கள், மோட்டார்கள் மற்றும் இலகுவாக தூக்கிக் கொண்டு நகரக்கூடிய ஆயுதங்களே பயன்படுத்தப்படும்.

வேகமாக முன்னேறவும், துரிதமாக இழப்பின்றிப் பின்வாங்கவும் இலகுவான ஆயுதங்களே வசதியாக இருக்கும்.

மேலும் சண்டைக் களத்தில் புலிகளும் உள்ளே இருக்கும்போது வெளியில் இருந்து கூட ஆட்டிலறித் தாக்குதல் நடத்த முடியாது. நடத்தினால் புலிகளும் பலியாக வேண்டியதாகிவிடும்.

ஆனையிறவுத் தளம் நோக்கியும், கிளிநொச்சி நகர் நோக்கியும் மோட்டார் ஷெல் தாக்குதல் மட்டுமே புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

> **முல்லைத்தீவுக்குப் பின்னர் புலிகள் நடத்தியுள்ள அழித்தொழிப்பு யுத்தம்! நீண்ட நிலப்பரப்புக்களை கைப்பற்றி நிலைகொள்ளும் படையினருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல். 97இல் புலிகள் கண்ட முதற்களம்!**

மூன்றுவகையான யுத்தங்கள் உள்ளன. 1. தற்காப்பு யுத்தம். 2. தாக்குதல் யுத்தம். 3. அழித்தொழிப்பு யுத்தம்.

முல்லைத்தீவுக்கு அடுத்தாக புலிகள் திட்டமிட்டு நடத்திய அழித்தொழிப்பு யுத்தம் இதுதான்.

ஆனால் முல்லைத்தீவில் பலியான படையினரின் எண்ணிக்கையும், கைப்பற்றிய ஆயுதங்களின் தொகையும் அதிகம்.

பரந்தனில் நடைபெற்ற சண்டையில் புலிகளின் நோக்கம் பெருமளவான படையினரை அழிப்பதாகவே இருந்தது.

பரந்தனில் இருந்து கிளிநொச்சி வரையான கிட்டத்தட்ட 10 கிலோ மீற்றர் தூரம்வரை குறைந்தது மூவாயிரம் படையினராவது இருந்திருக்கலாம்.

அதில் பாதிப்பேரையாவது பொறிக்குள் வீழ்த்துவது என்பதுதான் புலிகளின் நோக்கம்.

படையினர் தரப்பிலும் பலத்த எதிர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் புலிகளின் முழு நோக்கமும் நிறைவேறவில்லை.

ஆயுதங்களை அழித்தொழிப்பதைவிட கைப்பற்றுவதே நிரந்தர லாபம். ஆயினும் ஆயுதங்களை முழுதாக கொண்டு செல்லக்கூடியதாக கள நிலவரமும் அமையவில்லை.

ஆட்டிலறிகளை புலிகள் கொண்டு செல்ல விடாமல் தடுத்ததில் விமானப்படையினருக்குத்தான் பெரும் பங்கு இருக்கிறது. வான் மூலத் தாக்குதல் இல்லையென்றால் ஆட்டிலறிகளை புலிகள் நகர்த்திச் சென்றிருப்பர்.

ஆட்டிலறிகள் அத்தனையும் புலிகளின் கைகளில் சென்றிருந்தால் படையினரின் நிலை பெரும்பாடாகி இருக்கும்.

அழித்தொழிப்பு யுத்தம் என்ற ரீதியில் பார்க்கும்போது பரந்தன் சமர் புலிகளுக்கு வெற்றிதான்.

ஆயினும் புலிகள் தரப்பில் 140 பேர் பலியாகி இருப்பதும், நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்திருப்பதும் புலிகளுக்கும் தாக்கமுள்ள இழப்புத்தான்.

புலிகளால் பெருந்தொகையான ஆயுதங்கள் அழிக்கப்பட்டாலும்கூட, மீண்டும் அவற்றைப் பெறுவது அரசாங்கத்திற்கு சிரமமான காரியமல்ல.

எனவே ஆயுத அழிப்பு மூலம் அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தியிருப்பதாக கருதலாமே தவிர, படையினரின் படைக்கல பலத்தில் நிரந்தர வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டதாக கூற முடியாது.

ஆனால் படையினர் தரப்பில் 223 படையினர் (அரச தகவல்படி) பலியாகி இருப்பது படையினருக்கு உளவியல் ரீதியிலும், ஆட்பல ரீதியிலும் தாக்கம் ஏற்படுத்தும் விடயம்தான்.

ஆனால் நாடெங்கும் படையினரின் மொத்த ஆட்பலத்தையும், புலிகளின் மொத்த ஆட்பலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், புலிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பும் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை சம தாக்கமுடையதுதான்.

ஆயினும் யுத்த தந்திர ரீதியில் பல முக்கிய நோக்கங்களை முன்வைத்தே பிரபாகரன் இத் தாக்குதலை நடத்தியிருக்கிறார்.

புலிகளின் வன்னித் தளத்திற்குள் மூக்கை நீட்டிக் கொண்டிருப்பதுபோலவே கிளிநொச்சி நகரில் படைகள் நிலை கொண்டுள்ளன.

நீண்ட நிலப்பரப்பில் நிலைகொண்டிருப்பது சுலபம் என்று கருதினால் படையினர் மேலும் முன்னேறி செல்ல முனையலாம்.

வன்னித் தளத்தை கைப்பற்றும் திட்டங்களையும் விரைவுபடுத்தலாம். எனவே நீண்ட நிலப்பரப்புக்களில் நிலை கொண்டிருப்பது எத்தகைய ஆபத்தானது என்பதை படையினருக்கு உணர்த்துவதும் புலிகளின் தாக்குதலின் நோக்கம்.

'படையினர் யுத்தத்தை ஆரம்பிக்க முன்னர் அவர்களை தேடிச் சென்று நாம் யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும்' என்பதே பிரபாகரனின் நீண்டகால தந்திரோபாயமாக இருக்கிறது.

இந்த ஆண்டு வன்னியில் படையினர் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகலாம் என்று கருதப்படுவதால், அவர்கள் கோட்டைக்குள்ளேயே புகுந்து அதிர்ச்சி கொடுப்பதும் பிரபாகரனின் திட்டம்.

**நீண்ட நிலப்பரப்புக்களை கைப்பற்றுவது படைபலம் பெருமளவாக உள்ள படையினருக்கு சாத்தியம்தான். ஆனால் கெரில்லாக்களின் திடீர் பாய்ச்சல்களில் இருந்து அவற்றைப் பாதுகாப்பது சுலபமானதல்ல.**

கிழக்கில் ரிவிஜய மூலம் படையினர் 97ல் கால்வைத்தனர். ஆனால் ரிவிஜயவில் படையினர் முன்னேறிக் கொண்டிருக்க, அங்கிருந்து ஒரு படை அணியை வடக்குக்கு அழைத்தார் பிரபாகரன்.

கிழக்கில் புலிகளை படையினர் தேடிக் கொண்டிருக்க, அங்கிருந்து சென்ற படையணிகள் பரந்தன் சமரில் குதித்தன.


97ம் ஆண்டுக்கான தாக்குதலை புலிகள் வடக்கில் இருந்து தொடங்கிவைத்துள்ளனர்.

140 புலிகளை இழந்தபோதும், புலிகளின் அணிகள் உற்சாகம் பெறத்தக்க தாக்குதலாக அது அமைந்துள்ளது.

அதேநேரம் நீண்ட நிலப்பரப்புக்களை கைப்பற்றி நிலைகொள்ளும் படையினரின் தந்திரோபாயம் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

புலிகளின் தாக்குதலை முறியடித்து விட்டதாக படைத்தரப்பு கூறுகிறது. ஆனால் புலிகளின் நோக்கம் ஊடுருவித் தாக்கி அழித்துவிட்டு திரும்புவதுதான்.

கைப்பற்றிய பகுதிகளில் நின்று புகைப் படம் எடுத்துக் கொண்டுள்ளனர் புலிகள்.




ஆட்டிலறிகளை தாம் அழித்ததாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. ஆனால் ஆட்டிலறிகளின் அருகே நின்று எடுத்துக் கொண்ட புகைப்படங்களையும், அவற்றை அழிக்கும் காட்சிகளைக் கொண்ட புகைப் படங்கள் மற்றும் வீடியோ காட்சிகளை பதிவு செய்துள்ளதாக புலிகள் கூறியுள்ளனர்.

யுத்த வெற்றியை மையமாக வைத்து இந்த ஆண்டில் அரசாங்கம் போட்டிருந்த அரசியல் வியூகங்களுக்கும் பரந்தன் சமர் முதலடியாக அமைந்துள்ளது.

ஆனால் அரசாங்கம் தனது பின்னடைவை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. அடுத்த பெரும் தாக்குதல் ஒன்றுக்கு அரசாங்கம் தயாராகக் கூடும். அந்த நடவடிக்கையில் அரசாங்கம் வெற்றியும் பெறக்கூடும். ஆனால் அந்த வெற்றியை தக்கவைத்துக் கொள்ள புலிகள் அனுமதிப்பார்களா?

புலிகளை முற்றாக ஓரம்கட்டிவிட்டு, இலங்கையில் சமாதானத்தை தோற்றுவிக்கலாம் என்று அரசாங்கம் கூறுவதை உலகம் அவ நம்பிக்கையோடு நோக்கத் தொடங்கிவிட்டது.

ஏனெனில், முன்னைய காலங்களை விட கெரில்லா தாக்குதல் உத்திகளிலும், பலத்திலும் புலிகள் வளர்ந்து கொண்டு இருக்கிறார்கள். அதனால் கைப்பற்றிய நிலப்பரப்புக்களின் அளவீடுகளை காட்டி மட்டும் புலிகளை பலவீனமாக்கிவிட்டதாக சொல்வது உகந்த வாதமாக இருக்காது.

## அதிரடி அய்யாத்துரை



**ம**னித உயிர்களின் பெறுமதி எந்தளவுக்கு வீழ்ச்சி கண்டிருக்குது தெரியுமோ? கிரிக்கெட் ஸ்கோர் கேட்கிற ஸ்டைலில் அங்காலை எவ்வளவு? இங்காலை எவ்வளவு? எண்டல்லோ சனம் கேட்கப் பழகிப் போட்டுதுகள். நூறு நூறாக சாவுகள் நடந்திருக்கே எண்ட அதிர்ச்சியெல்லாம் கிடையவே கிடையாது. அதைவிட இரு தரப்பின் ஸ்கோர் பார்த்து வெற்றி தோல்வியை கணக்கிடும் எண்ணந்தான் மேலோங்கியிருக்கு. யாருக்கு ஆதரவு எண்டதும், யார் வெல்ல வேண்டும் என்பதும் வேறுபாடாக இருந்தாலும், யார் தரப்பு இழப்பைப் பற்றியும் யாரும் கவலைப்படவில்லை எண்டதும், சண்டை என்றால் சாகத்தானே வேணும் எண்ட மனநிலை ஏற்பட்டுவிட்டதும் இன உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட பொது விசயமாகிவிட்டது.

**த**மிழ்க் கட்சிகளின் பிரசார வேகம் புல்லரிக்க வைக்குது. கட்சித் தலைவருக்கு கட்சிக் கிளை அனுப்பும் அறிக்கையும் பத்திரிகைகள் ஊடாகத்தான் கொடுக்கப்படுகிறதாக்கும்.

**கூ**ட்டான கட்சியின் ஆனந்தமான சங்கதியார் ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். தீர்வுத் திட்டத்தை எதிர்க்கட்சி ஆதரிக்க வேண்டுமாம். திட்டமே இன்னமும் முழுதாக ரெடியாகவில்லை இவர் எந்தத் திட்டத்தைச் சொல்லியிருக்கிறார். அப்படியென்றால் 'உது போதாது' எண்டு திருத்தம் கொடுத்ததெல்லாம் நாடகம் தானாக்கும். எங்களுக்கு ஓ.கே எண்டு இரகசியமாகச் சொன்னதை வாய் தவறிப் பகிரங்கமாகச் சொல்லித் தொலைச்சுப்போட்டார். சங்கதியாருக்கு சாணக்கியம் பத்தாது!

**யா**ழ் சென்ற தபால் பொதிகள் நாலுமாத காலமாக தேங்கிக் கிடக்குதாம். கடிதங்கள் என்ன வரலாற்று ஆவணமோ, பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருக்க. தாமதமாகும் தபால்களால் வாழ்க்கையே தலைகீழாக மாறிய சம்பவங்களும் இருக்குதல்லோ. உலகத்திலை கம்யூட்டர் மூலமாக கடிதங்கள் பறக்குது. நாங்கள் கப்பலில் கடிதத்தை அனுப்பிப்போட்டு, கப்பல் எப்ப போகும், தபால் எப்ப சேரும்? எண்டு காத்திருக்க வேண்டிக்கிடக்கு.

**ப**ரந்தன் சண்டை தொடர்பாக எக்கச்சக்கமாகக் கூட்டி ஸ்கோர் சொல்லிப்போட்டினம் எண்டு அதிகாரத் தரப்பார் கவலைப்பட்டவை. பிழையான செய்திகள் வெளியிடக்கூடாது எண்டும் கண்டிப்பாக சொல்லியிருக்கினம். முதல் நாள் ஸ்கோர் 400 எண்டு எங்கிருந்து தகவல் கசிந்தது தெரியுமோ? அரச கட்டுப்பாட்டில் இருக்கும் ஆங்கிலப் பத்திரிகை வட்டாரத்தில் இருந்துதானாம். தொலை பேசி மூலமாக அவை சொன்ன தொகையை நம்பித்தான் இந்தியப் பத்திரிகையாளர்களும் செய்தி போட்டவையாம்.

**யா**ழ்ப்பாணத்தில் தொழில் நீதிமன்றம் ஆரம்பிக்க வேண்டும் எண்டு கூட்டான கட்சித் தலைவர் கோரியிருக்கிறார். சிவில் நிர்வாகம் நடப்பதாக காட்டக்கூடிய யோசனை சொல்லுறதும் அவைதான். நாங்கள் அங்கு போகமாட்டோம் எண்டு சொல்லுறதும் அவைதான். நீதிமன்றங்கள் ஜோராக நடந்தால், வழக்காடப்போறது மாதிரி மெல்ல நுளைஞ்சிடலாம் எண்டு நினைக்கினமாக்கும். சடும் ரெண்டு எழுத்தார் நடமாட்டம் இல்லையென்றால் கருப்புக் கோட்டுக்காரர் கொலஸைத் தூக்கிவிட்டுக் கொண்டு நடமாடப் போயிடுவினம். திண்ணை எப்ப காலியாகும் எண்டு அண்ணன்மார் காத்திருப்பதுதான் இக்கால நிலவரம்!

**ஐ**யப்ப பக்தர்களுக்கு குரு சாமிகளின் சிபாரிசுப் படி அயலகம் செல்ல விசா கிடைத்ததாக சொன்னேன் அல்லோ. உடனடியாக ஒரு ஐயப்ப பக்தர் காரசாரமாக கடிதம் போட்டிருக்கிறார். "ஐயப்பனுக்காக மாலை போட்டவன் நான். விசா வாங்க காசு மாலை போட்டுத்தான் காரியம் நடந்தது. ஏதோ நாம் பக்தர்கள் என்பதால் மனம் இரங்கிய தரகர் தலா பத்தாயிரம் ரூபாய்வீதம் ஐந்து விசாக்களை துரிதமாகத் பெற்றுத்தந்தார்" எண்டு எழுதியிருக்கிறார். வடக்கு-கிழக்கு தமிழர்களுக்குள் கிராக்கியான இரண்டு பொருட்கள். ஒன்று பாஸ், இன்னொன்று விசா. என்ன விலைகொடுத்தும் கறுப்புச் சந்தையில் வாங்க எத்தனைபேர் தயாராக இருக்கினம் தெரியுமோ? வழியில்லாதவைக்கு கதவுகள் திறக்காது. கிடந்து காய வேண்டியதுதான்.

**இ**ந்த வாரம் நபிகள் நாயகம் சொன்ன பொன்மொழி ஒன்று:

**"கற்றோர் என்பவர் யார்? கற்றுக் கொண்டதை பழக்கத்தில் கொண்டுவந்து செயற்படுத்துபவர்"**



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## 112

# பரா கொமாண்டோக்களின் பாய்ச்சல்

# படுகளமான பிரம்படி வீதி

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

### கொமாண்டோக்கள் நகர்வு

கொக்குவில் கிராமசபைக்கு அருகே இருந்த வெளியில் தரை இறங்கிய 103 பரா கொமாண்டோக்களும் செயலில் இறங்கினார்கள்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம் அருகே தரையிறங்கிய சீக்கிய கலாட்படையினரின் கதி பற்றி பரா கொமாண்டோக்களால் அறிய முடியவில்லை.

சீக்கிய காலாட் படையினர் தமது இடத்திற்கு வந்து சேருவார்கள் என்று முதலில் பரா கொமாண்டோக்கள் தாமதித்தனர். மேலும் தாமதிக்க வாய்ப்பில்லாத நிலையில் பரா கொமாண்டோக்கள் செயலில் இறங்கினார்கள்.

அவர்கள் ஒரு வரைபடம் வைத்திருந்தனர். பிரபாகரனின் முகாம் இருந்த பிரம்படி வீதிக்கு அருகே ரயில்வே பாதை இருந்தது. ரயில்வே பாதையை பிரதான அடையாளமாக வைத்துத்தான் பிரம்படி வீதியைக் கண்டுபிடித்து உள்ளே செல்ல வேண்டும்.

பிரம்படி வீதி போன்ற ஒரு பகுதியில் வரைபடத்தை மட்டும்வைத்துக்கொண்டு குறிப்பிட்ட வீடு எதுவென்று அடையாளம் கண்டுபிடித்துவிட முடியாது.

பிரம்படி வீதிக்குள் புகுந்து, அங்குள்ள சிலரை பணயக்கைதிகளாகப் பிடித்துவைத்து மிரட்டி, பிரபாகரனின் முகாமைக் காட்டுமாறு கேட்பதுதான் பரா கொமாண்டோக்களின் நோக்கம்.



கொக்குவில் கிராமசபை வெளியில் இருந்து பிரம்படி வீதிவரை வந்து சேருவதற்கு இடையில் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்.

அதனால் வீட்டு மதில்சுவர்களால் ஏறிக்குதித்து உள்வழியாக முன்னேறினார்கள் பரா கொமாண்டோக்கள்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம் அருகே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையின் வேட்டொலிகள் அப் பகுதி மக்களை கிலிகொள்ள வைத்தன.

நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன. அமைதி கெட்டு பயங்கர சூழ்நிலை தோன்றிவிட்டது. இப்படியான சந்தர்ப்பங்களில் பொதுவாக யாரும் வீடுகளைவிட்டு வெளியே வருவதில்லை. உள்ளேயே பயந்துகொண்டு கதவுகளை இறுக மூடிக்கொண்டு இருந்து விடுவார்கள்.

அதனால் பரா கொமாண்டோக்கள் வீட்டு மதில்களைத் தாண்டி வளவுகள் வழியாக சென்றதை யாரும் பார்க்கவில்லை. நாய்கள் குரைத்தாலும்கூட வெளியே வந்து பார்க்க யாருக்கும் துணிச்சலில்லை.

புலிகள் வீதிகளில் நடமாடத் தொடங்கிவிட்டனர். ஆயினும் பரா கொமாண்டோக்கள் சென்ற பாதையை அவர்களால் உடனடியாக கண்டுபிடிக்க முடியுவில்லை.

சாதாரண நேரம் என்றால் நாய்கள் குரைப்பதை வைத்து ஊகித்திருக்க முடியும். பல்கலைக்கழக மருத்துவ பீடம் அருகே வேட்டொலிகள் கேட்கத் தொடங்கியதும் நாய்கள் குரைக்கத் தொடங்கியதால், புதிய நபர்களைக் கண்டுதான் நாய்கள் குரைக்கின்றன என்று ஊகிக்க முயடிவில்லை.

### வீடு முற்றுகை

ஆர்ப்பாட்டம் எதுவும் இல்லாமல், நிதானமாகவே பரா கொமாண்டோக்களும் முன்னேறிச் சென்றனர்.

அதிகாலை ஒரு மணிக்கு தரையிறங்கிய பரா கொமாண்டோக்கள் பிரம்படி வீதிக்குள் நுழைந்தபோது நேரம் அதிகாலை 4 மணி.

பிரபாகரனின் முகாமுக்கு அருகே கிட்டத்தட்ட நூறு யார் தொலைவில் உள்ள ஒரு வீட்டின் கதவு தட்டப்பட்டது.

அது ராஜா என்பவருக்கு சொந்தமானவீடு. இரவு முழுக்க கேட்ட வேட்டுச் சத்தங்களால் ராஜாவும் அவரது குடும்பத்தினரும் விழித்துக் கொண்டிருந்தனர். துப்பாக்கிச் சத்தங்கள் சற்று ஓய்ந்தது போலத் தெரிந்தது. அப்போதுதான் தூங்கலாம் என்று படுக்கைக்குச் சென்றார் ராஜா.

கதவு தட்டப்பட்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்துவந்தார். கதவைத் திறக்கப் பயமாக இருந்தது. யார் வந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. திறக்காமல் இருந்தாலும் பிரச்சனைதான்.

மெல்லக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்த ராஜாவின் முகம் எதிரே துப்பாக்கி முனை நீண்டது. சத்தம் போட வேண்டாம் என்று சைகை காட்டியபடியே பரா கொமாண்டோக்கள் சிலர் வீட்டுக்குள் புகுந்தனர்.

ராஜாவின் குடும்பத்தினரை வெளியே அழைத்து, வீட்டை சோதனை போட்டனர். ராஜாவின் வீட்டில் ஒரு படம் மாட்டியிருந்தது.

படத்தைப் பார்த்துவிட்டு பரா கொமாண்டோ வீரர் ஒருவர் கேட்டார்: "அது யார் பிரபாகரனா?"

"இல்லையில்லை, குருமகராஜி" என்று சொன்னார் ராஜா.

ராஜாவையும், அவரது குடும்பத்தினரையும் பணயக்கைதிகளாக வைத்துக்கொண்டு கிட்டத்தட்ட அரை மணி நேரம் அங்கு தாமதித்தார்கள் பரா கொமாண்டோக்கள்.

மேலிடத்திலிருந்து முக்கிய உத்தரவை எதிர்பார்த்து அவர்கள் தாமதித்திருக்கலாம்.

ஏனெனில் பிரபாகரனை கைது செய்துவிட்டால் உடனடியாக ஹெலிமூலமாக அவரைக் கொண்டு செல்ல வேண்டும்.

ஹெலி வந்து தரையிறங்க பாதுகாப்பான தற்காலிக தளப்பிரதேசத்தை ஏற்படுத்த வேண்டும். அனைத்து நடவடிக்கைக்கும் 103 பேர் மட்டும் போதாது.

ஏற்கனவே திட்டமிட்டபடி பிரபாகரனின் முகாமை முற்றுகையிட்டு அவரைப் பிடிப்பது மட்டும்தான் கொமாண்டோக்களின் வேலை. தளப்பகுதி ஒன்றை உருவாக்கி நடவடிக்கை முடியும்வரை அதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சீக்கிய மெதுரக காலாட்படையினரின் பொறுப்பு.

சீக்கிய காலாட்படையினரின் உதவி கிடைக்காமையால், மேலதிக உதவி அனுப்பப்படுமா என்று அறிவதற்கு பரா கொமாண்டோக்கள் தமது மேலிடத்துடன் தொடர்பு கொண்டிருக்கலாம்.

ஆனால் உதவி அனுப்பக்கூடிய நிலையில் மேலிடம் இருக்கவில்லை.

இறுதியாக ராஜாவையும், அவரது மைத்துனரையும் பணயக்கைதியாக்கிக் கொண்டு, பிரபாகரனின் முகாமைக் காட்டுமாறு மிரட்டினார்கள்.

கொமாண்டோக்களோடு ஒத்துழைக்க மறுத்தால் குடும்பத்தையே அழித்துவிடுவார்கள் என்று பயந்தார் ராஜா.

### புலிகள் தாக்குதல்

ராஜாவையும், அவரது மைத்துனர் குலேந்திரனையும் தமக்கு வழிகாட்டிக் கொண்டு முன்னே செல்லுமாறு கூறினர் கொமாண்டோக்கள்.

இதேவேளை பிரபாகரனின் முகாம் இருந்த பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் புலிகள் நிலையெடுத்து தயாராக இருந்தனர்.

கொக்குவில் பகுதிக்குள் இன்னொரு படைப்பிரிவு தரையிறங்கியுள்ளது என்பது புலிகளுக்குத் தெரியும். கொக்குவிலை முற்றுகைக்குள் வைத்திருந்து விடிந்த பின்னர் அப் படைப்பிரிவை முற்றாக அழித்துவிடுவ்துதான் புலிகளின் திட்டம்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம் அருகே சீக்கிய காலாட் படையினர் தரை இறங்கியபோதே பிரபாகரன் உஷாராகிவிட்டார்.

அதனால் அவர் எப்போதோ முகாமில் இருந்து பாதுகாப்பாக வெளியேறிச் சென்றுவிட்டார். முகாமிலிருந்து முக்கிய ஆவணங்கள், மற்றும் ஆயுத தளபாடங்களை அகற்றும் பணி அதிகாலை 4 மணிவரை நடைபெற்றது.

பரா கொமாண்டோக்கள் பிரபாகரனின் முகாமை நெருங்குதவற்கு மூன்று மணிநேரம் முன்பாகவே பிரபாகரன் வெளியேறிவிட்டார்.

பிரபாகரன் வெளியேறியபோதும், அவரது முகாமைச் சுற்றி புலிகளின் பாதுகாப்பு வளையம் இருந்தது.

பிரம்படி ஒழுங்கைக்குள் பிரபாகரனின் முகாம் இருந்த வளைவில் அதிரடிப்படையினர் திரும்பினார்கள்.

அவர்கள் ஒருவர்பின் ஒருவராக நகர்ந்து வருவதை தென்னங்காணி ஒன்றில் தென்னைகளின் மறைவில் இருந்த புலிகள் கண்டுவிட்டனர்.

புலிகளின் துப்பாக்கிகள் சீறத் தொடங்கின. பரா கொமாண்டோ வீரர்கள் மூவர் சூடுபட்டு தரையில் சரிந்தனர். ஏனைய வீரர்கள் தரையோடு படுத்துக்கொண்டு, எங்கிருந்து சுடுகிறார்கள் என்று கவனித்தார்கள்.

வழிகாட்டியாக வந்த ராஜா அதிஷ்டவசமாக உயிர்தப்பினார். அருகில் இருந்த வீடொன்றின் பின்னால் மறைந்து கொண்டு உயிர்தப்பினார்.

தென்னைகளின் மறைவில் இருந்து சுட்டுவிட்டு, துப்பாக்கிப் பிரயோகத்தை நிறுத்திய புலிகள், தரையில் படுத்துக்கொண்ட கொமாண்டோக்கள் எழுந்து கொள்ளட்டும் என்று காத்திருந்தனர்.

அதனால் புலிகள் எங்கிருந்து சுட்டனர் என்பதை பரா கொமாண்டோக்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

தென்னங்காணிக்கு முன்னால் இருந்த வீடுதான் அவர்கள் பார்வையில் பட்டது. அங்கிருந்துதான் புலிகள் சுடுகிறார்கள் என்று நினைத்துவிட்டனர்.

### மோட்டார் தாக்குதல்

தரையில் படுத்திருந்த படியே சிறிய மோட்டார் மூலமாக அந்த வீட்டைக் குறிபார்த்தனர்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதால் மெல்ல எட்டிப்பார்த்த வீட்டுக்காரர் பொன்னம்பலம் அதனைக் கண்டுவிட்டார்.

"ஷெல் அடிக்கிறான்கள். கீழே படுங்கோ" என்று கத்திக்கொண்டே விழுந்து படுத்துவிட்டார்.

ஷெல் வீட்டுக் கூரையை உடைத்துக் கொண்டு விழுந்தது. கீழே படுத்துக் கொண்டதால் அவர்கள் உயிர்தப்பினார்கள்.

சண்டை தொடங்கிவிட்டது. ஓடித்தப்ப வேண்டும் என்று அப்பகுதியில் உள்ளவர்கள் பலர் பரபரப்பாகினார்கள்.

தனபாலசிங்கம், கோபாலகிருஷ்ணன் என்னும் இரண்டுபேர் ஒழுங்கைக்குள் வந்து நிலமையை நோட்டமிட்டனர்.

இந்தியப்படை அருகே வந்துவிட்டது. இனிமேல் இங்கிருப்பது ஆபத்து. அதனால் குடும்பத்தினரை வேறு இடத்திற்கு கூட்டிச் செல்ல வேண்டும் என்று நினைத்தனர்.



அவர்கள் விரைவாக வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருக்க, அவர்களைக் கண்டுவிட்ட கொமாண்டோக்கள் சுடத் தொடங்கினார்கள்.

இருவரும் தலைதெறிக்க ஓடி வீட்டுக்குள் புகுந்தபோது, அவர்கள் பின்னால் கொமாண்டோக்களும் வந்துவிட்டனர்.

வீட்டுக்குள் இருந்தவர்கள் கைகளை உயர்த்திக் கொண்டும், கை கூப்பிக் கொண்டும் மன்றாடினார்கள்.

அதனைக் கவனிக்கும் நிலையில் கொமாண்டோக்கள் இல்லை. சடசடவென்று சுட்டுத் தள்ளினார்கள்.

தனபாலசிங்கம், கோபாலகிருஷ்ணன், தனபாலசிங்கத்தின் மனைவி, அவர்களின் குழந்தை, அவர்கள் வீட்டில் இருந்த ஜீவா என்னும் பெண், அவரது ஒன்பது வயது மகன், மற்றும் அங்கிருந்த ஆறுபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் மட்டுமே காயங்களுடன் தப்பினான்.

தம்மைக் காப்பாற்ற வந்திருப்பதாக தமிழர்களால் ஆனந்தக் கண்ணீருடன், ஆலாத்தி எடுத்து வரவேற்கப்பட்ட இந்தியப் படையின் முதல் வேட்டையில் ஒரு தமிழ்க் குடும்பம் அழிந்தது.

பிரம்படி ஒழுங்கைக்குள் இருந்து தப்பி ஓட முற்பட்ட பொதுமக்கள் சிலர் தொடர்ந்து ஓட முடியவில்லை. இந்தியப் படை கிட்டத்தில் வந்துவிட்டது. ஓடுவதைவிட, ஒளிந்திருப்பதே பாதுகாப்பு என்று நினைத்தனர்.

அதனால் பக்கத்தில் இருந்த வீடுகளுக்குள் புகுந்துகொண்டனர்.

### வீட்டுக்குள் சூடு

பொழுது விடிந்துவிட்டது. புலிகள் ஆங்காங்கே மறைந்திருந்து தாக்கத் தொடங்கினார்கள். வீட்டு வளவுகள் ஊடாக கொமாண்டோக்கள் முன்னேறியதால் புலிகளால் அவர்களை இலகுவாக தாக்க முடியவில்லை.

வீட்டு வளவுகள் ஊடாக முன்னேறிய கொமாண்டோக்கள் சந்தேகப்படும்படியான வீட்டுக் கதவுகளைத் தட்டினார்கள்.

அவ்வாறு தட்டப்பட்ட வீடுகளில் ஒன்று மங்கையக்கரசி விசுவலிங்கம் என்பவரது வீடு. வீட்டின் உள்ளே பத்துப்பேர் இருந்தனர். கதவு தட்டப்பட்டபோதும் பயத்தில் அவர்கள் திறக்கவில்லை.

கதவை உடைத்துத் திறந்த கொமாண்டோக்கள் அதேவேகத்தில் சுட்டுத் தள்ளினார்கள். உள்ளே இருந்த பத்துப்பேரும் துடி துடித்தபடி சுருண்டு விழுந்தனர்.

பிரபாகரனைப் பிடிக்க வந்த கொமாண்டோக்கள் இப்போது தமது நோக்கத்தை மாற்றிக் கொண்டனர்.

பிரபாகரனை இனி பிடிக்க முடியாது. அங்கிருந்து தாம் தப்பிச் செல்வதுதான் இப்போதுள்ள பணி என்று தீர்மானித்துவிட்டனர்.

குடியிருப்புக்கள் மத்தியில் தற்காலிகமான தளம் ஒன்றை உருவாக்கிக் கொண்டு, உதவி வரும்வரை காத்திருக்கத் தீர்மானித்தனர்.

வீட்டுக் கூரைகளில் படுத்து நிலை எடுத்துக்கொண்ட கொமாண்டோக்கள், தாம் இருந்த பகுதியை புலிகள் நெருங்கிவிடாமலிருக்கச் ஷெல்களை ஏவிக் கொண்டிருந்தனர்.

ஏற்கனவே பொது மக்கள் பலர் வீடுகளைவிட்டு ஓடியதால், கூரைகளைப் பதம் பார்த்த ஷெல்களால் உயிரிழப்புக்கள் அதிகம் ஏற்படவில்லை.

ஓட முடியாமல் இருந்தவர்களும் வீடுகளுக்குள் கட்டில்களின் கீழே படுத்துக் கொண்டனர்.

பிரம்படி வீதியின் முன்பாக உள்ள நந்தாவில் வீதியில் உள்ள வீடொன்றில் குடியிருந்த பாலசுப்பிரமணியம் என்பவரும், அவரது குடும்பத்தினரும் வீட்டுக்கு வெளியே வந்து பனைமரம் ஒன்றின் கீழ் ஒளித்திருந்தனர்.

வீட்டுக்குள் இருந்தால் ஷெல் அடியால் பலியாக வேண்டியிருக்கும் என்ற பயத்தில் பனைமரத்தின் கீழ் இருந்தனர். ஆனால் ஷெல் ஒன்று அங்கும் விழுந்து வெடித் தது. பாலசுப்பிரமணியத்தின் மகன் பலியானார். கா.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்தவர் அவர்.

உயிரபயம் தேடி ஓடிய மக்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி நோக்கிச் சென்றனர்.

இந்தியப் படை காலத்தின் முதலாவது அகதி முகாம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் உருவாகத் தொடங்கியது.

### தொடர்புமையம்

பிரம்படி வீதியில் நைஜீரியாவில் கடமையாற்றிவிட்டுத் திரும்பிய ஆசிரியரின் வீடு இருந்தது.

வீட்டு ஜன்னல் வழியாக ஒரு துப்பாக்கி முனை உள்ளே நீள்வதை அவர் பார்த்தார். அடுத்ததாக ஒரு முகம் தெரிந்தது.

கதவைத் திறக்குமாறு சைகை மூலம் அந்தக் கொமாண்டோ கட்டளையிட்டார். கதவு திறக்கப்பட்டதும், இன்னொரு கொமாண்டோ வாசலில் நின்று சைகை காட்டினார். பத்துப் பதினைந்து கொமாண்டோக்கள் மறைவில் இருந்து வெளிப்பட்டனர்

பின்னர் வீட்டுக்குள் புகுந்த கொமாண்டோக்கள் ஆசிரியரையும், அவர் மனைவியையும் பிடித்து கைகளைப் பின்னால் கட்டினார்கள். அங்குள்ள ஒரு அறையில் போட்டுப் பூட்டினார்கள்.

பிரம்படி வீதியில் ஒரு பகுதியை பிடித்து வைத்துக்கொண்ட பரா கொமாண்டோக்கள் அந்த ஆசிரியரின் வீட்டை தமது தொடர்புமையம் ஆக்கிக் கொண்டனர்.

அங்கிருந்து கொண்டுதான் மேலிடத்துடன் தொடர்பு கொண்டு தாம் எங்கு இருக்கிறோம் என்ற தகவலை சங்கேத மொழியில் தெரிவித்தனர். அவர்கள் அடுத்ததாக என்ன செய்ய வேண்டும் என்ற வழி நடத்தலும் மேலிடத்திலிருந்து கிடைக்கத் தொடங்கியது.

### ஹெலி தாக்குதல்

அதன்பின்னர் ஷெல் அடிகளை நிறுத்திக் கொண்டு, புலிகள் தேடி வந்தால் முற்றுகைக்குள் அவர்ளை இழுத்துத் தாக்கலாம் என்று காத்திருந்தனர்.

"உதவி வரும், அதுவரை சமாளித்துக் கொள்ளுங்கள்" என்று பராக் கொமாண்டோக்களுக்கு செய்தி கிடைத்துவிட்டது.

மோதல் ஓய்ந்துவிட்டது. இனிமேல் வீடுகளுக்குச் செல்லலாம் என்று பொது மக்கள் சிலர் திரும்பிவந்தனர்.

காத்திருந்த பரா கொமாண்டோக்கள் சற்றும் யோசிக்கவில்லை. சுட்டுத் தள்ளினார்கள்

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்குள் புகுந்த பரா கொமாண்டோக்கள் சிலர் அங்கிருந்த மாணவர்கள் சிலரைப் பிடித்து பணயக் கைதிகளாக வைத்திருந்தனர்.

அன்றைய அவலங்களோடு அக்டோபர் 12ம் திகதி கழிந்தது.

புலிகள் முற்றுகையிட்டு நிற்க, பரா கொமாண்டோக்கள் உள்ளேயே இருந்தனர். தரைவழி மூலமாக அவர்கள் வெளியேறிச் செல்ல முடியாது என்றே புலிகள் நம்பியிருந்தனர்.

ஹெலிகொப்டர் வந்து தரையிறங்க முடியாமல் தாக்கினால் போதும். பரா கொமாண்டோக்கள் தப்பவே முடியாது என்றே நினைத்தனர்.

அக்டோபர் 13ம் திகதி அதிகாலை இரண்டு மணிக்கு இந்தியப் படை ஹெலிகொப்டர்கள் கொக்குவில், பிரம்படி பகுதிகளின் மேலாகப் பறந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தன.

ஹெலிதான் தரையிறங்கப் போகிறது என்று நினைத்த புலிகள், அப் பகுதிகளில் ஹெலி தரையிறங்கக்கூடிய இடங்களில் தயாராகக் காத்திருந்தனர்.

ஆனால் இந்தியப் படையின் திட்டம் வேறாக இருந்தது.

புலிகள் எதிர்பாராத ஒரு கோணத்தில் பரா கொமாண்டோக்களை மீட்டெடுக்கத் திட்டம் தீட்டினார்கள் இந்தியப்படை அதிகாரிகள்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது- இராஜதந்திரி

# புதிய ஆண்டில் அரசியல் தீர்வை வலியுறுத்தும் 'பரந்தன் தாக்குதல்!'

**1997ம்** ஆண்டை கிழக்கில் 'ரிவிஜய' இராணுவ நடவடிக்கை கட்டியம் கூறி வரவேற்றது.

இதனையடுத்து முற்றிலும் எதிர்பாராத விதமாக ஆனையிறவுக்கும், கிளிநொச்சிக்குமிடையேயுள்ள பரந்தனில் புலிகள் தமது கைவரிசையைக் காட்டியிருந்தார்கள்.

பரந்தனில் இருந்த இராணுவ முகாமொன்று பலமான முறையில் தாக்கப்பட்டு, அங்கே ஏராளமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் மேலும் பலர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் முதல் வாரத்திலேயே புலிகளின் பாய்ச்சல் உக்கிரமாக அமைந்திருந்ததையே பரந்தன் தாக்குதல் பறைசாற்றியது.

அத்துடன் 'சூரியக்கதிர்','சத்திய வெற்றி' போன்ற இராணுவ நடவடிக்கைகளை நடத்தி வடக்கே தமது நிலையைப் பலப்படுத்திய பின்னர் படையினர் மீது விழுந்த 'அதிரடி'யாகவும் பரந்தன் தாக்குதல் காணப்படுகின்றது.

ஆனையிறவிலும், பரந்தனிலும் ஏககாலத்தில் புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

ஆனையிறவு முகாம் ஏற்கனவே 1993ம் ஆண்டில் புலிகளின் முற்றுகைக்குள்ளாகியிருந்தது. எனவே அதையொத்த முற்றுகையே மீண்டும் நிகழப்போகின்றதோவெனப் படையினர் எண்ணியிருந்த வேளையிலேயே பரந்தன் படைமுகாமுக்குள் புலிகளின் பல்வேறு அணிகள் ஊடுருவி நாசத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆனையிறவை நோக்கியும். பரந்தனை நோக்கியும் ஏக காலத்தில் தாக்குதலை ஆரம்பித்துப்பின்னர் பரந்தனுக்குள் ஊடுருவியமை புலிகளின் யுத்த தந்திரத்தை வெளிப்படுத்தியிருந்தது.

இராணுவ வட்டாரங்கள் மூலம் கிடைக்கும் தகவல்களின்படி, கடந்த ஆண்டு முல்லைத்தீவு முகாமைத்தாக்கிக் கைப்பற்றிய நெடுந்தூர ஆட்டிலறிப் பீரங்கிகளையே புலிகள் பரந்தன் முகாம்மீது பிரயோகித்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் புலிகள் தொடுத்த முதலாவது தாக்குதல் மட்டுமல்ல; பயங்கரமான தாக்குதலாகவும் பரந்தன் தாக்குதல் காணப்படுகின்றது.

மற்றொரு புறத்தில் புலிகளின் பலம் குறித்து தப்புக்கணக்கிடலாகாது என புதிய ஆண்டின் ஆரம்பத்திலேயே எச்சரிப்பதாகவும் பரந்தன் விவகாரம் விளங்குகின்றது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் கொழும்பு 'கலதாரி' ஐந்துநட்சத்திர ஹோட்டலில் கருத்தரங்கொன்று இடம்பெற்றது.

இராஜதந்திர முக்கியஸ்தர்கள் பலரும் பங்குபற்றிய இக் கருத்தரங்கில் நீதி அரசியலமைப்புத்துறை அமைச்சரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உரையாற்றினார்.

பேராசிரியர் பீரிஸ் தமது உரையில், "இப்புதிய ஆண்டு ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்கதாக அமையும்; ஏனெனில் இந்த ஆண்டில் ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக்காண ஜனாதிபதி உறுதி பூண்டுள்ளார்" எனத் தெரிவித்தார். அத்துடன் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று எட்டப்படாவிட்டால் இலங்கைக்கு ஓர் ஆரோக்கியமான எதிர்காலம் இருக்கப்போவதில்லை எனவும் பேராசிரியர் பீரிஸ் கூறியிருந்தார்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாதவரை இலங்கைக்கு ஓர் எதிர்காலமில்லை என்பதனை பேராசிரியர் பீரிஸ் கூறிமட்டும் தெரியவேண்டியதில்லை.

எதிர்காலத்தை நோக்குகிறோம்; ஆனால் இலங்கையின் கடந்தகாலம், நிகழ்காலம் அனைத்துமே ஆரோக்கியமற்றவையாகவே இருந்து வருகின்றன. எனவே பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் நிலைமை மேலும் மோசமடையும் என்பதே கண்கூடு.

வடக்கே பலாலியிலிருந்து கிளிநொச்சிவரை முன்னேறிய ஆயுதப்படையினரின் அடுத்தகட்ட நடவடிக்கை, வன்னியின் ஊடாக வவுனியாவரை முன்னேறுவதே என்றிருந்தது.

புலிகளைக் காட்டுக்குள் விரட்டி வன்னியூடாக வடக்கிற்கும் தெற்கிற்குமிடையே தொடர்பை ஏற்படுத்துவது எனவும் ஆயுதப்படையினர் கூறிவந்தனர்.

**ஆனால் நிலைகொள்ளுமிடங்களிலெல்லாம் வேரூன்றி விடமுடியாது என்பதனையும், பின்வாங்கிச் சென்றாலும் புலிகள் படையினரை நிழலாகத் தொடர்ந்த வண்ணமுள்ளனர் என்பதையுமே பரந்தன் சம்பவம் தெளிவு படுத்தியுள்ளது.**

"புலிகளின் பலம் குன்றியுள்ளது; அவர்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள்," என்றெல்லாம் அரச தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் அரசபடையினரின் பலம் எப்படியிருக்கின்றது? அவர்களின் பலத்தின் பின்னணியாக எது இருக்கின்றது? என்பவையெல்லாம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகவுள்ளன.

புலிகளின் தாக்குதல் ஒன்று இடம்பெறும் பட்சத்தில் கடல், ஆகாய, தரை மார்க்கமாக முப்படைகளுமே உஷாரடையும் நிலையே தோன்றிவிடுகின்றது.

புலிகளின் தாக்குதல் ஆரம்பமானதும் தரைப்படைகள் செயலில் இறங்கும் அதேசமயம் வானத்தில் விமானங்களும், கடலில் கடற்படைக்கப்பல்களும் தோன்றிவிடுகின்றன.

எனவே புலிகளின் தாக்குதலைச் சமாளிப்பதென்பது அரச படையினைரப் பொறுத்தவரை பெரும்பாடாகவே இருக்கின்றது. அத்துடன் முப்படைகளும் ஒன்று கூடியே எந்தவொரு தாக்குதலானாலும், இராணுவ நடவடிக்கையானாலும் செயல்படவேண்டியுள்ளது.

இந்நிலையில், தரையில் பீரங்கிகளும், ஆகாயத்தில் விமானங்களும், கடலில் கப்பல்களும் புகைத்துத் தள்ளும் வேட்டுக்கள், குண்டுகள் என்பவற்றுடன் தரைப்படையினரின் வேட்டுக்கள் எனப் பெரும் எடுப்பில் படையினர் உஷாரடைவதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் தனி ஒரு போராட்ட அமைப்பான எல்.ரி.ரி.ஈ.யைச் சமாளிப்பதற்கு முப்படையினரும் ஒன்று சேர்வதை நோக்கும்போது, ஆயுதப்படையினரின் பலம் கேள்விக்குரியதாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

**தாக்குதல் ஒன்றில் இலங்கையின் முப்படையினரும் ஒன்று சேர முடியாத விடத்து, தோல்விகளும் பின்னடைவுகளும் ஏற்பட்டு வருவதையே உணர முடிகின்றது.**

எனவே ஒவ்வொரு தாக்குதலுக்கும் முப்படைகளையும் ஒன்று திரட்ட வேண்டிய நிலை என்பது பெரும் பொருள் விரயத்தையே ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது.

கடந்த ஆண்டில் யுத்தச் செலவாக 46.5 பில்லியன் ரூபாக்கள் கருகிச் சாம்பலாகியுள்ளன. இத்தொகை கடந்த 13 வருடகால யுத்தத்தில் ஒரு சாதனை அளவாகவும் இருக்கின்றது.

யுத்தமே நிரந்தரமாகிவிட்டால், இத்தொகை மேலும் அதிகரித்து, நாட்டின் அனைத்து மூலவளங்களுமே நாசமாகிவிடும்.

புலிகளின் பலம் குறைந்து விட்டது; அரசியல் தீர்வொன்றுக்கு 'அவர்களின் அனுசரணை அவசியமில்லை என்ற மாயையிலும் ஆட்சியாளர்கள் காலங்கழித்துவிட முடியாது!

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காகூட புலிகளையோ அல்லது அந்த இயக்கத்தின் தலைவரான வே.பிரபாகரனையோ முற்றுமுழுதாக நிராகரித்துவிடாதவராகவே இருக்கின்றனர்.

ஒரு சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பொது வைபவமொன்றில் கூட ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றுகையில் இனப்பிரச்சினை பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார்.

**அப்போது, அவர், "இன்றைய வடக்கு-கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் மேலும், மேலும் 'பிரபாகரன்கள்' தோன்றுவார்கள்" என்று கூறியிருந்தார்.**

எனவே இனப்பிரச்சினையின் வெளிப்பாடாகவே எல்.ரி.ரி.ஈ. இயக்கமும், அதன் தலைவர் வே.பிரபாகரனும் இருப்பதை ஜனாதிபதி உள்ளார்ந்தமாக நன்கு உணர்ந்துள்ளார். ஆயினும் இனப்பிரச்சினையை ஆழ வடுக்களாக மாற்றிவிட்டுள்ள- விட்டுக்கொடுக்காத மனப்பாங்கு ஆட்சி, அதிகாரங்களில் உள்ளோரிடம் காணப்படுவதாலேயே வடக்கு-கிழக்குப் பிரச்சினை ஒரு அருவருக்கத்தக்க நோயாக உருமாறியுள்ளதைக்காண முடிகின்றது.

**எனவே இந்த ஆண்டில் யுத்தத்தைத் தொடர அனுமதிப்பதா? அல்லது அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முயற்சிப்பதா? என்பதனை தீர்மானிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தையே பரந்தன் தாக்குதல் ஏற்படுத்தியுள்ளது.**



இன்றைய சூழ்நிலைகளை நோக்கும்போது, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை எட்டுவதற்கு இராணுவ ரீதியான அணுகுமுறைகளே ஒரு தடைக்கல்லாக இருந்து வருகின்றது.

இராணுவரீதியான நடவடிக்கைகள் தொடர்வதென்பது ஒரு பலப்பரீட்சைக்கே எப்போதும் வழியமைத்து நிற்கின்றது.

தினந்தோறும் பல உயிர்களோடு விளையாடும் இப்பலப்பரீட்சையினால் எவருக்கும் எதுவித பயனும் கிடைத்து விடப்போவதில்லை.

**புலிகளை விரட்டவும், அவர்களை ஒடுக்கவுமே இராணுவ நடவடிக்கை என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இந்த நோக்கங்களில் அரசு ஏற்றமும், இறக்கமுமான தன்மையே காணப்படுகின்றதே தவிர ஒரு நிரந்தர வெற்றியைக் காணமுடியாதுள்ளது.**

இந்நிலையில் அநாவசியமானதெனக் கருதப்படும் இராணுவ முஸ்தீபுகளில் வெளிப்படுத்தும் அதீத அக்கறையைக் குறைத்து, தெளிவான அரசியல் கண்ணோட்டங்களுக்கே இடமளிக்கவேண்டும்.

ஆட்சியாளர்கள் அரசியல் தீர்வுபற்றிப் பேசலாம்; ஜனாதிபதி கூறியதுபோல இந்த ஆண்டு முக்கியத்துவம் மிக்க அரசியல் திருப்பங்களுக்கும் வழியமைக்கலாம்.

ஆனால் காலத்துக்காலம் தமது இலக்குகளை வெற்றிகரமாகத் தாக்கிவரும் புலிகளை தொடர்ந்து தப்புக்கணக்குப்போடுவதைத் தவிர்க்கவேண்டியது இன்றியமையாததாகின்றது.

பரந்தன் தாக்குதலுக்குப் 'பதிலடி' என்று இராணுவத்தைத் தயார் செய்வதைவிட, அரசியல் பலத்தைப் பிரயோகித்து இனிமேலும் தாக்குதல் இடம்பெறுவதைத் தவிர்ப்பதே அறிவுபூர்வமான செயலாக அமையமுடியும்.

# பரந்தன் தாக்குதல்
## எதிர்க்கட்சிக்கு இனிப்பான செய்தி

ஜனவரி எட்டாம் திகதி பாராளுமன்றம் கூடியபோது, அரச தரப்பைச் சாட இரண்டு ஆயுதங்களுடன் வந்திருந்தனர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்.

ஒன்று, ரி.என்.எல்.தொலைக்காட்சி பணிப்பாளர் கைது விவகாரம்; இரண்டாவது, புலிகளின் பரந்தன் தாக்குதல்.

ரி.என்.எல். விவகாரம் பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய கதையாகிவிட்டது.

இத்தனைக்கும் ரி.என்.எல்.பணிப்பாளர் இஷினி விக்கிரமசிங்கவின் துணைவர் அசித பெரேரா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்; முஸ்லிம் காங்கிரசின் பட்டியலில் எம்.பியானவர்.

இஷினி விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணிலின் சகோதரர் மகள். ஆனால் கடந்த பொதுத்தேர்தலில் பொதுஜன முன்னணி சார்பாக தேர்தலில் போட்டியிட ரிக்கெற் கேட்டவர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கு பொதுஜன முன்னணிக்கு கைகொடுத்து உதவிய புத்தி ஜீவிகள் பலர் தற்போது தாமாகவே ஒதுங்கி வருகிறார்கள்.

தமது நம்பிக்கைகள் பொய்த்துவிட்டன. ஆட்சி மாறியிருக்கிறதே தவிர அதிகார வர்க்க நடைமுறைகள் அப்படியே இருக்கின்றன என்பது அவர்களது வருத்தம். அதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் செல்லவும் அவர்களில் பலர் தயாராக இல்லை. திருமதி இஷினி விக்கிரமசிங்கவும் அவர்களில் ஒருவர்.

ரி.என்.எல்.பணிப்பாளரைக் கைதுசெய்த விவகாரத்தில் வெகுஜனத் தொடர்புசாதான அமைச்சரின் யோசனை பெறப்படவில்லை. தகவல் தெரிவிக்கப்படவும் இல்லை, என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதிக்கு நெருக்கமான அமைச்சர் ஒருவரின் பெயர்தான் கைது விவாகாரத்தில் அடிபடுகிறது. பாடம் புகட்ட வேண்டும் என்று உறுதியாக நின்றவர் அவர்தானாம். தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் மங்கள சமரவீராவின் பெயர்தான் எதிர்க் கட்சி வட்டாரத்தில் சொல்லப்படுகிறது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் ரி.என்.எல்பணிப்பாளரைக் கைது செய்ததுதான் பிரச்சனையை பூதாகரமாக்கி விட்டது. உள்நாட்டு பத்திரிகையாளர்கள் மட்டுமல்லாமல் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் கண்டித்துக் குரல் கொடுக்க, அரசின் பாடு தர்மசங்கடமாகிவிட்டது.

இந்தளவுக்குப் போயிருக்க வேண்டாம், குறிப்பிட்ட நடவடிக்கை பத்திரிகையுலகின் எதிர்ப்பை ஒட்டுமொத்தமாகச் சம்பாதிப்பதாகிவிட்டது என்றே அரச தரப்புக்குள் உள்ள பல எம்பிக்கள் கூட அபிப்பிராயப்படுகின்றனர். தமது கருத்தை வெளியில் சொல்ல அவர்கள் தயங்கினாலும் இத்தகைய அணுகுமுறைகள் பொது ஜன முன்னணியின் முந்தைய இமேஜை முறித்துப் போடுகின்றன என்ற அதிருப்தி இருக்கவே செய்கிறது.

ஜனவரி 8ம் திகதி அவசரகாலச் சட்டத்தை விவாதிக்க பாராளுமன்றம் கூடியபோது எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒரு பிடி பிடித்துவிட்டார்கள்.

இப்போது பத்திரிகைச் சுதந்திரத்துக்காகப் பேசுவது அவர்கள் முறை.

இதற்கிடையே பரந்தனில் புலிகளின் தாக்குதல் பற்றிய செய்திகளை அறிவதில் ஐ.தே.கட்சி எம்பிகள் ஆவலாக இருந்தனர். பாராளுமன்றத்தில் இருந்து பத்திரிகைக் காரியாலயங்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு, 'ஸ்கோர்' என்ன வென்று கேட்டுக் கொண்டே இருந்தனர்.

முதலில் வந்த செய்திகள் படையினர் மத்தியில் 400 பேர் பலியானதாகத் தெரிவித்தன. உடனடியாக பாராளுமன்றம் எங்கும் அந்தச் செய்தியை சுறுசுறுப்பாக விநியோகித்து முடித்துவிட்டார்கள் எதிர்க் கட்சி உறுப்பினர்கள்.

விறுவிறுப்பான 'கிரிக்கெட்' போட்டியின் 'ஸ்கோர்' அறிவதற்கு ஈடான ஆர்வம்தான் எதிர்க்கட்சி எம்.பி.களிடம் காணப்பட்டது. உண்மையைச் சொன்னால், புலிகள் ரன் குவிப்பதைத்தான் அவர்கள் விரும்பினார்கள்.

தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படையாக தெரிவிக்க முடியாமல் அவர்கள் திண்டாடுவதுதான் சோகம். படையினர் பலியாவதை எதிர்க்கட்சி விரும்புகிறது. படையினரின் ஆற்றலை குறைத்து மதிப்பிடுகிறது என்றெல்லாம் ஆளும்தரப்பு சாடிவிடும். எனவே. மிக ஜாக்கிரதையாக தங்கள் மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டார்கள்.

பரந்தன் தாக்குதல் தொடர்பாக காரசாரமான கேள்விகள் தொடுக்காமல் ஐ.தே.கட்சி எம்.பி.களை அடக்கி வாசிக்கச் சொல்லிவிட்டார் ரணில்.

அவசரகாலச் சட்ட விவாதத்தை முடித்து வைத்து உரையாற்றிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை, "பரந்தனில் 400 படையினர் பலியானதாகச் சிலர் சொல்கிறார்கள். அதிகமான படையினர் உயிரிழக்க வேண்டும் என்று சிலர் விரும்புகின்றனர்" என்று மறைமுகமாகச் சாடியபோது, எதிர்க் கட்சித் தரப்பு மௌனமாக இருந்தது.



அந்த மௌனம் தற்காலிகமானதுதான். "பரந்தனில் அரசாங்கம் படையினரை பலி கொடுத்துவிட்டது. அரசாங்கத்தின் யுத்த தந்திரம் கோணலாகிவிட்டது பார்த்தீர்களா?" என்று எதிர்க்கட்சி பிரசாரம் செய்யத்தான் போகிறது.

அரசியல் தீர்வு யோசனைகளுக்கு மழுப்பலாக பதில் சொல்லவும் எதிர்க்கட்சிக்கு வலுவான வாதம் கிடைத்திருக்கிறது. 'புலிகளுடன் பேசாமல் தீர்வு யோசனைகளை நாம் மட்டும் விவாதிப்பதில் பயன் இல்லை' என்று இனிமேல் உரத்துச் சொல்ல முடியும். உண்மையும் அதுதான் என்றாலும், புலிகளுடன் பேச வேண்டும் என்று எதிர்க்கட்சி சொல்வது ஒரு பாசாங்கு என்பதும், அரசியல் தந்திரம் என்பதும் தான் துரதிஷ்டம்.

இந்நிலையில், பரந்தன் தாக்குதலில் தமக்கு ஏற்பட்ட பின்னடைவை மற்றொரு பதிலடி மூலம் நிவர்த்திக்கவே அரசாங்கம் திட்டமிடும்.

புலிகளுக்கு எதிரான தாக்குதல் ஒன்றை தொடுப்பது மூலம், புலிகளைப் பலவீனமாக்க முடிகிறதோ இல்லையோ எதிர்க்கட்சியின் வாயைச் சாத்துவதுதான் அரசாங்கத்திற்கு அரசியல் தேவை.

இந்நிலையில் ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் உண்மை நிலவரங்களைப் புரிந்து கொள்வதை விட, நிலவரங்களை தமக்கு சாதகமாக எப்படிச் சித்தரிக்கலாம் என்பதில்தான் கரிசனம் கொண்டிருக்கின்றன.

அதனால், இராணுவரீதியான அணுகு முறைகளை பின்தள்ளி, அரசியல் முனைப்புக்களை முன்கொண்டுவரவேண்டிய தேவையைக் கவனிக்க யாருக்கும் நேரமிருக்கப் போவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருவது 27 ரசிகன்

என்னால் நம்பவே முடியவில்லை. பாபுசிங் குஜார் எப்படி எழுந்துவந்தான்? விடியும் வரை எழவே முடியாத மாதிரியல்லவா போதை தலைக்கேறியிருந்தது?

எவ்விதமான தள்ளாட்டமும் இல்லாமல் கம்புமாதிரி நிற்கிறானே?!

"பிடியுங்கடா அவளை!" என்று பாபுசிங் குஜார் உரத்துக் கத்தியதால், அவன் குரல் கேட்டு எல்லோரும் ஓடி வந்துவிட்டார்கள்.

இரண்டு பேர் ஓடிவந்து என் இரண்டு கைகளையும் கெட்டியாகப் பிடித்து பாபுசிங் குஜாரை நோக்கி தரதர வென்று இழுத்துக் கொண்டு போனார்கள்.

பாபுசிங் குஜார் என் எதிரே நின்று முறைத்துப் பார்த்தான். அவனைப் பார்க்கவே பயமாக இருந்தது. அவனது பார்வையைத் தவிர்க்க நினைத்து தலையைக் குனிந்துகொண்டேன்.

என் தாடையைத் தொட்டு நிமிர்த்தினான். "என்னிடமா நடிக்கிறாய்? வேசி மகளே!" என்று கத்தியபடியே என் கன்னங்கள் இரண்டிலும் மாறி மாறி அறைந்தான்.

"நீ தளுக்கியும் குலுக்கியும் காட்டிய போதே நினைத்தேனடி. அப்போதே இந்தப் பாபுசிங் குஜார் கண்ணைத் திறந்துவிட்டான். புலி தூங்குமா?



பூலான்

தூங்காது. தூங்குவதுமாதிரி நடிக்கும். சிறுக்கி நாயே! இந்தப் பாபுசிங் குஜார் புலியடி- புலி!"

அவன் அறைந்த கன்னம் இரண்டும் விறைத்துப்போனது போல இருந்தது. பரட்டைத் தலை மூதேவியின் கைகள் காய்த்திருக்க வேண்டும். அதுதான் இப்படி வலிக்கிறது.

"எங்கேயடி போனாய்? உனக்கு நான் மட்டும் போதாது. போதாதடி போதாது. டேய் இவளை கொண்டு போங்கடா. கொண்டுபோய் அனுபவியுங்களடா! இன்றைக்கு இவள்- இந்தச் சிறுக்கி கழுதை உங்களுக்குத்தான்!"

பாபுசிங் குஜார் அப்படி ஒரு உத்தரவு போடுவான் என்று நான் நினைக்கவே இல்லை.

உதைப்பான், வதைப்பான், இன்று இரவு முழுக்க வக்கிரம் செய்யப்போகிறான் என்றுதான் பயந்துகொண்டிருந்தேன்.

படுபாவி, ரொட்டியை வீசியெறிவது மாதிரி, தன் கூட்டத்திடம் என்னை வீசியெறிவான், 'பிய்த்துத் தின்னுங்கள்' என்று சொல்லுவான் என்று நான் நினைத்தே பார்க்கவில்லை.

துன்பம் வரும்போது எல்லோரும் கடவுளைத்தான் நினைப்பார்கள். நானும் முன்பெல்லாம் நினைத்திருக்கிறேன். துர்க்கையம்மனை நினைத்திருக்கிறேன்.

ஆனால், இப்போது விக்கிரம் மல்லாவைத்தான் நினைத்தேன். நான் கண்ணால் கண்ட கடவுள் அவன்தானே!

விருந்து கிடைத்த மகிழ்ச்சியில் வெறிபிடித்து நிற்கும் இந்த மிருகங்கள் முன்னால் விக்கிரம் மல்லா மட்டும் தனி ஒருவனாய் நின்று என்ன செய்துவிட முடியும்?

பாபுசிங் குஜார் முன்பாக தன்னை விரட்டியதால் என்மீது விக்கிரம் மல்லாவுக்கும் கோபம் இருக்கலாம்.

அப்படியானால் என் கதி? நினைக்கவே நெஞ்சுக்குத் திகீர் என்றிருந்தது. எலும்புத்துண்டுக்கு போட்டிபோடும் நாய்கள்மாதிரி என்னை ஆளாளுக்கு பிய்த்தெடுக்கப் போகிறார்கள்.

'சே.....இன்னும் சில நாட்கள் அமைதியாக இருந்து பாபுசிங் குஜாரின் நம்பிக்கையைப் பெற்றிருக்கலாம். சேச்சே.... அதிஷ்டம் கெட்ட ஜென்மம் நான், அவசரப்பட்டுவிட்டேன்.' ஒன்றுக்குப்பின் ஒன்றாக எல்லா நினைப்புக்களும் ஒரு நொடி நேரத்துக்குள் மனதில் வந்து போயின.

பாபுசிங் குஜார் உள்ளே போய் விட்டான். 'பாபுசிங் குஜார் வாழ்க' என்று ஒருவன் கத்தினான். அவனைத் தொடர்ந்து நாலைந்து பன்றிகள் சேர்ந்து கத்தின.

என்னைக் கண்டதில் இருந்தே நாலைந்து பன்றி- நாய்கள் நாக்கைத் தொங்கப்போட்டபடி இருந்தன. பாபுசிங் குஜார் மட்டும் அனுபவிக்கிறானே என்று பொறாமையாக இருந்திருக்கும்.

இப்போது எலும்புத்துண்டுபோல என்னை அவன் வீசிவிட்டுப்போனதால் பொறாமையெல்லாம் தீர்ந்து, வாழ்க என்று கத்துகிறார்கள் நாய்கள்.

"வாடி கண்ணு, வித்தை காட்டுகிறோம்!" என்று இளித்துக்கொண்டே என்னை ஒருவன் கட்டிப்பிடித்து தூக்கினான்.

ஒரு மூட்டை தூக்குவதைபோல என்னைத் தூக்கி தனது தோளில் போட்டுக் கொண்டான்.

நான் கால்களை உதறிக்கொண்டே அவன் கழுத்தை என் கைகளால் பிடித்துக் கொண்டேன். "விடடா என்னை," என்று கத்தினேன்.

நான் கழுத்தைப் பிடித்துக் கொண்டதால் அவன் திமிறினான். அப்படியே குனிந்து அவன் மூக்கைக் கடித்தேன் ஒரு கடி.

"அய்யோ யம்மா!" என்று கத்திக் கொண்டே தன் பிடியை விட்டான். அவன் மூக்கு நுனியில் என் பற்கள் பதிந்திருந்தன. மூக்கைப் பொத்தியபடியே கெட்ட வார்த்தைகளால் திட்டினான்.

என்ன ஆனாலும் பரவாயில்லை: இந்த மிருகங்களிடம் பணிந்துபோவதில்லை என்று தீர்மானித்துவிட்டேன்.

என்னைப் பிடிக்க வந்த ஒருவனை தள்ளிவிட்டு ஓடத் தொடங்கினேன். "ஓடுகிறாளடா" என்று கத்திக்கொண்டே என்னைத் துரத்தி வந்தார்கள்.

"சுடுங்களடா" என்று யாரோ கத்தினார்கள். "வேண்டாம் பிடித்துவிடலாம்!" என்று பதிலுக்கு யாரோ குரல் கொடுத்தார்கள்.

எந்தத் திசையில் ஓடுகிறேன் என்று தெரியாமல் ஓடிக்கொண்டிருந்தேன்.

காலடியில் ஏதோ தடுக்கியது. அப்படியே குப்புற விழுந்தேன். 'ஐயோ தெய்வமே இப்படி இடறிவிட்டு விட்டாயே!'

"அமுக்குங்கடா அவளை!" என்று ஒருவன் சொல்ல, என்னைத் தூக்கினார்கள். கைகளிலும், கால்களிலும் பிடித்தபடி, பிணத்தைத் தூக்கிப் போவதுபோல தூக்கிக் கொண்டு போனார்கள்.

ஒரு மரத்தின் கீழே என்னைத் தொப்பென்று போட்டார்கள். நான் எழுந்துவிட்டாலும் என்று ஒருவன் என்மேல் ஏறி இருந்து கொண்டான்.

கைமுஷ்டியை மடக்கி என் நெற்றியில் ஓங்கிக் குத்தினான். தரையெல்லாம் சுழலுவது மாதிரி இருந்தது. மேலே மரக்கிளைகள் எல்லாம் முறிந்து என்மேல் விழவருவது போல இருந்தது. என் மேலே இருந்தவன் மங்கலாகத் தெரிந்தான்.

என் மார்பை அவன் திருகத் தொடங்கினான். அவன் கழுத்தை நெரிக்க வேண்டும் போல ஆத்திரமாக இருந்தது. ஆனால் கைகளை அசைக்க முடியவில்லை.

"எல்லாவற்றையும் கழற்றிப் போடடா? கழற்றடா!" என்று யாரோ ஒரு துப்புகெட்ட நாய் சொல்வது கேட்டது. கிணற்றுக்குள் இருந்து அவன் சொல்வது போல இருந்தது. காதுகள் அடைத்துவிட்டன.

என் மார்புகள், தொடைகள், வயிறு எங்கும் கைகள் பரவிக் கொண்டிருந்தன. பல கைகள். எச்சில் நாய்கள்!

'நான் கண்களைத் திறந்தாக வேண்டும். துர்க்கையம்மா..... என் தெய்வமே என் சக்தியை திருப்பிக்கொடு. என் பலத்தை ஊட்டிவிடு. தாயே! நீயும் ஒரு பெண் தானே.....என் சக்தியைத் தா....தா.....தா...' என் மனம் ஓலமிட்டுக் கொண்டிருந்தது.

அதே குரல், நான் விழுந்தபோதெல்லாம் எனக்குள் தைரியம் கொடுத்து என்னை எழுப்பிவிட்ட அதே குரல் இப்போது எனக்குள் கேட்டது.

"பூலான் எழு... முடியும்.... முடியும் எழு....பூலான் எழு...."

நம்பவே முடியாத மாற்றம் அது. கடவுளின் சக்தி என்றால் சிலர் கேலி செய்வார்கள். தன்னம்பிக்கைதான் அது. மனோபலத்தின் எதிரொலி என்றும் சொல்வார்கள். எதுவாக இருந்தாலும் நான் துவண்டபோதெல்லாம் தூக்கிவிட்டது அந்தக் குரல்தான். என் மனக்கண்ணில் தெரிந்தது அந்த வெள்ளை உடைத் தேவதைதான்.

என் பலம் முழுவதும் திரும்பிவந்து விட்டதாக உணர்ந்தேன். என் கண்கள் இப்போது தெளிந்து கொள்ளத் தொடங்கின.

அதேநேரம் அந்த ஓசை கேட்டது. அது துப்பாக்கியின் ஓசைதான். அருகே கேட்டது. மிக மிக அருகில்.

அந்த ஓசையைக் கேட்டதும் என்மேல் இருந்தவன் பயத்துடன் எழுவதைப் பார்த்தேன். என் உடலெங்கும் வருடிக்கொண்டு என்னைச் சுற்றி இருந்தவர்கள் விருட்டென்று எழுந்து கொண்டதைப் பார்த்தேன்.

அதேவேகத்தில் நானும் எழுந்து கொண்டேன். வெடியோசை கேட்ட திசையில் இருந்து வந்துகொண்டிருந்தது.-

மல்லா-விக்கிரம் மல்லா!

**கடந்தவாரம்**

**கொள்ளைக் கூட்டத்தலைவன் பாபுசிங் குஜாரின் விருப்பத்துக்கு இணங்கி நடந்தபடியே அவனை அழிக்க நினைக்கிறாள் பூலான் தேவி. பாபுசிங் குஜாரை நன்றாகக் குடிக்க வைக்கிறாள். அவன் போதையில் தூங்கிவிட்டதாக நினைத்து விக்கிரம் மல்லாவைச் சந்திக்க பூலான் செல்கிறாள். ஆனால் பாபுசிங் குஜார் அவள் பின்னால் வந்துவிடுகிறான்.**

**இனி..**

அவன் கையில் துப்பாக்கி இருந்தது. அவன்தான் சுட்டிருக்கவேண்டும். யாரைச் சுட்டான் என்று சுற்றுமுற்றும் பார்த்தேன்.

யாரும் விழுந்ததாகவோ, காயம் பட்டதாகவோ தெரியவில்லை. அவன் வானத்தை நோக்கித்தான் சுட்டான் என்று பின்னர்தான் அறிந்தேன்.

விக்கிரம் மல்லாவுடன் ஐந்து ஆறுபேர் கூட வந்தார்கள். அவர்களும் துப்பாக்கிகளுடன் வந்தனர்.

எனக்கு அம்மா ராஜாராணிக் கதைகள் சொல்லியிருக்கிறாள். ராஜா கம்பீரமாக நடந்து வருவானாம். கையில் பொல்லாத வாள் வைத்திருப்பானாம். எதிரிகள் எல்லாம் ராஜாவைக் கண்டால் கிடுகிடுவென்று நடுங்கிப்போவார்களாம். சண்டைக்கு வருபவர்களை சதக் சதக்கென்று ராஜா வெட்டி வெட்டிச் சாய்த்துவிடுவானாம்.

விக்கிரம் மல்லா நடந்துவருவதைப் பார்க்க அந்த ராஜாதான் நடந்துவருவது போல இருந்தது. கண்கள் நிறைய, நெஞ்சு நிறைய மல்லாவைப் பார்த்தேன். பார்த்தேன். பார்த்துக்கொண்டே நின்றேன். உடம்பெல்லாம் சில்லிட்டுக் குளிர்ந்தது போல உணர்ந்தேன்.

முதல் முறையாக, என்றுமில்லாத மாற்றமாக என்னை நேருக்கு நேர் கூர்ந்து பார்த்தான் விக்கிரம் மல்லா.

"வா என்னுடன்!" என்றான். பிடறியில் பிடித்து தள்ளிவிடப்பட்டதுபோல, மனம் விக்கிரம் மல்லாவை நோக்கி ஓட எத்தனிக்க, ஒருவன் என் கரத்தைப் பிடித்துக் கொண்டான்.

இவன் யார் பிடிப்பதற்கு? என் மல்லா இருக்கும்போது எனக்கென்ன பயம்? கையைப் பிடித்தவனின் கன்னத்தில் விட்டேன் ஒரு அறை. "விடடா கையை நாயே!"

அவன் பிடியை விடாமல், "என்னை யாடி அறைந்தாய்?" என்று கேட்டபடியே தன் கையை ஓங்க, "விடு அவளை" என்று கண்டிப்பான உத்தரவு வந்தது விக்கிரம் மல்லாவிடம் இருந்து.

"மல்லா இதில் நீ தலையிடாதே!" என்றான் அவன்.

"பாபுசிங் குஜார் இல்லாத நேரத்தில் உனக்கு யார் தலைவன்?" என்று கேட்டான் விக்கிரம்மல்லா.

"நீ......நீங்கள்தான்!....ஆனால்....."

"என்னடா ஆனால்....?"

"பாபுசிங் குஜார் இங்குதான் இருக்கிறார். டேய் நீ போய் தலைவரை கூட்டிவா. தலைவர் வரட்டும் மல்லா, நீ அவரிடமே பேசிக் கொள்!"

பாபுசிங் குஜாரை அழைத்துவர ஒருத்தன் ஓடினான்.

"தலைவர் வரட்டும். இப்போது நான் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும்! விடு அவளை!"

என்னைப் பிடித்திருந்தவனுக்கு அசட்டுத் துணிச்சல் வந்திருக்க வேண்டும்.

"விடாவிட்டால்?" என்றான் சற்று அலட்சியமான தோரணையில்.

"உன் உயிரை விடவேண்டியிருக்கும்!" என்றான் மல்லா மிக நிதானமாக.

"கீழ்ச்சாதிக்காரன் நீ. என்னை மிரட்ட என்ன துணிச்சல்! பொறு சாகேப் வரட்டும்!" என்று அவன் சொன்னதுதான் தெரியும், அதேநொடியில், கண்ணிமைக்கும் நேரத்தில் விக்கிரம் மல்லாவின் முகத்தில் தெரிந்த கொடூரமான கோபத்தை நான் கண்டேன்.

அதேநேரம் விக்கிரம் மல்லாவின் துப்பாக்கியும் உயர்ந்தது.

'டுமீல்!'

எனக்கு காது இரண்டும் அடைத்ததைப் போல இருந்தது. என்ன நடந்தது என்பதே உடனே புரியவில்லை.

என்னைப் பிடித்திருந்தவன் பிடியை விட்டான். தன் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு மல்லாந்து சாய்ந்தான். இரத்தம் குபீர் என்று பாய்ந்துகொண்டிருந்தது.

"டேய் மல்லா!" என்று கத்தியபடியே பாபுசிங் குஜார் ஓடிவந்து கொண்டிருந்தான்.

**(தொடர்ந்து வரும்)**

# தங்கக் கூண்டில் சிறைப்பட்ட கிளி!

## மறுக்கப்பட்ட அழகியின் விருப்பம்

இம்முறை உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டவர் ஐரின் ஸ்க்வா. கிரேக்கத்தில் இருந்து வந்த தேவதை என்று எல்லோரும் புகழ்கிறார்கள்.

அந்தக் கிரேக்க தேவதை ஒருவருட காலத்திற்கு தனது சுதந்திரத்தை இழந்துவிட்டது என்பது பலருக்குத் தெரியாது.

உலக அழகிப் போட்டியை இந்தியாவில் நடத்தியது சிந்தோல், குட்நைட் மற்றும் அழகுசாதனப் பொருட்களின் தயாரிப்பு நிறுவனம்.

சமூக சேவை, நாட்டுக்குப் பெருமை என்று உலக அழகிப் போட்டியை இந்தியாவில் நடத்தியதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆயினும் முக்கிய நோக்கம் வியாபாரம்தான்.

உலக அழகியாகத் தெரிவு செய்யப்படும் அழகி ஒருவருட காலத்திற்கு சிந்தோல், குட்நைட் தயாரிப்பு நிறுவனத்தின் விளம்பரங் களுக்கு போஸ் கொடுத்தாக வேண்டும். மறுத்தால் உலக அழகிப் பட்டம் கோவிந்தா: பறித்துவிடுவார்கள்.

மற்றொரு நிபந்தனை என்ன தெரியுமா? உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டபோது உடலமைப்பின் அளவுகள் எப்படி இருந்தனவோ அந்த அளவுகள் குறிப்பிட்ட ஒருவருட காலத்திற்குள் அப்படியேதான் இருக்க வேண்டும். முன்னே பின்னே கூடிக்குறைந்தால் போச்! பட்டத்தைக் கொடுத்து விட்டு நடையைக் கட்ட வேண்டியது தான்.



கண்டபடி சாப்பிட்டு உடம்பைச் கெடுத்துக் கொள்ளக்கூடாது. எடை விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தங்கக் கூண்டில் சிறைப்பட்ட கிளியைப் போலத்தான் ஒருவருட காலத்திற்கு இருந்தாக வேண்டும்.

முக்கிய புள்ளிகளின் அழைப்புக்களை ஏற்று விருந்து நிகழ்ச்சிகளுக்குச் செல்ல வேண்டி ஏற்படலாம். அந்த நேரங்களில் உடம்பின் அழகு கெடாமல் நடந்துகொள்ள வேண்டும்.

உலக அழகி ஜரின் ஸ்கீவா மும்பாயில் தங்கியிருந்தபோது நடிகர் அக்ஷய் குமாரை சந்திக்க விருப்பப்பட்டார்.

சிந்தோல் நிறுவன அதிபரும், உலக அழகிப் போட்டியை முன்னின்று நடத்திய பெண்மணியுமான பரமேஸ்வர் கோத்றெஜ், அக்ஷய்குமாரின் விசிறி. அதனால் அக்ஷய் குமாரை இருவருமே இணைந்து சந்தித்தனர்.

இருவரையும் இடையோடு அணைத்தபடி அக்ஷய் குமார் போஸ் கொடுக்க கமராக்கள் கிளிக்கின.

அக்ஷய் குமாருக்கு முத்தம் கொடுத்தபடி ஒரு புகைப்படம் எடுக்க ஆசைப்பட்டார் உலக அழகி. அந்த விருப்பத்துக்கு கோத்றெஜ் கண்டிப்பாகத் தடைபோட்டுவிட்டார்.

தனியாக வேண்டுமானால் கொடுக்கலாம், பகிரங்கமாகக் கொடுத்தால் இமேஜ் கெட்டுப்போகும் என்று சொல்லிவிட்டார் கோத்றெஜ்.

பின்னர் உலக அழகியின் புறங்கையில் அக்ஷய் குமார் தனது உதடுகளால் முத்தமிடும் காட்சியை மட்டும் படம் பிடிக்க அனுமதித்தாராம் கோத்றெஜ்.

அதெல்லாம் ஒரு புறமிருக்க அக்ஷய் குமாரின்மீது உலக அழகிகளுக்கு ஏன் இப்படி ஒரு மயக்கம்?

முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராயும் அக்ஷய் குமாருடன் நெருக்கமாக இருக்கிறார். மற்றோர் உலக அழகி சுஷ்மிதா சென்னும் அக்ஷய் பின்னால் அலைந்தார்.

இதற்கிடையே அக்ஷய் குமார் சட்டை போட்டுக்கொண்டு நடிப்பதை அவரது இரசிகைகள் யாரும் விரும்புவதில்லை என்று மும்பாய் சஞ்சிகைகள் புள்ளிவிபரம் வெளியிட்டுள்ளன. அதனால் படங்களில் நடிக்கும்போதும் கவர்ச்சி நடிகைகள் போல சட்டையைக் கழற்றி வீசிக் கொண்டிருக்கிறார் அக்ஷய் குமார்.

பண்பாட்டுக்கு பெயர் போன இந்தியாவில் உள்ள இரசிகைகளே அக்ஷய் குமாரின் மீது பைத்தியமாக இருக்கும்போது, உலக அழகி மயங்கியதில் வியப்பில்லை.

'அக்ஷய் குமாருக்கு மச்சமடா' என்று பொறாமைப்படுகிறார்கள் ஏனைய ஹிந்திப்பட ஹீரோக்கள்.

# சம்பளம் 5 4 கோடி

கேட்டால் மலைப்பாகத்தான் இருக்கும். ஹொலிவூட் பட உலகில் நம்பர் வன் நடிகை டெமி மூர். ஒரு படத்திற்கு அவர் வாங்கியுள்ள சம்பளம் 54 கோடி ரூபாய். கைநீட்டி வாங்கியிருக்க முடியாது. பெரிய பை நீட்டித்தான் வாங்கியிருப்பார்.

'ஸ்ட்றிப்டீஸ்' என்ற படத்தில் நடிப்பதற்காகவே 54 கோடி சம்பளம். அப்படி என்ன கஷ்டமான பாத்திரம் என்கிறீர்களா? பொட்டுத்துணிகூட இல்லாமல் ஒரு காட்சியில் வருகிறார் டெமி மூர்.

டெமி மூரின் கணவர் புரூஸ் வில்லீசும் ஒரு பிரபல நடிகர். 'டை ஹாட்' உட்பட பல வெற்றிப்படங்களின் நாயகன்.

மனைவி 'பிறந்தநாள்' உடையில் நடித்த படத்தின் விசேஷ காட்சியைக் காண புரூஸ் வில்லீசும், அவர்களது இரு பெண் குழந்தைகளும் சென்றனர். திரையில் காட்சி வந்தபோது டெமி மூரைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டினாராம் புரூஸ் வில்லீஸ். வாழ்க இந்த இலட்சியத் தம்பதி!



# டயானாவுக்கு மிரட்டல்

டயானாவும்-சார்ள்சும் விவாகரத்துச் செய்து கொண்டது பழைய செய்திதான். அதன் பின்னணியில் உள்ள சமாச்சாரம் ஒன்று இப்போது வெளியாகி இருக்கிறது.

விவாகரத்துக்கு உடன்பட வேண்டுமானால் 70 மில்லியன் டொலர்கள் தர வேண்டும். ஒரு ஜெட் விமானமும் வேண்டும் என்று முதலில் ஒரு போடு போட்டவர் டயானா.



இறுதியில் 30 மில்லியன் டொலர் கொடுத்து டயானாவை வெட்டிவிட்டனர். அதற்கு டயானா எப்படிச் சம்மதித்தார்? என்பதுதான் கேள்வி.

விடை இப்போது கிடைத்துவிட்டது.

"ஏதோ 30 மில்லியன் டொலராவது கிடைக்கிறதே(168கோடி ரூபாய்கள்) கிடைத்த வரை லாபம் என்று டயானா போய்விடவேண்டியதுதான். இல்லாவிட்டால் டயானாவை அவமானப்படுத்தி தலை குனியவைக்க எமக்குத் தெரியும்!" என்று அரச குடும்பத்தினர் மிரட்டினார்களாம்.

அது வெறும் மிரட்டல் அல்ல. டயானா பல குடும்பங்களில் குழப்பம் விளைவித்தார் என்பதை நிரூபிக்க அரச குடும்பத்தினர் பல சாட்சிகளைத் தயாராக வைத்திருந்தனராம்.

ரக்பி விளையாட்டு வீரர் சார்லிங் என்பவரின் மனைவி ஜுலியா முதலாவது சாட்சி. தங்களுக்குள் விரிசல் வர டயானா எப்படியெல்லாம் காரணமாக இருந்தார் என்று விலாவாரியாக விளக்கத் தயாராக இருந்தாராம் அவர்.

டயான்ஹோர் என்னும் ஃபிரான்ஸ் தொழிலதிபருடனும் டயானா ஒட்டி உறவாடினார். அவரது மனைவியும் சாட்சி சொல்ல ரெடியாக இருந்தார்.

இராணுவ அதிகாரி ஒருவருடனும் டயானாவுக்கு நெருக்கம் இருந்தது. அவரது மனைவியும் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல முன் வந்தார்.

பார்த்தார் டயானா: தனக்கு எதிராக மனைவிகள் பட்டாளமே திரண்டு வந்து சாட்சி சொன்னால் பெயர் கெட்டுவிடும். அதனால் கிடைப்பதைப் பெற்றுக் கொள்வதே புத்திசாலித்தனம் என்று பணிந்து போனாராம்.



படிப்பகம்

www.padippakam.com




## உயர்ந்த மனுசி

← உலகில் இன்று மிக உயரமான பெண்மணி சாண்டி அலன். நன்றாக நிமிர்ந்து நின்றால் இவரது உயரம் 7 அடி 7 அங்குலம். (உலகில் இன்று மிக உயரமான ஆண் அலம் சன்னா அவரது உயரம் 7 அடி 7 1/4 அங்குலம்)

உலகில் மிக உயரமான பெண்மணி ஜென் வல்போட். (பிறப்பு 1895- மறைவு 1922) இன்று அவர் உயிரோடு இல்லாவிட்டாலும், அவரது எலும்புக்கூடு மிகப் பத்திரமாக இருக்கிறது. இலண்டனில் உள்ள பெமிங்காம் மருத்துவக் கல்லூரியில் அவரது எலும்புக்கூட்டை கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வருகிறார்கள். இறக்கும்போது அவரது உயரம்: 7 அடி 11 அங்குலம்.

ஜென் வல்வோட்டின் பின்னர் உயிரமான பெண்மணி சாண்டி அலன்தான். இவரது வயது 41. இதுவரை தனிக்கட்டையாகவே இருக்கிறார். பொருத்தமான ஜோடி கிடைக்கவில்லையாம். ஆனாலும் வருத்தமில்லைப் போல் தெரிகிறது. சமீபத்தில் தாய்லாந்து ஜனாதிபதி இவரை அழைத்து தேநீர் விருந்து கொடுத்துக் கௌரவித்தார். உயரத்தால் பெருமை (பட உதவி: யூ.எம்.அன்சார்) ●

### தகவல் பெட்டி

## மக்களைப் பெற்ற மகராசி



உலகில் எத்தனையோ உற்பத்திகள் நடைபெற்று வருகின்றன. ஆயினும் வெகு தீவிரமாகவும், சில சமயங்களில் பொழுது போக்காகவும் நடைபெற்றுவரும் உற்பத்தி மக்கள் உற்பத்திதான்!

இரண்டோடு நிறுத்திக் கொள்ளலாம் என்ற உபதேசத்தை பின்பற்ற விரும்பினாலும், தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளால் (?) எல்லோராலும் அது முடிவதில்லை. ஆனாலும் பிரிட்டனைச் சேர்ந்த மார்கறெட் மக்ரோட் என்னும் தம்பதி அளவுக்கு குடும்பக் கட்டுப்பாட்டை வேறு யாரும் புரட்டி எடுக்கவில்லை.

திருமதி மார்கறெட் மக்ரோட்டுக்கு இப்போது 69 வயது. உலகில் இன்றைய நிலையில் அதிக பிள்ளைகள் பெற்றெடுத்த மகராசி இவர்தான். மொத்தம் 22 பிள்ளைகள். 12 பேர் ஆண்பிள்ளைகள். 10 பேர் பெண் பிள்ளைகள். இந்த வெற்றிகரமான சாதனைப் பட்டியலில் ஒரே பிரசவத்தில் ஒரு தடவை மூன்று பிள்ளைகளும், பின்னர் இரண்டு தடவைகள் இரட்டைப் பிள்ளைகளையும் பெற்றெடுத்தது போனஸ் சாதனை. சாதனையாளரான மார்கறெட்டும், சாதனைக்கு உதவிகரமாக இருந்த கணவரும், மற்றும் பிள்ளைகளில் ஒரு பகுதியினரும் படத்தில் காணப்படுகின்றனர். குடும்பமா- பல்கலைக்கழகமா? எப்படியோ மார்கறெட் கின்னஸ் அம்மாவாகிவிட்டாரே! ●

## வானத்தில் நீராட்டு

↓ மழை வந்தால் வீதிகள் வெள்ளக் காடாவது நம்நாட்டில் மட்டும் தான் என்று கவலைப்பட வேண்டாம். சவுதி அரேபியாவில் நான்கு நாட்களாக வானம் பொத்துக் கொண்டு இடியோடு கொட்டியது. பூமியால் சமாளிக்க இயலவில்லை. வீதிகள் வெள்ளக் காடானதால், கார்கள்கூட படகுகளாக மிதக்கத் தொடங்கிவிட்டன. அப்போது 'கிளிக்' செய்யப்பட்ட படம்தான் இது. (பட உதவி: யூ.எம்.அன்சார்)




## நிலவில் ஒரு சவாரி

↓ நிலத்தில் வாகனம் ஓடுவதைப் பார்க்காதவர்கள் கிடையாது. நிலவின் நிலப்பரப்பில் வாகனம் ஓடுவதைப் பார்த்திருக்கிறீர்களா?

முதன் முதலாக நிலவின் நிலப்பரப்பில் வாகனத்தில் சவாரி செய்த பெருமை டேவிட் ஸ்காட், ஜேம்ஸ் இர்வின் ஆகிய இரு அமெரிக்க விண்வெளி வீரர்களைச் சேரும்.

1971ம் ஆண்டு யூலை மாதம் இரண்டு விண்வெளி வீரர்களும் நிலவில் இறங்கினார்கள். நிலவின் நிலப்பகுதியை ஆராய்ச்சி செய்வதற்காக இந்த லூனர் ரோவிங் என்று அழைக்கப்படும் வாகனத்தில் ஒரு ரவுண்ட் அடித்தனர். பற்றரியில் இயங்கும் இந்த வாகனத்தின் முன் சக்கரம் பழுதடைந்துவிட்டது. அப்படியிருந்தும் பின்சக்கரங்களின் உந்து சக்தியால் இரண்டு மணிநேரத்தில் ஐந்து மைல் தூரம் பயணம் செய்தனர். விண்வெளிக்குச் செல்லும்போது விண்கலத்தின் உள்ளே இந்த வாகனத்தையும் கொண்டு சென்றனராம்.



## அடடா அழகின் மாநாடா?

→ பெண்களின் கூர்மையான மற்றும் அழகான விழிகளை கத்திமுனையோடு ஒப்பிடுவார்கள் ரசனையுள்ள கவிஞர்கள். என் வாளும், உன் விழியும் சந்தித்தால் என்றொரு பாடலே இருக்கிறது. படத்தில் கத்தி விழிக் காரிகை ஒருத்தி கையில் கத்தியோடு தோன்றியிருப்பது போருக்காக அல்ல. பாஷன் ஷோவுக்காக.

பாஷன் ஷோக்களில் விதம் விதமான புதுமைகளைப் புகுத்தி காண்போரை வியப்போடு மிரளவைக்கிறார்கள். இந்த நற்காரிகையின் உடலில் உள்ள ஆடை இரும்பு வயர்களால் நெய்யப்பட்டது. அருகில் காவலுக்கு நிற்கும் கட்டிளம் காளையின் உடையும் அதேதான். உக்ரேனின் தலைநகரான கீவ் நகரில் கிறிஸ்மஸ் சம்பிரதாய விழாவை முன்னிட்டு நடைபெற்ற சர்வதேச பாஷன் விழாவில்தான் இந்த புதுவித ஆடையுடன் தோன்றினார் அழகி. இனி ஆடைகள் செய்யத் துணியே தேவையில்லைப் போலிருக்கிறது.





படிப்பகம்

www.padippakam.com

## ரம்பாவின் வேகம் அண்ணனுக்கும் சான்ஸ்

கவர்ச்சி விருந்து படைப்பதில் சற்றும் வஞ்சகம் செய்யாதவர் ரம்பா. அவரது கவர்ச்சிக்குக் காரணம் என்னவென்று ஜொள்ளுப்பிரியர்கள் பட்டிமன்றமே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ரம்பாவும் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் வேகத்தில் ஒரே நேரத்தில் பல படங்களில் ஒப்பந்த மாகிவிடுகிறார்.

தேதியைக் கொடுத்துவிட்டு படப்பிடிப்புக்குச் செல்லாவிட்டால் இயக்குநர் கோபப்படுவார், ஹீரோ கோபப்படுவார் என்ற பயமெல்லாம் ரம்பாவுக்குக் கிடையாதாம். அவர்கள் கோபத்தை எப்படித் தணிப்பது என்ற விபரமெல்லாம் விரல்நுனியில் இருக்கும்போது பயம் ஏன்? ரம்பாவின் மார்க்கெட்டுக்கு மவுசு இருக்கும் போதே தானும் நடிக்க ஆசைப்பட்டார் ரம்பாவின் அண்ணன். அவரது பெயர் வாசு. யாரிடம் சிபாரிசு செய்யலாம் என்று யோசித்தார் ரம்பா. ஒரு புதுமுக இயக்குநர் வசமாக மாட்டினாராம். ரம்பாவின் சிபாரிசை தட்ட முடியாமல், தனது படத்தில் வாசுவைக் கதாநாயகனாகப் போட்டுள்ளார் அந்த இயக்குநர்.

## காலம் கடந்தாலும்......

கடந்த 15 வருடமாக நடித்து வருகிறார் ஊர்வசி. இடையே மலர்ந்த காதல்களும் முறிந்துபோய்விட்டன.

ஊர்வசிக்கு எப்போது கல்யாணம்? என்று கேட்பவர்களிடம், அவர் திட்டவட்டமாகத் தெரிவிப்பது யாதெனில்;

"எங்கள் வீட்டில் எல்லோருக்குமே காலம் கடந்துதான் திருமணம் நடந்தது. என் கல்யாணமும் அவசரக் கோலத்தில் நடக்காது. நிச்சயமாக இரகசியக் கல்யாணம் செய்ய மாட்டேன். ஊரறியத்தான் என் கல்யாணம் நடக்கும்."

## ரம்யா மறுப்பு

நடிகை ரம்யா கிருஷ்ணனுக்கும் தெலுங்குப் பட இயக்குநர் ராகவேந்திரராவுக்கும் இடையே ஒரு இது என்பது பழைய செய்தி. இப்போது இருவரும் பிரிந்துவிட்டனர்.

"ராகவேந்திரராவ் வீட்டில் நான் தங்கியது உண்மை. ஹோட்டல்களில் தங்கியிருக்கக் கட்டுப்படியாகவில்லை. அதுதான் அவரது வீட்டில் தங்கினேன். ஆனால் ஒரு முறைகூட அவரது படுக்கையறைப் பக்கம் சென்றதே கிடையாது." என்று சொல்லியிருக்கிறார் ரம்யா கிருஷ்ணன்.

## என்ன செய்யலாம்?

அந்தக்கால கவர்ச்சி நடிகை ஜோதிலட்சுமி. முத்து படத்தில் அவரை ஒரு பாடலுக்கு (கொக்கு சைவக் கொக்கு) ஆடவைத்தார் ரஜினி. அதன்பின்னர் பிஸியாகி விட்டார் ஜோதிலட்சுமி. அதனால் தாயாரின் தகுந்த யோசனைகள் இல்லாமல் ஆடக்கஷ்டப்படுகிறார் ஜோதிமீனா.

'நேசம்' படத்தில் தாயும், மகளும் ஒன்றாக நடனமாடுகிறார்கள். இருவர் மத்தியிலும் அகப்பட்டு நொந்துபோனாராம் அஜித்குமார்.

அஜித்குமாரை கட்டியணைத்துக் கொண்டு இருவரும் பாடுவதுபோல கவர்ச்சி நடனம் வைத்த இயக்குநரை என்ன செய்யலாம்? ஒன்றும் செய்ய முடியாது?

## வெள்ளரிக்கா நடிகை

'காதல் கோட்டை' படத்தில் 'வெள்ளரிக்கா பிஞ்சு வெள்ளரிக்கா...' என்ற பாடல் பிரபலம். அந்தப் பாடலுக்கு ஆடிய ராணியும் பிரபலமாகி தூள் கிளப்புகிறார்.

ஆறு தமிழ்ப் படங்களிலும், மூன்று தெலுங்குப் படங்களிலும் பிஸியாக நடித்துவருகிறார்.

முதன் முதலில் ஒட்டோவில் படப்பிடிப்புக்குச் சென்ற ராணி, இப்போது சொகுசுக்காரில் படப்பிடிப்புக்குச் செல்கிறார். அது மட்டுமல்ல சொந்தமாக வீடும் வாங்கி குடியேறி இருக்கிறார். படத்தில் நடிப்பதால் மட்டும் இவ்வளவு விரைவாக- இத்தனை வசதிகள் வந்திருக்க முடியாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

## நாட்டுப் பாடல்

'எட்டுப் பட்டி ராசா' படத்தின் பாடல்களை இயக்குநர் கஸ்தூரிராஜாவே எழுதியிருக்கிறார். 'நாட்டுப் புறப்பாட்டு' படத்தை இயக்கியது மூலம் புகழ் பெற்றவர் கஸ்தூரி ராஜா.

நாட்டுப்புறப் பாடல்களில் கஸ்தூரிராஜாவுக்கு அலாதியான பிடிப்பு. எட்டுப்பட்டி ராசா படத்தில் நாட்டுப்புறப் பாடல் ஸ்டைலில் கஸ்தூரிராஜா எழுதியுள்ள பாடலின் முதல் வரிகள் இவை. புல்லரிக்கிறதா பாருங்கள்.

*"நாவற் பழத்தைக் காட்டி*
*நைசு பண்ணப் பார்த்தேன்—அவ*
*கொய்யாப் பழம் வேணுமின்னு*
*சொனட்டிக்கிட்டுப் போனா"*

## அப்பாசுக்குத் தொல்லை

ரசிகை ஒருவரின் ஃபோன் தொல்லையால் அப்பாஸ் தனது தங்குமிடத்தை மாற்றிக்கொண்டார். புதிய நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் குடிபுகுந்தார். எப்படியோ அந்தப் ஃபோன் நம்பரையும் தெரிந்துகொண்டனர் ரசிகைகள். அங்கும் தொடர்ந்து ஃபோன் வர வெறுத்துப்போனாராம் அப்பாஸ்.

இனி தனக்கு வரும் ஃபோன்களை வடிகட்டித் தரவேண்டும் என்று ஹோட்டல் நிர்வாகத்திடம் சொல்லி வைத்திருக்கிறாராம்.

அதனால் அப்பாசுக்குப் ஃபோன் எடுத்தால் ஆயிரத்தெட்டு கேள்வி கேட்டுவிட்டுத்தான் லைன் கொடுக்கிறார்கள்.

## மினி சினி

* இந்தி... கமல்... சன்... மீனா... நடிக்...
* பார்த்திபன் நடிக்கும் 'வாய்மையே... தாய் ஜோதிலட்சுமி இணைந்து ந... படத்திலும் இருவரும் இணைந்து...
* பாரதிராஜா இயக்கும், 'சிறகுகள்... பி.ஜி.ஸ்ரீகாந்த். அடுத்து ஒரே நேரத்...
* பாண்டியராஜன்- ரஞ்சிதா நடித்து... வைத்த பெயர் 'சிவபார்வதி'. பின்... மாற்றினார். அடுத்து யாதவ் தய... வைத்துள்ளார்.
* 'சுந்தர புருஷன்' படம்... தற்போது 'உனக்கும் என... இருக்கிறார். இவர் இந்... பாடல் ஒன்றைப் பாடி...
* 'உதயம்' படத்தை... தற்போது இயக்... 'வைஃப் ஒவ் வி... நடிக்கிறார்.
* வில்லன் நடிக... படத்தை இயக்க... 'சங்கிலி' படத்தி...
* தமிழில் கே. பா... சுருதி. அடுத்து ப... கதாநாயகியாக...
* 'தென்றலே எ... கதாநாயகியாக... நடிக்காமல் இ... தொடங்கியுள்ள... அண்ணி வேட...
* வி.சேகர் இய... நடித்த 'பொண்... 'கொட்டபுரத்தி... வருகிறது.



விஜயகாந்த்-ரம்பா
படம்: தர்மச்சக்கரம்

## ரம்பாவுக்குப் போட்டி

விஜயகாந்த்-ரம்பா நடித்துள்ள 'தர்மச்சக்கரம்' படத்தில் ஐந்து இயக்குநர்கள் வேலை செய்திருக்கிறார்கள். கே.எஸ்.ரவிக்குமார், ஆர்.வி.உதயகுமார், மணிவண்ணன், பாலு அனந்த், ஆர்.சுந்தர்ராஜன், ஆகியோரே அந்த ஐந்துபேர். முதன் முதலாக வெளியார் படத்துக்கு ஆர்.வி.உதயகுமார் பாடல் எழுதியிருப்பதும் இதில்தான்.

நடன இயக்குநர் தருண்குமார் முக்கிய வில்லனாக தோன்றுகிறார். மும்பாய் நடிகைகளான தீப்தி பட்நாகர், ராகா ஆகியோரும் நடித்துள்ளனர்.

மற்றொரு முக்கிய தகவல்; முன்னாள் கவர்ச்சி நடிகை ஜோதி லட்சுமி ரம்பாவுடன் இணைந்து ஒரு கலக்கல் நடனம் ஆடியுள்ளார். ஒல்ட் இஸ் கோல்ட்தானா? என்பதுதான் போட்டி!

## 97இல் அறிமுகங்கள்

1997இல் தமிழ்ப்படங்களின் மூலம் அறிமுகமாகும் நாயகிகள் இவர்கள்தான்;

ஐஸ்வர்யாராய் ('இருவர்'), கஜோல் ('மின்சாரக் கனவு'), ஒவியா ('சாதிசனம்'), கீர்த்தி ('தேவதை'), டிம்பிள் ('காத்திருந்த காதல்'), ஈஸ்வரி ராவ் ('ராமன் அப்துல்லா'), சிம்ரான் ('நேருக்குநேர்'), மானு ('காதல் மன்னன்').

97இல் அறிமுகமாகும் நாயகர்கள்: எபி('கோடீஸ்வரன்'), சீனிவாசவர்மன் ('ஏப்ரல் பூக்கள்'), வெங்கட்பிரபு ('பூஞ்சோலை', 'வாண்டட்') எஸ்.பி.பி.சரன் ('வாண்டட்'), அரவிந்தன்('சன்னாசி').



ரம்பா
படம்: பம்பாய் காதலி

## நாயகி திடீர் மாற்றம்! பின்னணியில் நடந்த கதை

'கூட்டாளி' படத்தில் கார்த்திக் ஜோடியாக நடித்தவர் ஈஸ்வரிராவ். இருவரும் ஜோடியாக நடித்த பல காட்சிகள் படமாக்கப்பட்டிருந்தன. முரசு சினிவிசிட்டிலும் படங்கள் வெளியாகி இருந்தன.

இடைநடுவில் கதாநாயகியை ஒரே தூக்காகத் தூக்கி வீசிவிட்டார்கள். இப்போது கார்த்திக் ஜோடியாக ஹீராவை வைத்து முதலில் இருந்து ஆரம்பித்துள்ளார்கள்.

திடீர் மாற்றம் ஏன் என்று விசாரித்தபோது கிடைத்த விபரங்கள் விகாரமானவை. கதாநாயகியாக நடித்த ஈஸ்வரிராவ் இயக்குநர் பாலுமகேந்திராவின் 'ராமன் அப்துல்லா' படத்திலும் கதாநாயகியாக நடித்துவருகிறார்.

நடிகை அர்ச்சனாவுக்கு பல விருதுகள் கிடைக்க காரணமாக இருந்தவர் பாலுமகேந்திரா. அவரது பிரியத்துக்கு உரியவராக நடந்து கொண்டவர் அர்ச்சனா. பாலுமகேந்திராவுக்கு நன்றிக்கடன் செலுத்திய அர்ச்சனா தற்போது மெல்ல விலகிக் கொண்டார்.

இப்போது ஈஸ்வரிராவை தட்டிக்கொடுத்து முன்னுக்கு கொண்டுவந்து காட்டுவதில் குறியாக இருக்கிறார் பாலுமகேந்திரா. அதனால் ஈஸ்வரிராவும் அவரை மலையாக நம்பியிருக்கிறார்.

ராமன் அப்துல்லா படத்தின் கதை விவாதம் என்று பாலுமகேந்திராவுடனேயே அதிக நேரம் இருந்துவிடுவதால், கூட்டாளி படத்தின் படப்பிடிப்புக்கு உரிய நேரத்தில் செல்லாமல் இழுத்தடித்தாராம் ஈஸ்வரிராவ்.

கார்த்திக்கிற்கும் ஈஸ்வரிராவின் போக்குப் பிடிக்கவில்லை. கார்த்திக்கை குளிரவைக்க நேரத்தைச் செலவிட ஈஸ்வரிராவாலும் முடியவில்லை.

வளர்ந்து வரும் நடிகைகள் ஹீரோவையும், இயக்குநரையும் கவனிக்கும் விதத்தில் கவனிப்பதுதான் வழக்கம். அந்த வழக்கத்தை ஈஸ்வரிராவ் கடைப்பிடிக்க முடியாமல் போனதால் படத்தில் இருந்தே தூக்கிவிட்டார்கள்.

சமீபகாலமாக ஹீராவின் சில படங்களையும், அவரது அதிரடியான அணுகுமுறைகளையும் கவனித்துவந்தார் கார்த்திக். அதனால் 'கூட்டாளி' படத்தில் தனது ஜோடியாக ஹீராவை சிபாரிசு செய்திருக்கிறார். ஈஸ்வரிராவ் செய்த தவறை ஹீரா ஒருநாளும் செய்யமாட்டார். அவர்தான் விபரம் அறிந்தவராச்சே.

## திண்டாட்டம்

படத்திற்கு பெயர் வைப்பதில் ஏற்பட்டுள்ள திண்டாட்டம் அறிந்த விஷயம்தான்.

சமீபத்தில் பூஜைபோடப்பட்டுள்ள ஒரு படத்தின் பெயரைப் பாருங்கள்.

'முதல் மனைவிகள் மாதர் சங்கம்'. பெயர் தட்டுப்பாடு இருக்கலாம். அதற்காக இப் படியா? பார்த்த படத்தின் பெயரைச் சொல்ல முடியாமல் நம்மைத் திண்டாட வைத்து விடுவார்கள் போலிருக்கிறது.

## துபாயில்...

'அவதாரம்' ப... இயக்கும் படம் 'தே...

கதை, திரைக்க... வதுடன் கதாநாயக... படத்தில் மற்றொரு... கதாநாயகியாக புது... றார். பெயர்: கீர்த்...

தலைவாசல் விஜ... ஆகியோரும் நடிக்... ராஜா. பாடல்கள்:...

'தேவதை' படத்... நாட்டில் நடந்துவ... பிடிப்பு நடைபெறும்...

## எது ...

ஒரு டசினுக்கு... பிஸியாக நடித்துவரு... படங்களின் படப்பிட... விட்டன. அதில் எத... என்பதுதான் குழப்ப... வெளியீடாக வருவத... விடுவது என்று குழ... தயாரிப்பாளர்கள். ... வர் அஜித்குமார்தா...

அவரோ படப்பி... களிலும் பிஸியாக இ... கிறது.

## மாறு...

ஒவ்வொரு மொ... போது வெவ்வேறு ... நடிகைகளின் வழக்...

அந்த வழக்கத்... ஒருவரும் பின்பற்று... தெலுங்கில் கீரவா... இந்தியில் எம்.எம்.... இசையமைக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

# சி னி வி சி ட்

மில் 'லேடீஸ் ஒன்லி' படத்தைத் தயாரித்து வரும் , அடுத்து இந்தியில் தயாராகவுள்ள 'அவ்வை முகி' படத்தில் நடிக்கவிருக்கிறார். தமிழில் நடித்த வேடத்தில் இந்தியில் ஜூஹி சாவ்லா ்கவுள்ளார்.

வெல்லும்' படத்தில் ஜோதி மீனாவுடன் அவரது னமாடியுள்ளார். இதைத் தொடர்ந்து 'நேசம்' ஒரு பாடல் காட்சியில் நடனமாடுகின்றனர்.

முறிவதில்லை' படத்தைத் தயாரித்து வரும் தில் இரண்டு படங்களைத் தயாரிக்க இருக்கிறார்.

ள்ள 'புருஷன் பொண்டாட்டி' படத்திற்கு முதலில் ானர் தயாரிப்பாளர் யாதவ் அந்தப் பெயரை ாரிக்கும் படத்திற்கு 'சிவபார்வதி' என்று பெயர்

மூலம் கதாநாயகனாக உயர்ந்த லிவிங்ஸ்டன் ்க்கும் கல்யாணம்' படம் மூலம் இயக்குநராகி ப்படத்தில் முதன் முறையாக சொந்தக்குரலில் யுள்ளார்.

இயக்கிய ராம்கோபால் வர்மா தெலுங்கில் தம் படமொன்றுக்கு வைத்திருக்கும் பெயர் .வரப்பிரசாத்' இதில் வினீத் கதாநாயகனாக

ர் பொன்னம்பலம் முதன் முதலாகத் தயாரிக்கும் ப் போகிறார் சி.வி. ராஜேந்திரன். இவர் தான் ன் மூலம் பிரபுவை அறிமுகப்படுத்தியவர்.

லசந்தரின் 'கல்கி' படம் மூலம் அறிமுகமாகியுள்ள ாரதிராஜா, பாலுமகேந்திரா இயக்கும் படங்களில் நடிக்கவுள்ளார்.

ன்னைத் தொடு', 'ஆனந்த்' போன்ற படங்களில் நடித்த ஜெயஸ்ரீ, திருமணத்திற்குப் பின் ந்தார். இப்போது மீண்டும் படங்களில் நடிக்கத் ார். 'விவசாயி மகன்' படத்தில் ராமராஜனுக்கு த்தில் நடிக்கிறார்.

க்கத்தில் சந்திரசேகர்- பானுப்பிரியா ஜோடியாக டாட்டி சொன்னா கேட்டுக்கணும்' மலையாளத்தில் ் கூட்டுக் குடும்பம்' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டு

## சிவாஜி வருகிறார்

ஒரு வருட காலம் திரையுலகைவிட்டு ஒதுங்கி ஓய்வாக இருந்தார் சிவாஜிகணேசன். 'ஆடிய காலும், பாடிய வாயும்' சும்மா இருக்காதல்லவா. மீண்டும் நடிக்க வருகிறார் சிவாஜி.

செய்தி அறிந்தவுடன் துள்ளிக் குதித்தாராம் விஜய். சிவாஜியுடன் நடிக்கப்போவது விஜய்தான். சந்தோசம் வரும் தானே!

சிவாஜி தந்தையாக நடிக்க மகனாக விஜய் நடிக்கப் போகிறார். படத்தின் பெயர் மற்றும் ஏனைய விடயங்கள் இனித்தான் முடிவு செய்யப்படும்.

## வில்லன் இறக்குமதி

இந்திப் படங்களில் அசத்தலான வில்லனாக நடிப்பவர் அனுபம்கேர். முதன்முதலாக தமிழ்ப்படம் ஒன்றில் நடிக்கப் போகிறார்.

பிரபுதேவா-அப்பாஸ்-ரம்பா நடிக்கும் 'வி.ஐ.பி' படத்தில்தான் நடிக்கப்போகிறார் அனுபம் கேர்.

படத்தின் கதை பிடித்திருந்ததால் உடனடியாகச் சம்மதம் கொடுத்துவிட்டாராம் அனுபம் கேர். பெரும் பொருட்செலவில் பிரமாண்டமாக உருவாகிவருகிறது வி.ஐ.பி.

## ஐந்துக்கு மேல் வேண்டாம் இசைப்புயலின் பொலிசி

96இல் தமிழ்ப்பட இசையமைப்பாளர்களில் கொடிகட்டிப் பறந்தவர் ஏ.ஆர். ரகுமான். இளையராஜாவுக்கும் ரகுமானுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் என்ன தெரியுமா? இளையராஜா கொடிகட்டிப் பறந்த காலத்தில் வருடத்தில் 40 படங்களுக்கு மேல் இசையமைத்தார்.

ஏ.ஆர்.ரகுமான் வருடத்திற்கு ஐந்து படங்களுக்கு மேல் இசையமைக்க ஒப்புக்கொள்ள மாட்டார்.

ரகுமானின் பாணியில்தான் இசை வேண்டும் என்று தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும் ஒற்றைக்காலில் நிற்கிறார்கள். அதனால் புதிய இசையமைப்பாளர்களின் தேவை அதிகமாகிவிட்டது.

தேவா, சிற்பி, ஆதித்யன், மரகதமணி, வித்யாசாகர், இளையராஜாவின் வாரிசுகளான கார்த்திக்ராஜா, யுவன் சங்கர்ராஜா ஆகியோர் உட்பட பல இசையமைப்பாளர்கள் தற்போது இருக்கிறார்கள். இந்த ஆண்டிலும் பலர் அறிமுகமாகிறார்கள். அவர்களில் சிலரது பெயர்களும், அவர்கள் இசையமைக்கும் படங்களும்.

ராக்னிஷோமர்: 'லவ்டுடே','ஜாலி'.
ஆனந்த்: 'சக்தி'
ரஞ்சித்: 'வி.ஐ.பி'
ஓவியன்: 'தினம்தோறும்'
பரத்வாஜ்: 'காதல் மன்னன்'
ப்ரதீப்ராஜ்: 'கடவுள்'
ஷா: 'உளவுத்துறை'.

## சரத்-நக்மா நெருக்கம் தம்பதிகளாகத் தயார்!

முன்னர் பிரபு-குஷ்பு காதல் விவகாரத்தைப் போல தற்போது பரபரப்பாகப் பேசப்படும் விவகாரம் சரத்குமார்-நக்மா காதல்!

'இரகசியப் பொலிஸ்' படத்தில் தொடங்கி 'அரவிந்தன்' படம் முடிவதற்கிடையில் இருவரும் இலட்சியக் காதலர்களாக மாறிவிட்டனர்.

முன்னர் ஹீராவுடன் நெருக்கமாக இருந்தவர் சரத். திடீரென்று ஹீரா கழன்று கொண்டார். இந்தி சினிமாப் பக்கம் சென்றுவிட்டார். அங்கு பிரபல நடிகர்கள் பலரின் பலத்த ஆதரவு கிடைத்ததும் சரத்துக்கு குட்பை சொல்லிவிட்டார் ஹீரா.

ஹீராவுக்காக பங்களா ஒன்றை வாங்கியிருந்த சரத், ஹீரா ஏமாற்றி விட்டதால் பின்னர் அந்தப் பங்களாவை மூடியே வைத்திருந்தார்.

நக்மாவுடன் நகமும் சதையுமாக மாறிவிட்ட பின்னரே அந்தப் பங்களா மீண்டும் தூசிதட்டித் திறக்கப் பட்டது.

படப்பிடிப்பை முடித்துக்கொண்டு நக்மா நேராக சரத்தின் பங்களாவுக்குச் சென்றுவிடுகிறார். சரத்தும் சமீபகாலமாக வீட்டுக்குச் செல்வதைக் குறைத்துக் கொண்டாராம். சரத்தின் மனைவிக்கும் விஷயம் அரசல் புரசலாகத் தெரியுமாம்.

மனைவியின் சம்மதத்துடன் நக்மாவை மணம் முடிக்கத் திட்டமிட்டுள்ளாராம் சரத்குமார். மனைவி சம்மதிப்பாரா என்பதுதான் தெரியவில்லை.

சரத்குமார்-நக்மா நடித்துள்ள 'அரவிந்தன்' படத்தில் இருவருக்கும் உள்ள நெருக்கம் காட்சிகளில் துலக்கமாகத் தெரிகிறதாம்.

இதற்கிடையே கார்த்திக்குடனும் நட்பாக இருந்த நக்மா தற்போது அவரைச் சந்திப்பதையும், தொலைபேசியில் பேசுவதையும் குறைத்துக் கொண்டுள்ளார். சரத்குமாரின் நட்பை கெட்டியாக்கிக் கொள்ள வேண்டும் என்பதால் அப்படி ஒரு ஜாக்கிரதையாம்.

## பஞ்சுவின் ரொமன்ஸ்

அலெக்ஸாண்டர் படத்தை அடுத்து பஞ்சு அருணாசலம் தயாரிக்கும் படத்திற்கு 'ரொமான்ஸ்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் முழுக்க முழுக்க புதுமுகங்கள் நடிக்கிறார்கள். ராபாட்-ராஜசேகரன் இரட்டையர்கள் இதை இயக்குகிறார்கள்.



கரண்-அஸ்வினி
படம்: ராமன் அப்துல்லா



வெங்கட்பிரபு-ரசிகா
படம்: பூஞ்சோலை

## எட்டுப் படங்கள்

திறமையான இளம் கலைஞர்களுக்குத் தொடர்ந்து வாய்ப்புக்களை வழங்கி வருபவர் தயாரிப்பாளர் ஆர்.பி. சௌத்ரி. கடந்த வருடத்தில் 'செங்கோட்டை', 'பூவே உனக்காக', 'சுந்தர புருஷன்', 'மிஸ்டர் ரோமியோ' ஆகிய நேரடித் தமிழ்ப் படங்களையும், அம்மன் என்ற மொழிமாற்றப்படத்தையும் தயாரித்து வெளியிட்டார். இந்த வருடம் ஆர்.பி.சௌத்ரி எட்டுப்படங்களைத் தயாரிக்க எண்ணியுள்ளார். முதலில் பாலசேகர் என்ற புதிய இயக்குநர் தயாரிக்கும் 'லவ்டுடே', விக்ரமன் இயக்கும் 'சூரிய வம்சம்', திலீப்குமார் இயக்கும் 'ஜாலி' ஆகிய மூன்று படங்களைத் தொடங்கியுள்ளார்.



மோகன்லால்-ஐஸ்வர்யாராய்
படம்: இருவர்

## 'தேவதை'

்த்தின் பின்னர் நாசர் வதை'.

ைத, வசனம் எழுதி இயக்குாகவும் நடிக்கிறார் நாசர். கதாநாயகன் வினீத். முகம் ஒருவர் அறிமுகமாகி ். அவர்தான் தேவதை. ய், ஜனகராஜ், சத்யப்பிரியா ின்றனர். இசை: இளைய பழனிபாரதி, அறிவுமதி. தின் படப்பிடிப்பு துபாய் ந்கிறது. துபாயில் படப் முதல் படமும் இதுதான்.

## ...முதலில்?

மேற்பட்ட படங்களில் கிறார் அஜித்குமார். ஆறு டிப்புக்கள் முடிவடைந்து ை முதலில் வெளியிடுவது ம். 'நேசம்' படம் பொங்கல் ால், அடுத்து எதை வெளி ப்பத்தில் இருக்கிறார்கள் ுடிவு சொல்ல வேண்டிய ன். டிப்பிலும், வேறு பிடிப்புக் ப்பதால் குழப்பம் தொடர்

## ...ம் பெயர்கள்

ழிப் படத்திலும் நடிக்கும் பயர் வைத்துக்கொள்வது கம்.

தை இசையமைப்பாளர் கிறார். அவர் மரகதமணி. ணி என்ற பெயரிலும், ரீம் என்ற பெயரிலும்



அரவிந்தசாமி-கஜோல்
படம்: மின்சாரக்கனவு

## 96இல் வெற்றிப் படங்கள்

1996இல் வெளியான தமிழ்ப்படங்களில் வெள்ளிவிழாக் கொண்டாடிய படங்கள்: 'ஆசை'(அஜித்-சுவலட்சுமி), 'பூவே உனக்காக' (விஜய்-சங்கீதா), 'உள்ளத்தை அள்ளித்தா' (கார்த்திக்-ரம்பா), 'முத்து' (ரஜினி-மீனா), 'காதல் கோட்டை' (அஜித்-தேவயாணி), 'நாட்டுப்புறப் பாட்டு' (சிவகுமார்-குஷ்பு), 'இந்தியன்'(கமல்-மனிஷா கொய்ராலா).

நூறு நாட்கள் ஓடிய படங்கள்: 'குருதிப்புனல்' (கமல்-கௌதமி), 'அம்மன்' (மொழிமாற்றுப்படம்), 'காலம் மாறிப் போச்சு' (பாண்டியராஜன்-சங்கீதா), 'பரம்பரை' (பிரபு-ரோஜா), 'காதல் தேசம்' (அப்பாஸ்-தபு), 'வான்மதி' (அஜித்-சுவாதி), 'சுந்தர புருஷன்' (லிவிங்ஸ்டன்-ரம்பா),'மகாபிரபு' (பகல் காட்சியாக ஓடியது- சரத்குமார்-சுகன்யா),

96ல் மொத்தம் 76 படங்கள் நேரடித் தமிழ்ப்படங்களாக வெளியாகி இருந்தன. 48 மொழிமாற்றுப்படங்கள் வெளியாகின.

## மன்சூர் ஜோடியாக வினிதா

மன்சூரலிகான்- வினிதா ஜோடி சேருகிறார்கள். அவர்கள் ஜோடி சேரும் படத்தின் பெயரும் அசத்தல்தான். 'வெட்டு ஒண்ணு துண்டு இரண்டு' என்பதுதான் படத்தின் பெயர்.

ராம்கி-வினிதா நடிக்கும் 'சாம்ராட்' படத்தை இயக்கிவரும் தினகர்தான் இப்படத்தையும் இயக்குகிறார்.

கேரள மாநிலத்தில் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன.

புதுமுகம் ருசிதாவுடன் மன்சூரலிகான் ஜோடியாக நடித்துவரும் மற்றொரு படம் 'மாயாவி'. வேற்று கிரக மனிதனாகத் தோன்றி மாயஜாலமெல்லாம் செய்கிறாராம் மன்சூரலிகான்.

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் 'மாயாவி' படப்பிடிப்புக்கள் நடைபெற்றுள்ளன. இசை: தேவா. இயக்கம் ஜெயதேவி.

## "பெறுவது அதிகம்"

சிறையில் இருந்து விடுதலையான இந்தி ஹீரோ சஞ்சய்தத் மீண்டும் நிமிர்ந்துவிடுவார் என்றுதான் தெரிகிறது.

அது தெரிந்தோ என்னவோ இந்திப்பட நாயகிகள் பலர் சஞ்சய்தத்தை நோக்கி நகர ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்த உறவுகள் மற்றும் தொடர்புகள் பற்றி சஞ்சய்தத் என்ன சொல்கிறார் தெரியுமா? "எனக்கு எத்தனை பெண்களுடன் தொடர்பு இருக்கிறது என்பதெல்லாம் ஒரு விஷயமே இல்லை. இந்த 'உறவுகள்' மூலம் நான் 'தருவதை'விட 'பெறுவதே' அதிகம். எனவே நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள்." என்கிறார். தொடர்க, வளர்க.

## கஜோலுக்குப் பாராட்டு

'மின்சாரக் கனவு' படத்தில் இந்தி நடிகை கஜோல் சம்பந்தப் பட்ட பாடல்காட்சிகளை ரஜினியும், மணிரத்னமும் பாராட்டி உள்ளனர்.

'பூ பூக்கும் ஓசை, அதைக் கேட்கத்தான் ஆசை' என்ற பாடலுக்கு கஜோலின் நடனம் துடுக்குத்தனமாக இருக்கிறது என்று பாராட்டினாராம் ரஜினி.

மும்பை நடிகைகளில் மாதுரி டிக்ஷித்துக்கு ஈடாக நடனமாடக்கூடியவர் கஜோல்தான்.

கஜோலை ரஜினியும் மணிரத்னமும் பாராட்டி இருப்பதால் தமிழில் மற்றொரு பெரிய வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்கலாம்.

முகப்பில் சரத்குமார்–நக்மா



படிப்பகம்

www.padippakam.com

# இது சமையலறைச் சமாச்சாரம்

**உணவைப் புதுப்பிக்க**

கடுகு, பெருங்காயம், மிளகாய் வற்றல் ஆகியவற்றை எண்ணெய் விட்டுத் தாளித்து அதில் பழைய சாம்பார் அல்லது ரசத்தைக் கொட்டி இரண்டு கொதி வந்ததும் இறக்கி விட்டால் புதியது போலாகிவிடும்.



**தேங்காய் கெடாமல் இருக்க:**

தேங்காய் மூடியை இரண்டு மூன்று நாட்கள் கெட்டுப் போகாமல் வைத்திருக்க இரவில் நீரில் போட்டு காலையில் கழுவி எடுக்கவும். உபயோகிக்கும் போது வழுவழுப் புப் போக நன்றாகத் தேய்த்துக் கழுவவும்.

**காய்கறி வாடாமல் இருக்க:**

பச்சைக் காய்கறிகளைக் கூடையில் போட்டு ஈரத்துணியால் மூடி விட்டால் மூன்று தினங்கள் வரை வாடாமல் இருக்கும். ஆனால் கிழங்குகளைக் காற்றாட வைக்க வேண்டும். வெப்பமும், புகையும் உள்ள சமையலறைகளில் வைக்கக்கூடாது.

**ரவையில் புழு வராமல் இருக்க:**

கடையில் இருந்து வாங்கிய ரவையை வெறும் வாணலியில் போட்டுப் புரட்டி விட்டுப் பின்னர் டப்பாவில் எடுத்து வைத்தால் எத்தனை நாள் சென்றாலும் புழு வராது.

**பால் கெடாமல் இருக்க:**

சுத்தமான பாத்திரத்தில் வைத்தால் தான் பால் கெட்டுப்போகாமல் இருக்கும். காலையில் கறந்த பால் இரவுவரை கெடாமல் இருக்க பாலுடன் ஏழெட்டு நெல்மணிகளைப் போட்டு வைத்தால் திரிந்து போகாது.

**பீங்கான் ஜாடி:**

நாள்பட வைத்திருக்கும் எந்தப் பொருளானாலும் மண்பாண்டத்தில் வைத்தால் கெடாது. இதர பாண்டங்களில் வைப்பதானால் கவனமுடன் நடந்து கொள்வது அவசியம்.

கண்ணாடி, பீங்கான் ஜாடிகளில் வைக்கும் எதுவும் கெட்டுப் போகாது.

**பழையதைப் புதுப்பிக்க:**

சோறு மிஞ்சிப் போய் விட்டால், அதைப் போல் இரண்டு மடங்கு நீரைக் கொதிக்க வைத்து, அதில் பழைய சோற்றைக் கொட்டி. ஒரு கொதி வந்ததும் இறக்கி வடித்து விடவும். பின்னர் மறுபடியும் ஐந்து நிமிடம் வடித்த சோற்றை அடுப்பில் வைத்து இறக்கினால் நீர்ப்பசை அகன்று புதிதாகச் சமைத்ததைப் போலாகிவிடும்.

**காயும் கிழங்கும்:**

காய்கறிகளை வேகவிடும்போது உப்புப்போட்டே வேகவிட வேண்டும். இல்லாவிட்டால் காயில் உப்புப்பிடிக்காது. ஆனால் கிழங்குகள் அவிந்த பின்னர்தான் உப்புப்போட வேண்டும். இல்லாவிட்டால் கிழங்கு அவியாது.

**சமிபாட்டுத் துணை:**

சீரகம், மிளகு, மிளகாய், இஞ்சி போன்றவை உணவை சமிபாட்டையத் துணை புரிகின்றன. இதர மசாலாப் பொருட்களும் அப்படித்தான். ஆனால் அளவுக்கு மிஞ்சிப் போனால் குடற் சவ்வுகளுக்குப் பாதகம் ஏற்படும்.

**அடுப்பை எரிய வைக்க:**

அடுப்பை நன்றாக எரிய வைக்க வாயினால் ஊதக் கூடாது. ஊதுகுழலை உபயோகிப்பதும் அப்படித்தான். விசிறி விடுவதும் சரியான முறை.

**அரைத்தமாவு:**

மெஷினில் மாவு அரைத்துக் கொண்டு வந்தால் அது சூடாக இருக்கும். அதை அப்படியே எடுத்துப் பாத்திரங்களில் வைப்பதோ, உடனே உபயோகிப்பதோ கூடாது. அகலமான தட்டில் பரவலாகக் கொட்டிச் சூடு ஆறியபின் சல்லடையில் சலித்துச் சுத்தம் செய்த பின்பே உபயோகிக்கவோ, சேமிக்கவோ வேண்டும்.

**மணமும், சுவையும்:**

வெல்லம் சேர்த்துத் தயாரிக்கும் பண்டங்களுக்குக் கொஞ்சம் நெய் சேர்ப்பதால் அதன் மணமும் ருசியும் கூடும்.

**சத்து அழியும்:**

சுலபமாக வேகவும், மிருதுவானதாகவும் இருக்க அப்பச்சோடா துணைபுரிந்தாலும் அப்பச்சோடா உணவுப் பொருட்களில் உள்ள சத்துக்களை அழித்துவிடும்.

**இனித்தால் கெடுதல்:**

ஈயச் செம்பில் வைத்த ரசம் லேசாக இனித்தால் அது உடலுக்குக் கேடு. அதை உபயோகிக்காமல் ஒதுக்கி விட வேண்டும்.

**எளிதில் செரிக்காது:**

கிழங்குக் கறிகளை அதிக எண்ணெய் சேர்த்துப் பொரிக்காமல் இருப்பதே நல்லது. இதனால் அவை எளிதில் சமிபாடடையாமல் போய்விடும்.

# விருந்துக்குத் தகுந்த யோசனைகள்!

* விருந்திற்கு முன்னால் உங்கள் வீட்டை நன்கு சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். ஒட்டடை, தூசி, அழுக்கு ஆகியவை இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
* கையலம்பும் இடத்திற்கருகில் மறக்காமல் ஒரு சோப் கட்டியையும், கை(த்)துடைக்க ஒரு துவாயையும் வையுங்கள்.
* உங்கள் விருந்தினர்களுக்கு அனுப்பும் அழைப்பிதழிலேயே உங்கள் வீட்டிற்கு வருவதற்கான வரைபடத்தையும், பேருந்து இலக்கத்தையும், தொலைபேசி இருந்தால் தொலைபேசி இலக்கத்தையும் தெளிவாக எழுதி விடுங்கள்.
* உங்கள் விருந்தினர்களை நீங்களே இன்முகத்துடன் முன்னின்று அழையுங்கள். ஒருவரை மற்றவர்களுக்குத் தவறாமல் அறிமுகம் செய்து வையுங்கள்.
* விருந்தினர் அருகில் இருக்கும்போது உங்கள் வீட்டில் இருப்பவர்களையோ, பணியாட்களையோ திட்டாதீர்கள்.
* புஃபே(BUFFET)முறையில் உணவை வழங்குகிறீர்கள் எனில் உங்கள் விருந்தினர்களையே உணவைத் தேர்ந்தெடுக்க விடுங்கள். இதைப் போட்டுக்கொள், அதைப் போட்டுக்கொள் என்று யாரையும் வற்புறுத்தாதீர்கள்.



* புஃபே முறை உணவாக இருந்தால் எல்லா உணவுப் பண்டங்களையும், தண்ணீர்ப் பாத்திரம், குவளைகளையும் வைக்கும் அளவிற்கு உள்ள ஒரு பெரிய மேசையில் அடுக்குங்கள்.
* சாப்பிட்ட தட்டுக்கள், மற்றும் தண்ணீர் குடித்த குவளைகள் வைக்க தனியாக ஒரு இடத்தை ஒதுக்குங்கள்.
* கைகளைத் துடைத்துக்கொள்ள துவாய்கள் மற்றும் ரிஷ்யூ காகிதங்களையும் கை அலம்பும் இடத்திற்கு அருகில் வையுங்கள்.
* விருந்தினர்களை அமர வைத்து மேசையில் உணவைப் பரிமாறினால், விருந்தினர்களைக் காக்க வைக்காமல் அடுத்தடுத்து வரிசையாகப் பரிமாற வேண்டும்.
* உப்புத்தூள், மிளகுத்தூள் போன்றவற்றிற்குத் தனியாகச் சிறிய கிண்ணங்களை வைக்க வேண்டும்.
* உங்கள் விருந்தாளிகளை உணவுக்காகக் காக்க வைக்கக்கூடாது. அவர்கள் வருவதற்கு முன்பாகவே சமையலை முடித்து வைத்திருக்க வேண்டும்.
* விருந்தை உங்கள் வீட்டுத் தோட்டத்திலோ அல்லது மொட்டை மாடியிலோ ஏற்பாடு செய்திருந்தால், தேவையான அளவு விளக்குகளைப் பொருத்த வேண்டும்.
* சில சமயங்களில் உணவிற்குப் பின் கோப்பி அல்லது தேனீர் கொடுக்கும் பழக்கம் இருக்கும். அது போன்ற சமயங்களில் பால், கோப்பி அல்லது தேனீர் சாயம், சீனி ஆகியவற்றைத் தனித்தனியாக வைத்து விட்டால், விருந்தாளிகள் அவரவர் தேவைக்கேற்ப கலந்து கொள்ள ஏதுவாக இருக்கும்.
* விருந்துக்கு யாராவது பிரதான விருந்தினர்களை அழைத்திருந்தால், உணவை முதலில் அவருக்குப் பரிமாறிய பின்னர் மற்றவர்களுக்குப் பரிமாற வேண்டும்.
* விருந்தினர்களுக்குத் தட்டு வைக்கும்போது மிகவும் கவனமாகத் தண்ணீர் எதுவும் சிந்தாமல் வைக்க வேண்டும்.
* காய்கறி போன்றவைகளை வைக்கும் சேர்விங் பிளேட் (SERVING PLATE) எப்போதும் சாப்பிடுகிறவருக்கு இடது புறமாகவே வைக்க வேண்டும்.
* கண்ணாடிக் குவளைகளை எடுக்கும்போது கீழ்ப் பாகத்தைப் பிடித்துத் தான் எடுக்க வேண்டும்.
* உணவுப் பாத்திரங்கள் சூடாக இருந்தால் ஒரு துணியால் பிடித்துக் கொண்டு பரிமாறுங்கள்.
* சமையலறையும், உணவு உண்ணும் இடமும் தொலைவில் இருந்தால் அலுத்துக் கொள்ளாமல் நடந்து சென்று இன்முகத்தோடு பரிமாறுங்கள்.
* விருந்தினர்கள் அனைவரும் உணவு உண்டு முடிந்தவுடன் தான் தட்டுக்களை எடுக்க வேண்டும். ஒருவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தால் கூட தட்டுக்களை எடுக்க ஆரம்பிக்கக்கூடாது.
* விருந்தினர்களை இன்முகத்துடன் வழி அனுப்பி வையுங்கள்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## கம்பியூட்டர் மூலம் காதல்

### திருமணமும் திடீர் திருப்பமும்

உலகம் ரொம்ப ரொம்ப, கெட்டுப் போய்க்கொண்டிருக்கிறது என்று பெரியவர்கள் முணுமுணுப்பதில் அர்த்தம் இல்லாமல் இல்லை.

'காதல் கோட்டை' படத்தில் நேரில் சந்தித்துக் கொள்ளாமலேயே கடிதம் மூலம் காதல் வளர்கிறது. படத்தில் என்றால் ஓ.கே. உண்மையாகவே அப்படி காதல் வருமா? என்று சந்தேகப்படுகிறவர்களும் இல்லாமல் இல்லை.



ஆனால், அமெரிக்காவில் கம்பியூட்டர் மூலம் காதல் மலர்ந்து கல்யாணம் வரை சென்றிருக்கிறது. முடிவுதான் எதிர்பாராத திருப்பம்.

மார்க்கிரட் என்னும் பெண் கம்பியூட்டர் பைத்தியம். இன்டர் நெட் வழியாக மார்க்கிரட் ஒருவனைக் காதலித்தாள். இறுதியில் நேரில் சந்தித்து திருமணமும் தடபுடலாக நடந்து முடிந்தது.

முதலிரவில் மார்க்கிரட்டுக்கு அந்த அதிர்ச்சி காத்திருந்தது. கணவன் நெஞ்சில் பெரியதொரு கட்டுப் போட்டிருந்தான். விபத்தொன்றில் சிக்கியதால் ஏற்பட்ட காயம். விரைவில் மாறிவிடும், அதுவரை முழுமையான செக்ஸ் வேண்டாம்" என்றான் அவன். எத்தனையோ கற்பனைகளுடன் கணவனை நெருங்கியவள் உடைந்துபோனாள். ஆனாலும் அவன் பூரணகுணமாகட்டும் என்று நாட்களை எண்ணிக்கொண்டு இருந்தாள்.

அப்படியே நாலுமாதம் கடந்துபோனது. ஒருநாள் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. "என் மகள் இங்கேதான் இருக்கிறாள். அழைத்துப் போக வந்தேன்!" என்றாள் ஒரு பெண்மணி.

மார்க்கிரட்டுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. அந்த நேரத்தில் மார்க்கிரட்டின் கணவனும் வர, அந்தப் பெண்மணி சொன்னாள்.

"இவன்தான் எனது மகள்!"

மார்க்கிரட் அதிர்ந்து போனாள்.

பின்னர்தான் உண்மை தெரிந்தது.

மார்க்கிரட்டின் கணவன் ஆண் அல்ல பெண். பெண்களோடு இருக்கத்தான் அவளுக்கு விருப்பமாம். அதுதான் பொய் சொல்லி கல்யாணம் செய்தானாம்.

இப்போது கணவனாக நடித்தவள்மீது ஆறு இலட்சம் டொலர் மான நஷ்டஈடு கேட்டு வழக்குத் தொடர்ந்துள்ளார் மார்க்கிரட்.

இதேவேளை மற்றொரு அநியாயமான செய்தி: ஹவாய் நாட்டு நீதிமன்றம் ஒரு சர்ச்சைக்குரிய தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

ஓரினத் திருமணங்களுக்கு அரசு தடைவிதிக்க முடியாது. ஆண் ஜோடிகளும், பெண் ஜோடிகளும் திருமணம் செய்து கொள்ளலாம் என்று தீர்ப்பளித்துள்ளது. ஓரினத் திருமணத் தம்பதிகள் பலர் தொடர்ந்த வழக்கில்தான் இப்படியொரு திடுக்கிடும் தீர்ப்பு வெளியாகியுள்ளது. காலம் ரொம்பக் கெட்டுப் போச்சு என்பது சரிதானுங்களே!

# "ஆண்களைக் காப்பாற்றுங்கள்"

ஆண்கள் என்றால் கிள்ளுக்கீரையா? ஆண்களின் உரிமையை அவசரமாகக் காப்பாற்ற வேண்டும் என்று குரல் கொடுத்திருக்கிறது ஒரு இயக்கம். ஃபிரான்ஸ் நாட்டில்தான் ஆண்கள் பலர் ஒன்றுகூட அப்படி ஒரு இயக்கம் அமைத்துள்ளார்கள்.

அப்படி என்ன அவசரம் வந்தது? ஃபிரான்ஸ் கார்க் கம்பனி ஒன்று பெண்களுக்காக விசேஷமாக தயாரிக்கப்பட்ட கார் ஒன்றை அறிமுகப்படுத்தியது. பெகாட்-106 என்னும் ரகமான அக்காரை விளம்பரம் செய்ய ஒரு உத்தியைக் கையாண்டது.



தனது மனைவியின் பெகாட்-106 காரை தனது அவசர பாவனைக்கு கேட்கிறார் கணவர். மனைவி உடனே ஒரு நிபந்தனை போடுகிறார். உங்கள் ஆடைகளை அவிழ்த்தால்தான் காரைத் தருவேன் என்கிறார் மனைவி. காருக்காக தன் ஆடையை அவிழ்க்கிறார் கணவர். இப்படியொரு கண்றாவியான விளம்பரம். கடவுளே கடவுளே!

இந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டுத்தான் ஆண்கள் பலர் ஒன்றுசேர்ந்து போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார்கள். குறிப்பிட்ட கார் கம்பெனி முன்னாலும் 'ஆண்களைக் காப்பாற்றும் இயக்கம்' சார்பாக ஆர்ப்பாட்டம் நடத்தி இருக்கிறார்கள்.

ஒரு பெண் சொன்னதும் தனது ஆடைகளை களையும் அளவுக்கு ஆண் என்ன அவ்வளவு கேவலமா? என்று கேட்கிறார்கள். அதுதானே!

# சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது **சுகந்தினி**)

## அவல் பொரிமா உருண்டை

**தேவையானவை:**

அவல்-2 1/2 கப்
கடலைப்பருப்பு-1/2கப்
பாசிப் பருப்பு-1/2 கப்
நெய்-1 கப்
சீனி- 2 1/2 கப்
முந்திரிப் பருப்பு-10
முந்திரிகை வற்றல்-10
ஏலக்காய்- 5.

**செய்முறை:**

கடலைப்பருப்பு, பாசிப்பருப்பு ஆகியவற்றை இளஞ்சிவப்பாக மிதமான தீயில் வறுத்து, தனித்தனியாக மாவாக அரைத்துக் கொள்ளவும். பின் அவல், சீனி இரண்டையும் தனித்தனியாக மாவாகப் பொடித்துக் கொள்ளவும். ஏலக்காயைப் பொடித்து வைத்துக் கொள்ளவும். முந்திரிப் பருப்பு, முந்திரிகை வற்றல் ஆகியவற்றை சிறிது நெய் விட்டு இளஞ்சிவப்பாக வறுக்கவும். அரைத்து வைத்துள்ள மாவுகள், சீனி, ஏலப்பொடி முந்திரிப்பருப்பு, முந்திரிகை வற்றல் ஆகியவற்றை ஒன்றாகக் கலக்கவும். மீதி நெய்யை வானலியில் ஊற்றி அடுப்பில் வைத்துக் கொதித்ததும் பொரிமா கலவையில் ஊற்றி கிளறி சூடு ஆறாமல் பிடித்தால் லட்டு உருண்டையைப்போல் பிடிக்க வரும். இதுதான் அவல் பொரிமா உருண்டை.

# நீ பாதி — நான் பாதி

உயிர்த் தோழிகள் இருவரும் இணைந்து எடுத்துக்கொண்ட அபூர்வ புகைப்படம் இது. ஒரே நிற சேலை, ஒரேவிதமான நகை அலங்காரம், ஒரே விதமான மேக்-அப் என்று அசத்தியிருக்கிறார்கள். உடல் அமைப்பைத்தவிர வேறு வித்தியாசங்களே காண முடியாது முடிந்தால் வேறு ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடித்துப் பாருங்களேன். தோற்றுத்தான் போவீர்கள்.

ஜெயலலிதா வீட்டில் சோதனை போட்டபோது இப் புகைப்படமும் சிக்கியிருக்கலாம். அதனை தமிழக பிரபல வார இதழ் ஒன்றுக்கு கொடுத்து வெளியிடச் செய்துவிட்டார்கள். தனது அந்தரங்கத்தில் பொலிசார் எப்படித் தலையிடலாம் என்று கொதித்துப் போயிருக்கிறார் ஜெயலலிதா. இவ்வாறான புகைப்படங்களை வெளியிட்டதற்காக பொலிசார்மீது வழக்குத் தொடரப் போகிறாராம்.

எப்படியோ நமக்கு ஒரு அருமையான புகைப்படம் காண சந்தர்ப்பம் கிடைத்ததே. யப்பா! யார் கண்பட்டதோ இப்போதீ பிரிந்து போய் இருக்கிறார்களே இலட்சியத் தோழிகள் என்று வருத்தமாக இருக்கிறதா? (நீண்டபெருமூச்சு விட்டுக் கொள்க) அணிந்திருக்கும் தங்க வைர நகைகளின் பெறுமதி இந்திய மதிப்பில் 2 கோடி.




# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AZ

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை — நேர்மை — வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 25-01-1997**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி கே. பத்மகலைவாணி |
| | 385B, காலி வீதி, கொழும்பு-06. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com

## "தாற்பரியத்தின் தர்மம்"

வாக்குறுதிகள்- வழுக்கி ஓடும்
வெள்ளத்துக்குள் விழுந்து விட்டதா?
வரலாற்று நியாயங்கள் காகிதக் கப்பலாய்
தண்ணீருக்குள் தத்தளிக்கின்ற போது
கை ஏந்தும் கரங்களுக்கு விலங்கு
பூட்டுவதுதான் தாற்பரியம்....
0-0-0
மழைக்கால நீர் போல ஓடுவது இரத்தமா....?
காளான்கள் முளைத்தது போல்
மனித மண்டை ஓடுகள்
கால்களோடு மோதுதே....!
பூக்களின் வாசனை நுகர வந்தால்
பிணவாடை பின் தள்ளுதே....!
0-0-0
இனிப் பூமியில் மனிதன் வாழ முடியாதா?
ஆயுதங்களும் அராஜகங்களும்
மனிதத்தை கொன்று உயிரைத் தாம்
வாங்கிக் கொண்டதா....?
ஓடு....ஓடு....இரக்கமுள்ள இதயங்களே!
தூர ஓடுங்கள்!
0-0-0
பேதம் காட்டாத கவிதா நெஞ்சங்களே!
உங்கள் இதயம் இனி வெடித்து விடும்!
கண்களை மூடிக் கொள்ளுங்கள். உலகம்;
அழுக்காகிக் கொண்டிருக்கின்றது.
விழி திறந்தால் காட்சிகள் நகக்கண்ணில்
ஊசி ஏற்றும்.
உங்கள் உணர்வுகள் உள்ளுக்குள்ளேயே
சிதைக்கப்படும்......
கிருஷாந்தி....ராஜனி....என்று இன்னும் பல
கிடங்குகள் கதைகள் சொல்லும்.....!
உடை கூட இல்லாமல் உடல்கள் கடலில் வரும்!
படலைக்குள்ளேயே விடலைகள் பல
காணாமல் போகும்...!
பாதை ஓரத்துப் புற்கள் கூட
மௌனமாய் கண்ணீர் விடும்...!
உன் ஊா வினாவிற்கு விடை காணும்
முயற்சியும் வினாவாகிப் போகும்.
0-0-0

ஜெயந்தி ஜெய்சங்கர்- கொழும்பு-13.

## சிமிழ்ச்சிகள்

நயாகராவில்
நனைந்து....!
***
தாஜ்மகாலின்
ஜ்வலிப்பில்
தலைசீவி!
***
பிக்பென்னில்
நேரம் பார்த்து!
***
புருனை சுல்தானின்
விசேட
விருந்தினனாய்
அழைக்கப்பட்டு!
***
டயானாவின்
புதிய காதலனாய்
பத்திரிகைகளால்
பிரகடனம்
செய்யப்பட்டு!
***
தேம்ஸ் நதி
தீரத்தில்
டெமி மூர் உடன்
தனிமைப்பட்ட
பொழுதில்
விழிப்பு....!
யதார்த்தம்
முகம்
அறைந்தது.
***
கூரை
ஓட்டைக்கு
வைக்கப்பட்ட
குடுவை...!
***
வாயோரத்து
உமிழ்நீர்!
***
அலங்கோலமாய்
தூங்கும்
மனைவி...!
***
கதவற்ற
கழிவறை,
காலைக்'கடன்'!
***
அலுவலக
அவஸ்தை!
***
மீண்டும்
இரவு...!
***
விருப்பமற்ற....
ஆனால்
வேண்டப்பட்ட
யந்திரக்
கலவி...!
***
தூக்கம்...!
கனவு...!
***

மஃீன்.எம்.சகீல்- மாருகொண.



## மறுபடி பூத்துவா மலரே....!

மௌனக் கால்களால்
விழிவழியே
இதயத்துள்
ஊர்வலம் போன
காதலை ஞாபகம்
வருகிறதா அன்பே?
****
ஒரு நிலவைப்போல
ஒரு காலத்தில்
வளர்ந்தும், தேய்ந்தும்,
இன்று,
வெளிச்சத்தைத் தேடும்
அமாவாசையாய்
வேதனையில் வாடும்
காதலின் ஓவியம்
உன் கண்ணுக்குப்
புலப்படுகின்றதா?
****
சந்தேகப்போர்வையில்
கைதான
அப்பாவி மகன்,
எந்தச் சிறையில்
இருக்கின்றானோ......
என தவிக்கும்
பாசத்தாயைப்போல
தொலைந்து போன
உன் முகவரியைத் தேடி
காயப்பட்டுக்
கிடக்கின்றேன்.....!
****
காலம் உனை என்
கைகளில் சேர்க்கும்
என்ற நம்பிக்கை
கொண்டு இன்று
கவிதையாய்
அழுகின்றேன்!
****
நீ கொட்டிப்போன
பார்வைத்தேனால்
ஈரப்பட்ட இதயத்துணி
உலர்ந்து போகு முன்,
என் உயிரில் படிந்த
சோகக் காயத்தை
துடைத்து விடு உயிரே!
****
என்
ஜீவித வாசலின்
நேசக் கதவுகள்
உனக்கு மட்டுமே
திறந்திருக்கும்
உண்மையிந்த
உலகுக்கு புரிய
நியாயமில்லை.
****
உனக்கே புரியும்....
என் ஆத்மாவின்
ராகத்தில் நீயொரு
கல்யாண கீதம்
இசைக்கத்தான்-
தபால் காரனை
நேசிக்கின்றேன்.
****
உன் வருகைக்காய்....
மணி விழிகளால்
காத்திருப்பேன்!
உன் மௌனத்தை
மொழிபெயர்த்து
அனுப்பிவிடு அன்பே
என் கணனி
நிலையத்திற்கு!
****

பூண்டுலோயா-
மெய்யன் நட்ராஜ்.

## அந்தநாள் ஞாபகம்



கொஞ்சம் கூர்ந்து பார்த்தால் சட்டென்று தெரிந்துவிடும், இந்திய முன்னாள் கிரிக்கெட் கப்டன் அசாருதீன்தான். அருகில் நின்று அவர் சட்டையை சீர்செய்துவிடுபவர் சங்கீதா. (நேற்றுக் காதலி இன்று மனைவி)

இந்தப் படத்திற்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. முதன் முதலாக சங்கீதாவும், அசாரும் சந்தித்துக்கொண்ட தினத்தில் எடுக்கப்பட்ட முதலாவது புகைப்படம் இதுதான்.

விளம்பரப் படமொன்றில் நடிக்கச் சென்ற போதுதான் சங்கீதாவைச் சந்தித்தார் அசார். அதற்குமுன்னரே அசாரின் பரம ரசிகையான சங்கீதா அசாரைப் பார்த்தவுடனேயே அவருடன் ஒட்டிக்கொண்டார். என்னவொரு இயல்பாக அசாரின் உடையை முதல்நாளே சீர்செய்து விடுகிறார் என்று பாருங்கள். இந்த வேகமும், நெருக்கமும்தான் அசாரை சங்கீதாமீது பைத்தியமாக்கிவிட்டதோ?!

ஜோடிப் பொருத்தமும் ஜோராகத்தானே இருக்கிறது! அதுதான் இப்போது வெளுத்துக் கட்டத் தொடங்கிவிட்டாரே அசார். பரவாயில்லையே, இடையே சற்று வீழ்ந்த அசாரின் துடுப்பாட்டத்தை மீண்டும் எழவைத்துவிட்டாரே சங்கீதா!

## மீண்டும் சந்திப்போம்....!



உன்னைத்தானே காதலித்தேன்!
உன்
நினைவுகளை ஏன்
தந்துபோனாய்?
ㅁㅁ
என்னை கஞ்சனென்று
எல்லோரும் சொன்னாலும்,
உன் புன்'நகை'யின்
சொந்தக்காரன் நான்!
ㅁㅁ
உன் நடையை
பார்த்து
மயில்கள்
நாட்டியமாடியதாமே?
ㅁㅁ
எல்லாம் சரிதான்....
ㅁㅁ
உன் பாதமண்ணை
முத்தமிட்ட என்னை
பிரிவால்
சுட்டது ஏன்?
ㅁㅁ
நீ
வசந்தங்களின்
சொந்தக்காரிதான்-எனக்கு
வருத்தங்களை
ஏன் தந்தாய்?
ㅁㅁ
உன்மேல் என்னை
எடைபார்த்த
கணங்களை
ஏன் மறந்தாய்......
ஏன் மறந்தாய்?
ㅁㅁ
பரவாயில்லை;
என் கனவுகளில்
உன்னை அனுப்பு.....!
இறுதி முத்தம்
தரவேண்டும்!
ㅁㅁ

சுபா வரன்-கண்டி.

## தேன் கிண்ணம்

### அறிவுரை



உன்னை அவன்
பார்க்கும் போது
நீ-
பாதங்களைப் பார்!
**
உன்னை அவன்
பார்க்காத போது
பார்த்துக் கொண்டேயிரு...!
மனதால்...
**
'ஐ லவ் யூ' சொன்னால்
அச்சப்படு!
**
கையைப் பிடித்தால்
கண்களை மூடு!
**
முத்தம் கொடுத்தால்
முனகு!
**
பிறகென்ன...?
உன் காதல்
உடனே தோற்கும்.

எஸ்.பிரபா.

## எண்ணத்தில் கரைந்த வண்ண மயில்

இதயத்தை
அழகாக வரைந்திருக்கிறாய்;
வர்ணமெலாம் தீட்டி...
*
இளங்காலைச் சூரியன்
கை பட்ட,
அந்தப் பருவ ரோஜாவின்
இதழ்களில்
விஷத்தை தடவியது யார்?
*
உன் இதயத்தின்
மென் இழைகளில் ஊறிய
"எயிட்ஸ்" கலந்த
காதல்
எனக்காகவா?
*
பழைய ஞாபகங்களை
வறுத்தெடுத்தும்
அதன் ஈரத்தை
உலர்த்த முடியவில்லை......
கண்களை இறுகப் பொத்தியும்
கனவுகள்
கலைவதாக இல்லை.
*
என் மனது முறிந்தாலும்-
பரவாயில்லை;
உன் இதயத்தோடு
எனக்கு
எந்த உடன்பாடும்
இல்லாமல் போனதை எண்ணி
சந்தோசமேதான்!

ஏயெம்மே நிஸாம்-
சம்மாந்துறை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(19.01.1997 தொடக்கம் 25.01.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | - சூரியன்,வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| கன்னி | - செவ்வாய், இராகு. |
| தனு | - வெள்ளி, புதன். |

★ சந்திரன்- இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் செலவு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, கௌரவக் குறைவு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- காரிய சித்தி, உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, புதிய முயற்சி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், முயற்சி பலிதம். | பி.ப. | 3 | மணி |
| சனி- செலவு மிகுதி, கடன் தொல்லை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- மனக் கலக்கம், அந்நியர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், பிரயாணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, பொருள் பேறு. | பி.ப. | 3 | மணி |
| சனி- வீண் முயற்சி, உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- காரியத் தடை, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- வீண் முயற்சி, பயனுள்ள செயல். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பொருள் வரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- பணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவுமிகுதி. | பகல் | 12 | மணி |
| புதன்- தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, தொழில் விருத்தி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, பண வரவு. | பகல் | 11 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், உறவினர் உதவி. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணச் செலவு, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, மனவலிமை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- கௌரவம், தேகசுக விருத்தி. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- பெரியோர் உதவி, பண வரவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- ஆடம்பர வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- கடின உழைப்பு, பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், புதிய முயற்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- எதிர்பார்த்த நன்மை, மன மகிழ்வு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொல்லை நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| சனி- புதிய முயற்சி, பண விரயம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- தொழில்நிலை மந்தம், பிரயாண மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வெளியிட வாசம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| சனி- உறவினர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பண நெருக்கடி, கடன் சுமை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- உறவினர் உதவி, மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, பிரயாண மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, மனக்கிலேசம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, பலவித பேறு. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- வெளியிடப்பயணம், செலவுமிகுதி. | பகல் | 12 | மணி |
| சனி- பணவரவு, சுபகாரிய மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண் தொல்லை, மனக் கவலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாசம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- பொருள் வரவு, முயற்சி பலிதம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், தொழில் விருத்தி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, பயனுள்ள செயல். | பகல் | 12 | மணி |
| சனி- உறவினர் இழப்பு, மனக்கவலை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாணக் கஷ்டம், சஞ்சலம். | பி.ப. | 4 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| புதன் - தொழில் மந்தம், பணச் சிக்கல். | மு.ப. | 9 | மணி |
| வியாழன்- வீண் முயற்சி, மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் விருத்தி, அந்நியர் சகவாசம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண்தொல்லை, முயற்சித் தடை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| புதன்- புதிய முயற்சி, பலவித பேறு. | மு.ப. | 9 | மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், தொழில் விருத்தி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, செலவு அதிகம். | மு.ப. | 10 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், மனக்கிலேசம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, பெரியோர் சகவாசம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் மந்தம், காரியத்தடை. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| சனி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |


அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1



படிப்பகம்

www.padippakam.com





## வண்ணச் சிறகைத் தாருங்கள்

வானில் பறக்கும் பறவைகளே!
வந்து இங்கே பாருங்கள்!
தேனின் இனிய குரலிசையால்
வசந்த கீதம் பாடுங்கள்!

படைத்தவன் தந்த சிறகிரண்டால்
பறந்து இங்கே வாருங்கள்!
பாலர் நாங்கள் அழைக்கின்றோம்
வந்தே எம்முடன் சேருங்கள்!

பறந்தே இந்தப் புவியழகை
பார்க்க ஒரு வழி சொல்லுங்கள்!
பறந்து நாங்களும் கூடவர
வண்ணச் சிறகைத் தாருங்கள்!

பறந்தே செல்லும் ரகசியத்தை
காதில் வந்து கூறுங்கள்!
நாங்களும் கூட வருகின்றோம்
எம்மையும் அழைத்துச் செல்லுங்கள்!

-மிருதுபாஷினி-

அன்பென்று கொட்டு முரசே!-அதில்
யார்க்கும் விடுதலை உண்டு;
பின்பு மனிதர்க ளெல்லாம்-கல்வி
பெற்றுப் பதம் பெற்று வாழ்வார்.
-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை



# சோம்பேறி

முன்னொரு காலத்தில் சோம்பேறி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் உழைக்காமல் உண்ண வேண்டும் என்று நினைப்பவன்.

ஒருநாள் அவன் தேவதையிடம் நேரடியாகவே சென்று தான் செல்வந்தனாக இருக்க வரம் கேட்பதற்குப் புறப்பட்டான்.

அவன் தேவதையைக் காண்பதற்காகக் காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தான். காட்டில் ஒரு வழுக்கைத் தலையுடைய ஓநாயைச் சந்தித்தான். ஓநாயிடம் தான், தேவதையிடம் வரம் வாங்கச் செல்வதைக் கூறினான்.

இதைக் கேட்ட ஓநாய், தன் தலையில் முடி வளருவதற்கு என்ன செய்யலாம் என்று தேவதையிடம் கேட்டு வரச் சொன்னது.

"சரி கேட்டு வருகிறேன்" என்று தனது பயணத்தைத் தொடங்கினான் அந்தச் சோம்பேறி.

வழியில் ஒரு திராட்சைக் கொடி ஒன்று அவனை மறித்தது. அவனிடம், "இந்தக் காட்டு வழியே எங்கே செல்கிறாய்?" என்று கேட்டது. சோம்பேறியும் தான் எங்கே போகிறான் என்று திராட்சைக் கொடியிடம் கூறினான்.

இதைக் கேட்ட திராட்சைக் கொடி, "எனது கனிகள் மிகவும் புளிப்பாக இருக்கின்றன. அது மிகவும் சுவையாக இருக்க என்ன செய்யலாம், என்று தேவதையிடம் கேட்டு வருவாயா?" என்று கேட்டது.

"சரி நான் கேட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு புறப்பட்டான் சோம்பேறி. நீண்ட தூரம் நடந்து வந்ததால் சோம்பேறிக்குத் தாகம் எடுத்தது. பக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த ஆற்றில் இறங்கித் தண்ணீர் குடித்தான்.

அப்போது அந்த ஆற்றிற்குள் இருந்த மீன் ஒன்று இவனைப் பார்த்தது. "எங்கே போகிறாய்?" என்று விசாரித்தது.

சோம்பேறியும் மீனிடம் தான் போகும் காரணத்தைக் கூறினான்.

"நீ தேவதையிடம் உனக்கு வரம் கேட்கும் பொழுது எனக்கும் ஒரு வரம் கேட்டு வருகிறாயா?" என்று கேட்டது மீன்.

என்ன வரம் கேட்க வேண்டும் என்று கேட்டான் சோம்பேறி.

"எனது பெரிய வயிற்றுடன் நீந்த முடியாமல் இருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டு வா" என்று சொன்னது மீன்.

அங்கிருந்து புறப்பட்ட சோம்பேறி தேவதையிடம் சென்றான். அங்கு தான் பெற வந்திருக்கும் வரத்தையும், ஓநாய், திராட்சைக்கொடி, மீன் போன்றவை கேட்ட வரங்களையும் தேவதையிடம் கூறினான்.

"உன்னுடைய அதிஷ்டம் வழியிலேயே உள்ளது" என்று சொன்ன தேவதை, ஒவ்வொன்றைப் பற்றியும் சொல்லி அனுப்பியது.

சோம்பேறி வீடு திரும்பும் வழியில் மீனைப்பார்த்தான். மீனிடம், "உன் வயிற்றில் முத்துக்கள் உள்ளன. அவற்றை வெளியே துப்பினால் உன்னால் இலகுவாக நீந்த முடியும்" என்று கூறினான்.

வயிற்றிலுள்ள முத்துக்களை வெளியே துப்பிய மீன், "இவற்றை நீயே எடுத்துக் கொள்" என்று சோம்பேறியைப் பார்த்துக் கூறியது.

"என் அதிஷ்டம் என் வழியிலேயே உள்ளது; எனக்கு இவை வேண்டாம்" என்று கூறிவிட்டுத் திராட்சைக் கொடியிடம் சென்றான்.

அதைப் பார்த்து "உன் வேருக்கு அடியில் தங்கப்புதையல் உள்ளது. அதை எவருக்காவது நீ தானமாகக் கொடுத்தால் உன் கனிகள் சுவையுடையதாகும்" என்று சொன்னான்.

திராட்சைக் கொடி அவனிடம், "நான் எனது தங்கப்புதையலை உனக்குத் தானமாகத் தருகிறேன்" என்று சொன்னது.

"என் அதிஷ்டம் என் வழியிலேயே உள்ளது; எனக்கு இவை வேண்டாம்" என்று கூறிவிட்டு, ஓநாயிடம் வந்தான்.

ஓநாயிடம், "உன் முடி வளர வேண்டுமானால் ஒரு முட்டாள் சோம்பேறியின் இதயத்தைச் சாப்பிட வேண்டும்" என்று கூறினான் அவன்.

ஓநாய் இவனிடம் இருந்து தேவதையிடம் சென்றதையும் அங்கு பெற்ற வரங்களையும், வழியில் நடந்தவைகளையும் அறிந்து கொண்டது.

ஓநாய் சற்று யோசித்தது; 'இவனை விட ஒரு முட்டாள் சோம்பேறி இந்த உலகத்தில் இருக்கமாட்டான்' என்று கூறி, அந்தச் சோம்பேறியை அடித்துக் கொன்று விட்டு, இதயத்தை எடுத்துச் சாப்பிட்டது.

## வாரம் ஒரு நாடு

### சென்ட் வின்சென்ட்



தலைநகர் - கிங்ஸ்டவுன்
பரப்பு - 388 சதுர கிலோமீட்டர்
மக்கள் தொகை - 1.12 இலட்சம்
மொழி -ஆங்கிலம், ஃபிரெஞ்சு படோட்
எழுத்தறிவு - 85%
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - கிழக்கு கரிபியன் டொலர்
தனி நபர் வருமானம் -1730 டொலர்.

**அமைவிடம்:**

வின்ட் வேர்ட் தீவுகளில் ஒன்றான இந்நாடு பார்படோஸுக்கு மேற்கில் அமைந்துள்ளது.

**வரலாறு:**

பிரிட்டன் 1979ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ம் திகதி சென்ட் வின்சென்டிற்குச் சுதந்திரம் வழங்கியது. ஐரோப்பிய நீக்ரோ, கரிபிய இந்தியர் எனக் கலப்பு மக்கள் தொகையைக்கொண்டது. 13 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றம் உள்ளது.

**பொருளாதாரம்:**

விவசாயம், சுற்றுலாத்துறை முக்கிய வருமான வளங்கள். வாழைப்பழம், கொப்பரை, கிராம்பு, ஏலம் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.01.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 176
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 174

பரிசுக்குரியவர்:
செல்வி யோகினி திருக்கணேசன்,
சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| டி.கே. என். ரிஷாதா, தமிழ் மகளிர் ம.வி. பதுளை. | றமீஸா, முஸ்லிம் மகா வித்தியாலயம், ஹாலி-எல. |
| ரி. ஷர்மிலா நிர்மலா, நு/தமிழ் மகா வித்தியாலயம், நோர்வூட். | குமாரசாமி தனுஷியா, சென்-மெத்தியூஸ் கல்லூரி, தெனியாய. |
| சத்தியசீலன் துசாந்தன், கார்மேல் பாத்திமா கல்லூரி,கல்முனை. | சூ. செந்தூரன், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| செல்வன் எம்.எஸ்.எம்.வாரிஸ், ஹிஜ்ரா வீதி, கிண்ணியா-03. | ஏ.ஓ. அஸ்மியா, பாதிமா மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம். |
| தி. அருட்செல்வி, உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருகோணமலை. | எம். கோபிநாத், சென். பீட்டர்ஸ் கல்லூரி, கொழும்பு-04. |

## ஆர்க்கிமிட்டீஸ்

ஆர்க்கிமிட்டீஸ் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு கணித மேதை. இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த சிலித் தீவில் சைரக்யூஸ் என்னுமிடத்தில் கி.மு.287ல் பிறந்தார்.

பின்னர் சைரக்யூஸ் நாட்டின் மன்னனுக்கு இவர் உதவியாளராகப் பணியாற்றி வந்தார்.

ஒரு நாள் அரசன் தங்கத்தினாலான கிரீடம் ஒன்றை ஆர்க்கிமிட்டீஸிடம் கொடுத்து, அது சுத்தமான தங்கத்தால் செய்யப்பட்டதா அல்லது வேறு உலோகம் அதில் கலந்திருக்கிறதா என்று கண்டு பிடிக்கும்படி கூறினான். அதே வேளை கிரீடத்திற்கு எந்தச் சேதமும் ஏற்படக்கூடாது என்றும் கூறினான்.

முதலில் ஆர்க்கிமிட்டீஸிற்கு அதை எப்படிக் கண்டுபிடிப்பது என்று தெரியவில்லை. அதே சிந்தனையுடன் ஆர்க்கிமிட்டீஸ் குளிக்கச் சென்றார். தண்ணீர் நிரம்பிய தொட்டியில் இறங்கியவுடன் தண்ணீர் மட்டம் உயர்ந்து சிறிதளவு தண்ணீர் வெளியே வழிந்ததைக் கண்டார். உடனே அவருக்கு ஓர் உண்மை புலப்பட்டது. அப்படியே எழுந்து "யுரேக்கா! யுரேக்கா!" (கண்டுபிடித்துவிட்டேன்... கண்டுபிடித்துவிட்டேன்) என்று கூவிக் கொண்டு ஓடினார்.

மன்னன் கொடுத்த கிரீடத்தை நீருள்ள சிறு தொட்டியில் மூழ்க வைத்தார். தொட்டியில் இருந்து வெளியேறிய தண்ணீரின் நிறையை அளந்தார். பின்னர் கிரீடத்தின் நிறைக்குச் சமமாக சுத்தமான தங்கத்தை



எடுத்து நீரை நிரப்பி அந்தத் தொட்டியில் மூழ்க வைத்தார். அதிலிருந்து வெளியேறிய நீரின் நிறையை அளந்தார். இரு வழியிலும் பெறப்பட்ட நீரின் நிறைகளை ஒப்பிட்டார். கிரீடம் சுத்தமான தங்கமாக இருந்தால் இரண்டும் சம நிறையாக இருக்கும் அல்லவா? ஆனால் அவ்விதம் இருக்கவில்லை. எனவே கிரீடம் சுத்தமான தங்கத்தால் செய்யப்படவில்லை என்று முடிவு செய்தார்.

இந்த அரிய விஞ்ஞான உண்மை தான். 'ஆர்க்கிமிட்டீஸ் தத்துவம்' ஆகும்.

கணிதத்தில் மட்டுமன்றி வானவியலிலும், பௌதீகத்தின் பலதுறைகளிலும் ஆர்க்கிமிட்டீஸ் ஆராய்ச்சி செய்து பல அரிய உண்மைகளைக் கண்டுபிடித்தார். கி.மு. 212ல் சைரக்யூஸ் நாட்டை ரோமானியர்கள் கைப்பற்றியபோது ஆர்க்கி மிட்டீஸை அவர்கள் கொன்று விட்டார்கள்.




* **தடிமன் வரக் காரணம் என்ன?**
  வைரஸ் என்னும் ஒரு வகை நுண்ணுயிர்த் தாக்குதலால்தான் தடிமன் வருகின்றது;
* **பனி, குளிர், தண்ணீர் ஆகியவற்றால் தடிமன் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது ஏன்?**
  பனி, குளிர், தண்ணீர் போன்றவை உடலுக்குக் குளிர்ச்சியை ஏற்படுத்தும். குளிர்ச்சியான சூழ்நிலையில் உடல் எதிர்ப்பு சக்தி குறைந்து வைரஸ் தாக்குதல் அதிகமாக இருக்கும்.
* **தடிமனுக்கு மருந்து ஏதாவது உண்டா?**
  தடிமனுக்கு அநேகமானோர் மருந்துகளைப் பயன்படுத்துவதில்லை. அது தானாக வந்து விட்டுத் தானாகச் சென்றுவிடும்.
* **தடிமனைக் கட்டுப்படுத்துவதில் விட்டமின் 'சி'யின் பங்கு என்ன?**
  விட்டமின் 'சி'யை உட்கொண்டால் உடலுக்கு தடிமனை எதிர்க்கும் சக்தி வரும் என்று அநேகம் பேர் எண்ணுகின்றனர். ஆனால் இதைப் பல மருத்துவ நிபுணர்கள் மறுத்துள்ளனர். அதனால் விட்டமின் 'சி' தடிமனுக்கு எந்த விதத்திலும் பயன் தராது.
* **உலகில் தடிமனே வராத மனிதர்கள் உள்ளனரா?**
  ஆம். உலகில் 6 வீதத்தில் 4 சதவீதம் பேர் தடிமன் தாக்காதவர்கள். ஆனால் இவர்களுக்கு மற்ற நோய்களின் தாக்கம் அதிகம் இருக்கும் என்று ஜெர்மனியில் உள்ள தடிமன் ஆராய்ச்சி மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

## புலி

பூனைப்பிரிவில் மிகப் பெரிய மிருகம் புலிதான்.

மிக வேகமாக ஓடக்கூடிய புலி ஒரே பாய்ச்சலில் 30 அடி தூரத்தைக் கடந்து விடக்கூடியது. இது இரவில் தான் வேட்டையாடும். மான், மரை, காட்டெருமை, காட்டுப்பன்றி ஆகியவற்றை விரும்பி உண்ணும். ஒரே இரவில் 23 கிலோ மாமிசத்தைச் சாப்பிடும். தனது உடலில் ஏற்படும் காயங்களை நாக்கால் தடவியே குணமாக்கிவிடும். தனது நாக்கால் எந்தப் பகுதியையாவது தொட முடியாவிட்டால், தனது எச்சிலை முன் காலில் துப்பிக் காயம் பட்ட பகுதியில் தடவும். அப்படியும் முடியாவிட்டால் இன்னொரு புலியிடம் தன் காயத்தைக் காண்பித்து நாக்கால் நக்கிவிடச் சொல்லும்.



பிறக்கும்போது குட்டிப் புலிகள் மிகவும் சிறியதாக, கண் தெரியாததாக இருக்கும். தமது இருப்பிடத்தை யாரும் கண்டுபிடித்து விடக்கூடாது என்பதற்காக தாய்ப்புலி அடிக்கடி இருப்பிடத்தை மாற்றும். தன் குட்டிகளை புலி கவனமாகப் பார்த்துக் கொண்டபோதும் ஆறு குட்டிகளில் இரண்டு குட்டிகள் தான் உயிருடன் இருக்கும்.

கஸ்பியன் கடலைச் சுற்றியுள்ள காடுகளை அழித்து நெல் பயிரிடுவதற்காக ரஷ்ய இராணுவம் அங்குள்ள ஆயிரக்கணக்கான புலிகளைக் கொன்றது.

சீனாவிலும் நெல் உற்பத்திக்காக காடுகளை அழிக்கும்போது புலிகளும் அழிக்கப்பட்டன.

உலகில் பல பாகங்களிலும் தோல், பல், இறைச்சி என்பவற்றிற் காக புலிகள் வேட்டையாடப்படுகின்றன.

இப்போது ஆசியாக் கண்டத்தில் மட்டும்தான் புலிகள் அதிகமாக உள்ளன. புலிகளின் எண்ணிக்கை வெகு வேகமாகக் குறைந்துவருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

## இதுவரை

அவர்கள் இளம் காதலர்கள்-ஆனந்த்-மல்லிகா.

இருவரும் சந்தோஷமாக இருக்க தனியான மலைப் பகுதிக்குச் சென்றனர். அங்கே புதர் ஒன்றுக்குள் ஒரு பிணம் கிடக்கிறது. ஆனந்த் பொலிசாருக்கு அறிவிக்கிறான். பொலிசார் வருகின்றனர். அது ஓர் ஆண் பிணம். கொல்லப்பட்டவர் ஷர்மா என்று கண்டறிந்து அவரது வீட்டுக்குச் சென்று அவர் மனைவியிடம் விசாரிக்கிறார்கள். மனைவி பெயர் அனிதா. ஷர்மாவின் இரண்டாவது மனைவி. கொலையான ஷர்மாவின் முதல் மனைவியின் மகள் மோனிக்கா. சட்டத்தரணி கணேஷின் உதவியை நாடுகிறாள் மோனிக்கா.

அனிதாதான் தன் அப்பாவை- சொத்துக்காக கொலைசெய்திருக்கிறாள் என்று சந்தேகிக்கிறாள் மோனிக்கா.

கணேஷ் அனிதாவிடம் விசாரணை நடத்துகிறான். அனிதாவின் இளமையும், அழகும் கணேஷையும் கலவரப்படுத்துகின்றன. விசாரணையை முடித்து விட்டுச் சென்ற கணேசுக்கு அவசரமாக போன் செய்கிறாள் அனிதா. உடனே அனிதாவிடம் செல்கின்றான் கணேஷ். தன்னை யாரோ கொல்ல முயற்சித்ததாகக் கூறும் அனிதா அவனைத் தன்னுடன் தங்குமாறு வேண்டுகிறாள். அங்கே இரவு அந்த மர்ம மனிதனின் தாக்குதலு க்கு ஆளாகின்றான்.

மறுநாள் இன்ஸ்பெக்டர் ராஜேஷைச் சந்திக்கும் கணேஷ் மீண்டும் அனிதாவின் வீட்டுக்குச் செல்கிறான். பாஸ்கர் நொண்டியபடி நடப்பதை அவதானிக்கிறான்.

உயில் விஷயம் பற்றி மோனிக்கா வினவ, குளித்துவிட்டு வந்த அனிதாவின் மேல் கணேஷின் கவனம் திரும்பவே, அவனைக் கோபமாகத் திட்டித்தீர்த்துவிட்டு வெளியேறுகிறாள்.

அனிதாவை மணக்க விரும்புவதாக கூறுகிறான் கணேஷ். மற்றொரு திருமணத்தை மறுக்கும் அனிதாவுடன் உரையாடிவிட்டுப் புறப்படும் கணேஷ் அங்கே பாஸ்கரைக் காண்கிறான்.

வெறுப்படைந்த கணேஷ் பாஸ்கருடன் சண்டையிடுகிறான். அன்றிரவே மீண்டும் அனிதாவீடு திரும்பும் கணேஷ் மோனிக்காவுடன் ஷர்மாவின் அறையைச் சோதனையிடுகிறான். போட்டோ ஆல்பத்திலிருந்த கோவிந்த்தின் புகைப்படத்தை உருவிக் கொண்டு வீடு திரும்புகிறான். இனி.....

# அனிதா இளம் மனைவி 10

நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன் -சுஜாதா-

தன் வீட்டு முகப்பில் கார் நின்றதும் எதிரே காத்திருந்த அந்த ஆள் எழுந்து தன்னை நோக்கி வருவதைக் கணேஷ் கவனித்தான். அவன் உயரம், கனம், அவன் உடையமைப்பிலிருந்து அவன் சமூக மட்டம் எல்லாவற்றையும் கணித்தான்.

காரின் கதவைப் பூட்டும்போது அவனைக் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. உதட்டில் ஒரு மெட்டைப் பொருத்திக் கொண்டு தன் பையிலிருந்து சாவி எடுத்து முன் கதவைத் திறக்கையில்-

"ஒரு நிமிஷம்!" என்றான் அவன்.

கணேஷ் திரும்பி அவனைப் பார்த்தான். அவன் ஒன்றும் அப்படி அழகனாக இல்லை. உண்மையைச் சொல்லப்போனால் சில ஆக்ரோஷமான காரியங்களுக்கு என்றே படைக்கப்பட்டவன் போல் தோல் ஜாக்கெட்டும், கையில் தொள தொள என்று கடிகாரச் சங்கிலியும், காதருகில் சூடு போட்டது போல இறங்கின கிராப் மயிரும், கட்டுப்பாடில்லாத மீசையும்....கணேஷ் கவனித்தது ஒன்று மட்டும்தான். 'இவன் என்னைவிடச் சுத்தமாகப் பத்துக்கிலோ அதிக எடையுள்ளவன்.'

"என்ன வேண்டும்?" என்றான்.

"உன்னுடன் பேச வேண்டும்."

"என்ன பேச வேண்டும்?"

"வியாபாரம்! கதவைத் திற!"

"என்ன வியாபாரம்?"

"சொல்கிறேன்...! கதவைத் திற!"

"என் பெயர் கணேஷ்."

"உன் பெயர் கணேஷ். எனக்கு நன்றாகத் தெரியும் கணேஷ், என் மச்சானே! கதவைத் திற, உனக்கு அதிஷ்டம் காத்திருக்கிறது."

கணேஷ் அவனை அனுமதிக்கத் தயங்கினான். அவன்தான் சொந்தக்காரன் போல உங்ளே நுழைந்தான். சுவரில் இருந்த விளக்கின் பட்டனை அழுத்த, ஒளி வெள்ளத்தில் இன்னும் தெளிவாக அவனைப் பார்க்க முடிந்தது. பார்த்த காட்சியை அவன் ரசிக்கவில்லை. வந்தவன் கனமாக சோபாவில் உட்கார்ந்து, "ஃபானைப் போடுகிறாயா?" என்று கேட்டான்.

"என்ன வேண்டும் உனக்கு?"

"நான் கேட்க வேண்டிய கேள்வி. உனக்கு என்ன வேண்டும்?"

"எதற்கு?"

"எல்லாவற்றையும் மறப்பதற்கு. பேசாமல் இந்தக் கேஸிலிருந்து லீவு எடுத்துக் கொண்டு சும்மா இருப்பதற்கு."

"எந்தக் கேஸ்?"

"நீ ஓர் ஈ ஒட்டி லாயர். நீ எடுத்துக் கொண்டிருப்பது ஒரே கேஸ்தான். அனிதா."

"அனிதா? ஓ! மிஸஸ் ஷர்மா"

"மிஸஸ் ஷர்மா! அந்த மனிதர் உயிரோடிருந்தால் உன்னை வெட்டிச் சாய்த்திருப்பார்."

"அவர் உயிரோடு இல்லாததால் தானே நான்...."

"அதிகம் பேசாதே; எவ்வளவு வேண்டும் கேள்!" என்று பாண்ட் பைக்குள் கைவிட்டான் அவன்.

"எதற்கு?"

"இந்தக் கேலிக் கூத்து வி-ல-கு-வதற்கு. இந்த நிமிஷத்திலிருந்து முழுமையாக விலகி விட வேண்டும். அந்த வீட்டுப் பக்கம் நீ அடியெடுத்து வைக்கக் கூடாது. அந்தப் பெண் மோனிக்காவை நீ பார்க்கக்கூடாது. அவ்வளவுதான். சுத்தம் க்ளோஸ். என்ன கேட்கிறாய்?"

"ஒரு கேள்வி. நீ இதில் யார்?"

"ஒரு நண்பன். "

"யாருக்கு?"

"இப்போது உனக்கு. உன்னை ஆபத்திலிருந்து காக்க வந்த நண்பன் நான். எண்ணிக்கையைச் சொல். செக் கிழிக்கிறேன். எவ்வளவு ஆயிரம் வேண்டும் சொல்!"

"உன் பெயர் என்ன?"

"சாஸ்திரி."

கணேஷ் சிரித்தான். "மறுபடியும் முயன்று பார். சாஸ்திரியாம் சாஸ்திரி!"

"சிரிக்காதே. பணம் எவ்வளவு என்று சொல்!" அவன் ஒரு செக் புத்தகத்தை உருவித் தயாராக வைத்திருந்தான். ஸிண்டிகேட் பாங்க்கின் புத்தகம் அது.

"செக் ரப்பராக இருந்தால்?"

"காஷ் வேண்டுமா? அரை மணியில் தயார் செய்கிறேன். எவ்வளவு என்று சொல் முதலில்."

"யோசித்துச் சொல்ல வேண்டும்" என்றான் கணேஷ்.

"இதில் என்ன யோசனை உனக்கு? நூறுக்கு மேல் எண்ணத் தெரியாதா?"

"சாஸ்திரி! கெட் அவுட்!"

"என்ன, என்னைச் சரியாகப் பார்த்தாயா? கெட் அவுட் என்கிறாயே? என்னைச் சரியாகப் பார்த்துத்தான் சொன்னாயா?" எழுந்து நின்று அழகுப் போட்டியில் போல் உடம்பைக் காண்பித்தான் சாஸ்திரி.

கணேஷ், "கெட் அவுட்!" என்றான் மறுபடியும்.

"டேய், உனக்குச் சாக ஆசையா?"

"சாஸ்திரி, இதோ பார். இதுதான் வழி- வெளியே போகும் வழி. எக்ஸிட்டுக்கு ஸ்பெல்லிங் தெரியுமா உனக்கு?"

சாஸ்திரி வீசினான். கணேஷ் ஒதுங்கிக் கொள்ள அந்த வீசல் சோபாவின் முனையில் பட்டது. நன்றாகப் பட்டிருக்க வேண்டும். சாஸ்திரிக்கு மேலும் கோபம் ஏற்பட்டு மதயானைபோல் கணேஷின் மேல் பாய்ந்தான். கணேஷ் தப்பித்து அந்தச் சோபாவைச் சுற்றிச் சுற்றி வந்தான், சாஸ்திரி இரண்டு கைகளையும் அகல விரித்துக் கொண்டு அவனைக் கோழி பிடிக்கிறவன் போல அணுகினான். கத்தியை உருவினான்.

கணேஷ், "சோட்டேலால்! சோட்டேலால்!" என்று கத்தினான்.

சரியான கத்தல் அது. எதிர் வீட்டில் சைக்கிள் கடைக்கு முன் உட்கார்ந்திருந்த சோட்டேலாலுக்கு ஸ்பஷ்டமாகக் கேட்டது.

ஓடி உள்ளே வந்த சோட்டேலால் அப்படியே அந்தக் கையைப் பற்றிக் கத்தியை உதிர்த்து முழங்காலால் அவன் முதுகில் உதைக்க-

கணேஷ் சேர்ந்து கொண்டு இரண்டு பேரும் சாஸ்திரியை 'யக்னும்' செய்தார்கள்.

அவனை உட்கார வைத்து சோடா உடைத்துக் கொடுத்து, கீழேவிழுந்து கிடந்த அவன் செக் புத்தகத்தைத் திருப்பி அவன் பையில் போட்டுவிட்டு, "சாஸ்திரி! இப்பொழுது சொல்," என்றான் கணேஷ்.

சாஸ்திரி, "என்ன?" என்று கேட்க நினைத்தான். குரல் எழும்பவில்லை. அவனால் எழுந்திருக்க முடியவில்லை.

"சாஸ்திரி நான் போலிஸ் கம்ப்ளெய்ண்ட் கொடுத்து உன்னை நேராகச் சிறைக்கு அனுப்ப முடியும். இத்தனை பேர் சாட்சி. போங்கப்பா போங்க! என்ன வேடிக்கை இங்கே....போ...ஊம் சொல்லு," என்றான் கணேஷ்.

"என்ன சொல்ல?"

"உன்னை யார் அனுப்பி வைத்தார்கள்.....?"

"ஒருவருமில்லை."

"சோட்டேலால், போலீசுக்கு போன் செய்து ஃபிளையிங் ஸ்க்வாடைக் கூப்பிடு..... அவர்கள் தீர்த்து வைக்கட்டும். இவன் என்வீட்டில் நுழைந்து என்னை அடித்தான். கத்தியால் குத்த வந்தான். இதோ பார், ரத்தம், சட்டை கிழிந்திருக்கிறது... சாஸ்திரி யார் உன்னை அனுப்பி வைத்தார்கள்?"

"பாஸ்கர்" என்றான் சாஸ்திரி.

"தாங்க்யூ! சாஸ்திரி, இன்னொரு சோடா சாப்பிடுகிறாயா?"

☆☆☆

மறுநாள் காலை சுமார் பத்துமணி அளவில் கணேஷ் மூன்று தடவை தொலை பேசினான், (அல்லது டெலிஃபோனில் தான்) அவைகள் வருமாறு.

முதலில் இன்ஸ்பெக்டர் ராஜேஷுக்கு:

"இன்ஸ்பெக்டர் ராஜேஷ்? கணேஷ் ஹியர்... ஞாபகமிருக்கிறதா? எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்....இறந்து போன ஷர்மாவின் போஸ்ட்டமார்ட்டம் ரிப்போர்ட் வேண்டும்...யாரைக் கேட்க வேண்டும்? ஒரு நிமிஷம் குறித்துக் கொள்கிறேன். சொல்லுங்கள். (எழுதிக்கொண்டான்) ஒன்றுமில்லை....அந்த நான் பார்க்க வேண்டும்.... ஒரு தடவை அதைப் பார்க்க அனுமதித்தால் போதும். கோவிந்த் அகப்பட்டானா? இல்லையா? சிக்கல்தான்.....இல்லை சார், எனக்கு ஒரு சர்டிபிகேட் வேண்டும். அந்த அளவில் தான் என்னுடைய இண்டரெஸ்ட்.... நான் வந்து பார்க்கிறேன் உங்களை- பை."

இரண்டாவது இந்திய விமானப் படையின் தலைமைச் செயலகத்திற்கு:

"ஏர் ஹெட்க்வார்ட்டர்ஸ்? எக்ஸ்டென்ஷன் 239 ப்ளீஸ்! ஸ்க்வாட்ரன் லீடர் ராமலிங்கம்.... தாங்க்யூ ராமலிங்கம்! கணேஷ்....ஹியர், (புன்சிரிப்பு) ஒ எஸ் ஒ எஸ், ஹௌ இஸ் ப்ரேம்? நீங்கள் எல்லாம் பெரிய ஆசாமிகள். அப்படி இல்லை! பை தவே உங்களிடமிருந்து ஒரு சமாச்சாரம் வேண்டும். கொஞ்சம் வினோதமாகப்படும் உங்களுக்கு- விஷயம் இதுதான்: ஃப்ளைட் லெஃப்டினெண்ட் ராஜா என்று ஒரு ஆசாமி பற்றிச் சில தகவல்கள் வேண்டும். ராஜா? ஆர் ஏ ஜே ஏ ஆர் ஃபார் ராதிகா ஏஃபார் அன்ஜெலா- ஜே ஃபார் ஜானகி ஏஃபார் அருணா (சிரிப்பு) ராஜா. அந்த மாதிரி ஒரு ஆள் சில வருஷங்களுக்கு முன்பு ஆக்ராவில் ஒரு டிரான்ஸ்போர்ட் விமான நிலையத்தில் இறந்து போயிருப்பதாக எனக்கு ஒரு பார்ட்டி தகவல் தந்தார்கள். இது எவ்வளவு தூரம் நிஜம் என்று தெரிய வேண்டும். அதெல்லாம் இல்லை. ஒரு கிராஸ் செக்... எப்பொழுது இந்தத் தகவல் கிடைக்கும் எனக்கு, ஓகே, இன்று மாலை 4.30'க்கு வாயு பவன் வாசலில் வந்து காத்திருக்கிறேன். ஃபிளைட் லெஃப்டினெண்ட் ராஜா....ஆர்....ஃபார் ஓகே! தாங்ஸ்!"

மூன்றாவது, வெளிநாட்டுத் தபால் தந்தி நிலையத்திற்கு:

"ஓ.ஸி.எஸ்? என்க்வ்யரிஸ் ப்ளீஸ்... என்க்வ்யரிஸ்? டில்லியிலிருந்து அமெரிக்காவுக்கு கேபிள் அனுப்பினால் அது போய்ச் சேர எத்தனை நேரமாகும்? என் பெயர் கணேஷ். நான் ஒரு லாயர்....எத்தனை மணி நேரமாகும் என்று சொல்லுங்களேன்- தாங்க்யூ, வெரிமச்! மிஸ், உன் குரல் அழகாயிருக்கிறது!"



தலை வாரிக் கொண்டான். இரண்டு ப்ரோட்டின் பிஸ்கட்டுக்களைக் கடித்துக் கொண்டான். கிளம்பினான்.

★★★

"உங்களுக்கு யார் வேண்டும்?" என்றான் வேலையாள்.

"பாஸ்கர் இல்லையா?" என்றான் கணேஷ்.

"இல்லையே, அவர் ஷர்மா ஸாபின் வீட்டில் இருப்பார்."

கணேஷ் தன்னைச் சுற்றிப் பார்த்தான். பாஸ்கரின் அறை சுத்தமாக இருந்தது. 'தி மணி கேம்' என்கிற புஸ்தகம் தென்பட்டது. 'மானார்க்' பவுடர் டப்பா? பச்சையில் குப்பைக் கூடை மேஜை நாற்காலி. விவேகாநந்தர் ஹேமமாலினி.

"நீ அவர் வேலைக்காரனா?" க்ரூப் ஃபோட்டோ.... டெலிபோன்...

"ஆமாம்....நீங்கள்?" சுத்தமான ஒற்றைப் படுக்கை, பத்திரிகைகள்.

"அவர் சினேகிதன். ஆக்ராவிலிருந்து வருகிறேன்."

"உங்கள் பெயர் சொல்லுங்கள். வந்தால் சொல்கிறேன்."

"நானே போய்ப் பார்க்கிறேன். உன் பெயர் என்ன?" கார்டுராய் ஷூக்கள். கறுப்புப் பெட்டி, இரும்பு அலமாரி.....

"ராம் ஸ்வரூப்," நடு மேஜையில் சீட்டு கட்டில் நிர்வாணம்.

"நல்ல பெயர் ராம் ஸ்வரூப் ஒரு விஷயம்."

"என்ன ஸார்?"

"பத்து நாளுக்கு முன்னால் பாஸ்கர் ஆக்ரா வருவதாக எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். நான் அப்பொழுது ஆக்ராவில் இல்லை. திடீரென்று வேலை விஷயமாக வெளியூர் போக வேண்டியிருந்தது.....உன் எஜமான் ஆக்ரா சென்றிருந்தாரா? என்று தெரிய வேண்டும்."

"எப்பொழுது?"

"சென்ற பதினெட்டாம் தேதி அல்லது பதினேழாம் தேதியில்...."

"இல்லையே! அவர் எங்கேயும் போகவில்லை."

"டில்லியை விட்டு எங்கேயுமே போகவில்லையா?"

"இல்லையே! சென்ற நாலைந்து மாதங்களாக டில்லியில் தானே இருக்கிறார்?"

கணேஷ் பாஸ்கரின் வீட்டை விட்டு வெளியே வந்து தன் காரைக் கிளப்பி, சாலையில் வாகனங்களின் ஓட்டத்தில் கலந்து கொண்டான். மெதுவாக யோசித்துக் கொண்டே ஓட்டினான், பாஸ்கர், நீ அப்படிப்பட்டவனா? பொய் சொல்லியிருக்கிறாயா? என்னை விலக வைக்கப் பணம் கொடுக்கிறாயா?, என்னை அடித்து உதைக்க முயற்சி செய்கிறாயா? ஏன் பாஸ்கர், ஏன்? கண்டு பிடிக்கிறேன். கவலைப்படாதே...!"

கணேஷ் வசந்த் விஹாரை அடைந்து உள்ளே நுழைந்ததும் மோனிக்கா வரவேற்றாள்.

"ஹலோ! யூ லுக் க்ரேட். யாருக்காக இந்த அலங்காரம்?" என்றாள்.

"குட் மார்னிங்," என்றான் சிக்கனமாக.

"கணேஷ், உனக்கு என்ன வயது?"

"உன் வயதுடன் பத்தைச் சேர்த்துக் கொள்."

"நான் அதைத்தான் விரும்புகிறேன்."

"எதை?"

"என்னைவிட அதிக வயது உள்ளவனை. அதிக அனுபவமுள்ளவனை......"

"நேசிப்பதை...." என்றான் கணேஷ் அவசரமாக "உன்னைவிட அதிக வயதுள்ளவன், அதிக அனுபவம் உள்ளவன். சற்று அவசரத்திலிருக்கிறான். அனிதா எங்கே?"

"தரிசிக்க வேண்டுமா? ஸாரி, அவள் இல்லை."

"இல்லை என்றால்?"

"நேற்று இரவு எங்கேயோ வெளியில் சென்றாள். இதுவரை திரும்பி வரவில்லை."

கணேஷ் கைக்கடிகாரத்தைப் பொறுமையுடன் பார்த்துக் கொண்டான்.

"கணேஷ், உன்னிடம் நான் ஒரு முக்கியமான! செய்தி சொல்ல வேண்டும்," என்றாள் மோனிக்கா.

"சொல், தனியாகத்தான் இருக்கிறோம்."

"எனக்கு நேற்று ஒரு டெலிஃபோன் கால் வந்தது. யாரோ ஒருவன் என்னைக் கூப்பிட்டான். பெயர் தெரியவில்லை. என் அப்பாவின் உயில் மூலம் எனக்கு வரப் போகும் கம்பெனி ஷேர்களை விற்கிறாயா என்று கேட்டான். நல்ல விலைக்கு விற்கச் சம்மதம் என்றால் இன்று 11 மணிக்கு கனாட் ப்ளேஸில் ஓர் ஒட்டலுக்கு என்னை வரச் சொன்னான்."

"குரல் பழக்கமானதாக இருந்ததா?"


"இல்லை, புதுக் குரல்."

"வா. போகலாம்," என்றான் கணேஷ்.


ஓர் எடிஸன் காலத்து கிராமஃபோன் அந்த ஹோட்டலில் அவர்களை வாசலில் வரவேற்றது. உள்ளே நுழைந்ததும் எதிரே சுவரில் சிவப்புப் பெயிண்ட் அடித்த சைக்கிள் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. ஒரே புகை மண்டலம். ஜுக் பாக்ஸ் அலறிக் கொண்டிருந்தது. திடும் திடும் என்று டபுள் பேஸ் வெடித்துக் கொண்டிருக்க-ஹிப்பிகள் இந்திய ஹிப்பிகள்-மேல்நாட்டு ஹிப்பிகள்- ஹிப்பியாக ஆவதற்கு ஆசை இருந்தும் பாதி நேர்ந்தும் பெற்றோர்கள் முடிவெட்டுக் கொடுக்கப்பட்ட இளைஞர்கள்- அரை ஹிப்பிகள்.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: எஸ். செல்வம்.
வயது: 25
முகவரி: 56/7, டி.எஸ்.சேனநாயக்க மாவத்தை, கொழும்பு-08.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.




பெயர்: எஸ். மோகனதாஸ்.
வயது: 22
முகவரி: NO.7, VEERASAMY RD, SINGAPORE-207315.
பொழுதுபோக்கு: சினிமா, பத்திரிகை.




பெயர்: எஸ். சுபியான்.
வயது: 30
முகவரி: BLOCK NO-03, STREET NO-21, HOUSE NO-189, JABER AL ALI, KUWAIT.
பொழுது போக்கு: வானொலி, பேனாநட்பு.



பெயர்: எஸ். சாந்தினி.
வயது: 22
முகவரி: ஒஸ்போர்ன் மேற்பிரிவு, ஹட்டன்.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.



பெயர்: எம். அசாம்.
வயது: 20
முகவரி: 23/3, அவிசிரிய வத்தை, தெல்கஹகொட, ஹிங்குல.
பொழுது போக்கு: ரீ.வி., வானொலி.



பெயர்: சி. கௌது.
வயது: 26
முகவரி: கல்பிட்டி வீதி, நுரைச்சோலை.
பொழுதுபோக்கு: பேனாநட்பு.

பெயர்: எம். நௌபர்.
வயது: 18
முகவரி: 273, சபுகஹவத்தை வீதி, துந்துவை, கபுறுகளை.
பொழுது போக்கு: கிரிக்கெட், சினிமா.

பெயர்: ஏ. ஸாம்.
வயது: 18
முகவரி: அல்ஹிதாயா வீதி, பாலமுனை-01.
பொழுதுபோக்கு: வானொலி, பேனாநட்பு.

பெயர்: எஸ். சுகந்தன்.
வயது: 23
முகவரி: GROSSWIESEN STR-102, 8051, ZURICH, SWITZERLAND.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஜெ. தினேஷ்.
வயது: 16
முகவரி: 275, தல்பிட்டிய, அட்டபாகே, கம்பளை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: சி. கணேஷ்ராஜ்.
வயது: 21
முகவரி: பிரதான வீதி, ஆரையம்பதி-02.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எம். உவைஸ்.
வயது: 22
முகவரி: P.O. BOX-1679, BURAYDAH, K.S.A.
பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல்.



படிப்பகம்

www.padippakam.com



# தூக்கு மேடை குறிப்பு

ஜூலிஸ் பூசிக் 12

## இதுவரை

செக்கோஸ்லாவாக்கிய நாட்டின் போராளிகளின் தலைவர் ஜூலிஸ் பூசிக். ஜெர்மன் படைகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர்.

ஜெர்மன் இரகசியப் பொலிசாரால் அவர் கைதுசெய்யப்படுகிறார். தான் ஜூலிஸ் பூசிக் அல்ல என்கிறார். அவரது மனைவியும் கைதாகிறார். பூசிக் சித்திரவதை செய்யப்படுகிறார்.

அவர் இறந்து விட்டதாக சிறையில் உள்ள மனைவிக்கு தவறான தகவல் கிடைக்கிறது. பின்னர் அது வதந்தி என்று அறிகிறாள். அவளை மட்டும் போலந்துக்கு கடினவேலைகள் செய்யும் தண்டனைக்காக அழைத்துப் போகிறார்கள். சிறையில் சித்திரவதைகள் மத்தியில் உறுதியோடு தாக்குப் பிடித்தவர்களைப் பற்றி விபரித்த பூசிக், சிறை அதிகாரிகள் பற்றியும் விபரிக்கிறார்.

அவர்களது முரண்பாடான குணங்களை சுவாரசியமாகச் சொல்கிறார். **இனி....**

## 'அது'

ஒருநாள் காலையில் பெட்செக் கட்டிடத்துக்குச் செல்ல முன்பாக, சிறையின் கீழ் தாழ்வாரத்தில் நாங்கள் காத்திருந்தோம்.

ஒவ்வொரு நாளும் இங்கு நிற்கும்போது, பின்னால் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கும் பொருட்டு, நெற்றியை சுவரோடு ஒட்டினாற்போல வைத்து நிற்கவேண்டும்.

அப்படி நிற்கும்போது அன்று காலை நான் ஒரு புதிய குரலைக் கேட்டேன்.

நான் ஒன்றையும் பார்க்க விரும்பவில்லை. எதையும் கேட்கவும் விரும்பவில்லை. "என்னை உனக்குத் தெரியாது. ஆனால் விரைவில் தெரிந்து கொள்வாய்.



நான் யார் என்று"

அந்தக் குரலைக் கேட்க எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. 'குட்-சோல்ஜர் ஸ்கிவிக்' என்ற நாவலில் வரும் முட்டாள் லெப்டினன்ட் டூப் பேசுகிற பேச்சு என் நினைவுக்கு வந்தது.

என்னைவிட அனுபவம் வாய்ந்த என் பக்கத்துத் தோழர் மெதுவாக இடித்து சிரிப்பை நிறுத்தும்படி கூறினார்.

எங்களுக்குப் பின்புறம் கேட்ட அந்தக் குரல் எஸ்.எஸ். யூனிஃபோமுக்குள் புகுந்திருக்கும் ஒரு அற்ப, குள்ள ஜந்துவினுடையது.

வித்தான் என்ற பெயரில் வெகு நாட்கள் அது செக்கோஸ்லோவாக்கிய சேனையில் உயர்தர சார்ஜெண்டாக நீண்ட நாள் வேலை பார்த்தது.

நாங்கள் அவனைப்பற்றிப் பேசும் போதெல்லாம் அஃறிணை- ஒருமையில் 'அது' என்றே குறிப்பிட்டோம்.

உண்மை என்னவென்றால், ஆட்சியின் பிரதம தூண்களில் ஒன்றாகிய அவனுடைய குணாதிசயங்களுக்குப் பொருத்தமான ஒரு பரிகாசப் பெயரைக் கண்டுபிடிக்கப் பல தடவை முயற்சித்தும் எங்களால் முடியவில்லை.

முட்டாள்தனம், ஈனபுத்தி, ஆணவம், அற்பத்தனம், அயோக்கியத்தனம் முதலியவற்றின் கதம்பத்திற்கு என்ன பெயரிட முடியும்?

"பன்றியின் முழங்கால் உயரம்கூட இல்லை"- இதுதான் அவனையொத்த குள்ளர்களை மட்டந்தட்ட, நாங்கள் உபயோகித்த வாக்கியம். இது அவர்களுடைய இதயத்திலே தைத்தது.

தன் குள்ள உருவத்தை நினைத்து அவன் சஞ்சலப்பட்டான். தன்னைவிடப் புத்தியிலும், உருவத்திலும் பெரியவர்களாக இருப்பவர்கள்மீது அவன் வஞ்சம் தீர்த்தான்.

ஆனால், அடி உதைகளைக் கொண்டல்ல, அதற்குப் போதிய துணிச்சல் அவனுக்கு இல்லை. ஒற்றுக் கேட்டல், உளவறிதல், காட்டிக் கொடுத்தல்- இவையே அவன் வஞ்சம் தீர்க்கக் கையாண்ட முறைகள்.

வித்தான் கட்டிய கதைகளினால் எத்தனையோ கைதிகள் உடல் உருக்குலைந்தனர். எத்தனையோ பேர் உயிரிழந்தனர்.

தன் பதவியையும், அந்தஸ்தையும் பற்றிப் பெருமைப்பட்டு, தலைக்கனத்துடன் அவன் தாழ்வாரத்தில் நடைபோட்டு தன்னந்தனியாக வருவதைப் பார்க்கப் பார்க்க எல்லோருக்கும் சிரிப்பு பொத்துக்கொண்டுவரும்.

அவன் நடையைப் பார்க்க அங்கு ஒருவரும் இல்லாதபோதும் அவன் நடைபோடுகிறான்.

அவன் யாரையாவது சந்திக்கும்போது எதன்மீதாவது ஏறி நிற்கவேண்டும் என்று அவனுக்குத் தோன்றுகிறது.

எங்களில் ஒருவரை விசாரிக்கும்போது, நாற்காலியின் கைபிடியில் அமர்ந்துகொள்கிறான். அது அசௌகரியமாக இருந்தாலும், மணிக்கணக்காக அப்படியே அமர்ந்திருப்பான். அது வேறு எதற்காகவும் அல்ல; அந்த நிலையில் எம்மைவிட உயரமாக இருப்பதனால்தான்.

நாங்கள் சவரம் செய்து கொள்ளும்போது அவன் கடமையில் இருந்தால், ஒரு படியில் ஏறி நின்று கொள்வான்.

காலையில் உடற்பயிற்சி செய்யும்போது புல்மேட்டில் அவன் ஏறி நின்றுகொள்கிறான். அந்த மேடு அவனை கால் அடி உயர்த்தும்.

> 'யுத்தத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை அந்த அதிகாரி இவனுக்கு சிரமப்பட்டு விளக்கிக்கொண்டிருந்தார்'

அவன் பரிகசிக்கத்தக்க கோமாளிதான். ஆனால் அரச வேலை பார்க்கும் ஒவ்வொரு முட்டாள்களையும்போல மனித உயிர்களைப் பொறுத்தவரையில் மிக மிக அபாயகரமான ஆசாமி.

அவனுடைய முட்டாள்தனத்தில் ஒரு ஆற்றலும் மறைந்திருக்கிறது. அதுதான் கொசுவை யானையாக்கும் திறமை.

சிறைச் சட்டங்களில் இருந்து சிறிது பிறழ்ந்து நடந்தாலும் போதும், அது மிகப் பெரிய குற்றமாக- அவனுடைய தற்பெருமைக்கு ஏற்ற முக்கியத்துவமுள்ள குற்றமாக ஆகிவிடும்.

சிறைச் சட்டங்களை அவன் தனக்கு ஏற்றாற்போல வியாக்கியானம் செய்து, தன்னை ஒரு பெரிய ஆளாக மற்றவர்கள் நினைக்கும்படி கட்டளைகளைப் பிறப்பிக்கிறான்.

இவனுடைய குற்றச்சாட்டுக்கள் எந்த அளவுக்கு உண்மை என்று ஆராய்ந்து பார்க்க இங்கு யார் இருக்கிறார்கள்?

## ஸ்மெடோன்ஸ்

'காட்டூண்' படங்களில் பாசிச சூறாவளிப் படையினரின் உருவங்களை நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம்.

இந்த ஸ்மெடோன்ஸைப் பார்த்துத்தான் அந்த உருவங்களை வரைந்திருக்க வேண்டும். அவ்வளவு பொருத்தம். பருத்த சரீரம், பிரேதமுகம், ஜீவனற்ற கண்கள், இவைதான் நாம் காட்டூண்களில் கண்டது. இவையேதான் ஸ்மெடோன்ஸின் தோற்றம்.

மேல் அதிகாரிகளால் இவன் ஜெர்மன் பண்பாடுகளின் உருவம் என்று கருதப்படுகிறான். சுறுசுறுப்பானவன். கஷ்டப்பட்டு வேலை செய்பவன். லஞ்சம் வாங்காதவன்.

ஒவ்வொரு பிராணிக்கும் எவ்வளவு அறிவுண்டு என்பதை, அது எத்தனை வார்த்தைகளை ஆக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறது என்பதைக் கொண்டு அளவிட்டார் ஒரு விஞ்ஞானி.

அந்த ஆதாரத்தின்பேரில் பிராணிகளில் குறைவான அறிவுள்ள பிராணி வீட்டுப் பூனைதான். ஏனெனில் அதன் ஆக்கும் ஆற்றல் 128 வார்த்தைகளே.

அடடா! ஸ்மெடோன்ஸுடன் ஒப்பிட்டால் வீட்டுப்பூனை எத்தகைய மேதையாகப் பிரகாசிக்கிறது!

அவன் வாயிலிருந்து கீழ்க்கண்ட நான்கு வார்த்தைகளைத்தவிர வேறு ஒன்றையும் ஒரு போதும் கேட்டதில்லை.

ஏய்! நீ! ஜாக்கிரதை! உஷார்!

ஒருநாள் சிறை அறைகளின் ஜன்னல் கதவுகள் திறக்கப்பட்டதற்காக சிறைக் கண்காணிப்பாளர் இவனைக் கடிந்து கொண்டார்.

அப்போது இவனைப் பார்க்க வேண்டுமே! அந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அந்தச் சதைக் குன்று பருத்த கால்களால் இங்குமங்கும் ஆடி அசைந்து நகர்ந்தது. அவனுடைய களிமண் தலை முன்புறம் சிறிது நீண்டது.

திடீரென்று அந்த மாமிசமலை தாழ்வாரம் முழுவதும் பயந்து நடுங்கும் வண்ணம் கர்ஜனை செய்தது. அதன் அருகில் நின்றிருந்த இரு கைதிகளின் மூக்கு உடைந்தது. அதுதான் அவன் பிரச்சனைக்குத் தீர்வு காணும் முறை. அதுதான் அவன் சுபாவம்.

சந்திப்பவர்களை எல்லாம் அவன் அடித்தான். சாகும்வரைகூட அடித்தான்.

ஒரு சமயம் ஒரு அறைக்குள் புகுந்து கைதிகளில் ஒருவரை அடித்தான். அந்தக் கைதி நோயாளி. அவர் ஒரே அடியில் துடித்துத் தரையில் விழுந்தார். உடனே அவருக்கு வலிப்புக் கண்டுவிட்டது; கையும், காலும் இழுத்தன.

அந்த வலிப்பின் இழுப்புக்குப் பொருத்தமாக, மற்றவர்களுக்கு ஸ்மெடோன்ஸ் ஒரு பயிற்சி கொடுத்தான். எல்லோரும் தோப்புக்கரணம் போடும்படி உத்தரவிட்டான். நோயாளி தெம்பு முழுவதையும் இழந்து களைத்தவுடன் வலிப்பும் நின்றது. ஸ்மெடோன்ஸ் தன் இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு அப்படிப்பட்ட ஒரு சிக்கலான பிரச்சினையைத் தீர்ப்பதில் தனக்கு கிடைத்த வெற்றியை நினைத்துக் குரூரமாகச் சிரித்தான்.

அவன் நிஜக் காட்டுமிராண்டி. ஒன்றே ஒன்றைமட்டும் அவன் ஞாபகத்தில் வைத்திருந்தான். அடி உதைதான் அனைத்துக்கும் மருந்து என்பதே அது.

இறுதியில் இந்த ஜந்துவுக்கும் ஏதோ நேர்ந்துவிட்டது. ஒரு மாதத்திற்குப் பின்பு சிறையின் வரவேற்பு அறையில் இவனும், இன்னொரு அதிகாரியும் அமர்ந்திருந்தனர்.

யுத்தத்தில் ஏற்பட்டுவரும் மாற்றத்தை அந்த அதிகாரி மிகச் சிரமப்பட்டு இவனுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்.

மண்டையில் விஷயம் ஏறியதும் இவன் எழுந்து நின்றான். அலுவலகக் கதவைத் திறந்து வெளியே எட்டிப்பார்த்தான். யாரும் இல்லை. துளி சந்தடிகூட இல்லை. சிறை நள்ளிரவில் தூங்கிக் கொண்டிருந்தது. கதவை மூடினான். கவனமாகப் பூட்டினான். மெதுவாக ஒரு நாற்காலியில் சாய்ந்தான்.

கன்னத்தில் கையை ஊன்றிக் கொண்டான். வெகுநேரம் தலையைத் தூக்காமல் அமர்ந்திருந்தான். பின்னர் நம்பிக்கை இழந்து சொன்னான்:

"நீ சொல்வது சரிதான், நம்மால் ஜெயிக்க முடியாது...."

கடந்த ஒரு மாதமாக சிறைக்குள் ஸ்மெடோஸின் யுத்த முழக்கம் கேட்கவில்லை. அவனுடைய முஷ்டியின் பலத்தை புதிய கைதிகள் அறியவில்லை.

## சிறை இயக்குநர்

இவன் ஒரு குட்டிச்சர்வாதிகாரி. யூனி ஃபோம் போட்டிருந்தாலும், போடாவிட்டாலும் எப்போதும் கச்சிதமாக ஆடை அணிகிறான்.

பெரிய சீமான்போலத் தோற்றம். தன்னைப்பற்றி பரமதிருப்தி.

நாய்கள், வேட்டையாடுதல், பெண்கள்- இவற்றில் இவனுக்கு நிரம்ப மோகம். ஆனால் இவையெல்லாம் நமக்குச் சம்பந்தமில்லாத விஷயங்கள்.

இவனுக்கு குரூர சுபாவம். அநாகரீகத் திமிர். தன் சொந்தப் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள யாரையும் பலியிடத் தயாராக இருக்கிறான்.

ஹிட்லரின் சேவகத்தில் நிரம்ப நாட்களுக்கு முன்பே சேர்ந்தான். இன்றையப் பதவியையும், அந்தஸ்தையும் முகஸ்துதியினாலும், சூழ்ச்சியினாலும் பெற்றான். சகலவிதமான தில்லுமுல்லுகளையும் செய்து தன் உத்தியோகத்தை காப்பாற்றிக் கொள்கிறான்.

இவன் தன்னைப்பற்றி மட்டுமே சிந்திக்கிறான். இந்த அதிகாரப் பதவியை தனக்காக மட்டுமே முயற்சி செய்து பெற்றான். தனக்காக மட்டுமே இவன் இந்த ஆட்சியிடம் விசுவாசமாக இருப்பான்.

இவனுக்குத் தெரியும், பாசிசத்தின் வீழ்ச்சி இவனுடைய சொந்த வீழ்ச்சியாகவும் இருக்கும்; இவனுடைய சுகபோக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

இவனுக்கு நேர்மாறான இன்னொருவன் இருக்கிறான்.

அவன் பொலிஸ் மாஸ்டர் வீஸ்னர்.

(தொடர்ந்து வரும்)

---

# தப்பு எங்கே?

**வானம்பாடி**

வகுப்பு முடிய, புத்தகங்களை வாரியெடுத்தபடி கிளம்பிய துளசியுடன் மைதிலியும் சேர்ந்து கொண்டாள். பரபரப்பான சாலையைக் கடந்து ஆரவாரமில்லாத மண் வீதியை அடையும் வரையில் அவர்கள் மத்தியில் ஒரு கனத்த மௌனம் ஆட்சி செய்தது. நீண்ட நேரம் ஆக்கிரமித்திருந்த அந்த மௌனத்தை மைதிலி மெல்லக் கலைத்தாள்.

"நீ முன்னே மாதிரியில்லை; இப்போ நிறையவே மாறிட்டே!"

துளசி மௌனமாகக் கண்களில் வியப்புக் குறியைக் காட்டினாள்.

"நீ எங்கிட்டே நிறைய விஷயங்களை மறைக்கிறே."

"மைதிலி புதிர் போடாமல் விஷயத்தைச் சொல்லு. நான் உங்கிட்ட என்னத்தை மறைச்சேன்?"

மைதிலி சிறிது தாமதித்துப் பின் சன்னமான குரலில் வினாவினாள்.

"நான் உங்கிட்டே ஒண்ணு கேப்பேன். என்னைத் தப்பா நினைச்சுக்குவியா?"

"தப்பா நினைக்கமாட்டேன் தாயே. கேக்கிறதைச் சீக்கிரம் கேளு."

"நீ... சங்கரை லவ் பண்றியா?" வார்த்தைகள் தட்டுத் தடுமாறி வெளி வந்தன.

"என்னடி உளர்றே?" துளசி வெடித்தாள்.

மைதிலியின் பதில் சிறிது தயக்கத்துடன் வெளிவந்தது.

"நீ முன்னேயெல்லாம் எந்த ஒரு பையனோடும் கதைக்கவே மாட்டே. இப்போ சங்கரோட மணிக்கணக்கா சிரிச்சுப் பேசுறே. அதுக்கு என்ன அர்த்தம்?"

துளசி ஒரு நொடியில் ரௌத்ர தேவதையானாள்.

"ஒரு ஆணும் பெண்ணும் சிரிச்சுப் பேசினா அது கட்டாயம் காதலாத்தான் இருக்கணுமா? எனக்கும் சங்கருக்கும் இடையில் உள்ள உறவு 'க்ளின் பிரேண்ட்ஷிப்.'




ஏன்டி நீயும் மத்தவங்க மாதிரி என்னைத் தப்பா எடை போடுறே?"

"நான் மத்தவங்க எங்கிட்ட கேட்டதைத் தான் சொன்னேன். அதோட... இதோ பார் துளசி நீ சொன்ன தூய்மையான நட்பெல்லாம் இந்தக் காலத்திலே சாத்தியப் படாது. என்னவோ எனக்கு மனசிலே பட்டதைச் சொன்னேன்."

"நான் மத்தவங்களப் பத்தி கவலைப் படல்லே. நீ என்னோட பெஸ்ட் பிரெண்ட். நீ கூட, என்னைச் சரியாப் புரிஞ்சிக்கலையேன்றது தான் எனக்கு வருத்தம்." துளசியின் கண்களில் நீர் துளிர்த்தது. இந்த அஸ்திரத்தில் மைதிலி குழம்பிப் போய் விழித்தாள்.

"அப்போ உண்மையாவே நீ அவனை லவ் பண்ணலியா?" சந்தேகத்துடன் மீண்டும் கேட்டாள். "உனக்கு நல்லாவே தெரியும் எனக்கு பெயின்டிங்லே எவ்வளவு இன்ரெஸ்ட்னு. அவன் ஒரு அருமையான ஆர்ட்டிஸ்ட். அவனோட ஜீவனுள்ள ஓவியங்களை, அவனுடைய திறமையைத்தான் நான் இரசிக்கிறேனே தவிர அவனையில்லே!" மூச்சு விடாமல் பேசிவிட்டு மைதிலியை ஏறிட்டாள். மைதிலிக்குத் தர்ம சங்கடமாகி விட்டது.

"ஐ யாம் வெரி ஸாரி துளசி. நானும் மத்தவங்களப்போல உங்கள் இரண்டு பேரையும் தப்பா நினைச்சிட்டேன். என்னை மன்னிச்சிடு ப்ளீஸ்". மானசீகமாக மன்னிப்புக் கேட்டாள்.

"ஸாரி, ப்ளீஸ், தேங்க்ஸ் இது மூன்றும் தான் உலகத்திலேயே எனக்குப் பிடிக்காத வார்த்தைகள்." துளசி மனதுக்குள் கறுவிக் கொண்டாள்.

வீட்டிற்குச் சென்றும் துளசிக்கு ஆத்திரம் தாளவில்லை. அவளைப் பொறுத்தமட்டில் சங்கரின் நட்பு அவள் பெருமைப்படும் விடயங்களில் ஒன்று. அந்தத் தூய்மையான நட்பு கொச்சைப்படுத்தப்படுவது அவளுக்குத் தாங்கொணாத வேதனையை அளித்தது. அன்று மாலை சங்கர் வீட்டுக்குச் செல்வதாக அவள் வாக்களித்திருந்தாள். ஆனால் அவளிருந்த மனநிலையில் அங்கு செல்லத் தோன்றவில்லை. இது போன்ற மற்றவர்களின் தப்பபிப்பிராயம் சங்கரின் காதுகளை எட்டினால் எவ்வளவு வேதனைப்படுவான். அந்த நினைவே அவளுக்கு இதயத்தில் வலியைத் தந்தது.

மறுநாள் இதயத்தைப் பிழிந்த வேதனையைத் துடைத்தெறிந்து விட்டு சங்கர் வீட்டுக்குச் சென்றாள். ஆனால் அவனிடம் வழமையாகக் காணப்படும் உற்சாகத்தைக் காணவில்லை. உலகத்தில் உள்ள சோகத்தையெல்லாம் குத்தகைக்கு எடுத்தவனைப்போல் முகம் முழுக்க சோகம்.

"ஸாரி சங்கர் நேத்து வரமுடியாமல் போயிடிச்சி." துளசி மெல்லிய குரலில் மன்னிப்புக் கேட்டாள்.

"பரவாயில்ல. ஆனா நேத்து நீங்க வருவீங்கன்னு முக்கியமான ஒரு விஷயம் பேசக் காத்திட்டிருந்தேன்."

"முக்கியமான விஷயமா?"

"ஒண்ணுமில்ல- ரொம்ப நாளா உங்கக்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்னு நினைக்கிறேன். ஆனால் சந்தர்ப்பமே கிடைக்க மாட்டேங்குது."

"அதுக்கென்ன. இப்போ சொல்லிடுங்களேன்." துளசி ஆர்வமானாள்.

"துளசி நீங்க என்னைத் தப்பா நினைக்கக் கூடாது."

"நினைக்க மாட்டேன். சொல்லுங்க."

சங்கர் நிறையத் தயங்கி விட்டுப் பின் மெல்ல வார்த்தைகளைக் கோர்த்தான்.

"வெற்றி பெற்ற எந்தவொரு ஆணின் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள் என்று சொல்லுவாங்க, என்னையும் என்னோட ஓவியங்களையும் விரும்புற நீங்க எனக்கு வாழ்க்கைத்துணையா வந்தால் என்னாலும் நிறைய சாதிக்க முடியும்னு நினைக்கிறேன்!"

நீளமாய் பேசிவிட்டு, தப்பாக எதுவும் சொல்லிவிட்டேனா என்பது போலப் பார்த்தான். துளசி தன் கண்களில் திரண்ட நீரை மறைக்கக் கீழே பார்த்தாள்.

அவள் மனதில் சங்கர் குடியிருந்த கோபுரம் மெல்லத் துகள்களாகிச் சரிந்தது. இப்போது தப்பு யார் பார்வையில் என்பது புரிந்தாற் போலிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

## வேலையும் காதலும்

### திவாகரன்

முரளிக்கு தன்னையே நினைக்க ஆச்சரியமாகவிருந்தது.

'நானா இப்படி மாறிப் போனேன்?' தனக்குள் வினாவை எழுப்பி னான்.

ஒரு காலத்தில் க்றீம், குளோன் என்ப வற்றை அலட்சியப்படுத்தியவன், இன்று அவைகளை விரும்பிப் பாவித்தான். விநாடிக் கொரு தரம் சிகையை சீர் படுத்துவதும், அடிக்கடி கண்ணாடியில் தன்னழகைப் பார்த்துச் சிரிப்பதும்– ரொம்பத்தான் மாறிப் போய் விட்டான்.

உணவும் நித்திரையும் ஏனோ அவனுக்கு வேம்பாகிவிட்டது. அவளைப் பார்த்தால்தான் உண்டு உறங்கியது போலவே தோன்றியது அவனுக்கு. ஒவ்வொரு விநாடியும் விழிகளுக் குள் சிறைப்படுத்தி வைத்திருக்கும் அவளது



பிம்பத்தை நினைத்தே பரவசப்பட்டான் அவன்.

'நான் விரும்புவது அவளுக்குத் தெரி யுமா? தெரிவதற்கு வாய்ப்பில்லை. ஆனால், மாரியம்மன் கோயில் சந்திக்கும், எனது சைக்கிளுக்கும் நன்றாகவே தெரியும். அவளிடம் விருப்பத்தைச் சொல்லிவிட லாமா? ச்....ச்....ச்சி ஏற்றுக்கொள்ள மாட்டாள். அவள் ஒஃப்பீஸில் வேலை செய்பவள் ஆயிற்றே. அவளை மறந்து விடு வோமா......' மறத்தல் என்ற சொல்லை நினைத்ததும், மயக்கம் வருமாப் போலிருந் தது அவனுக்கு.

"ஒஃப்பீஸில் வேலை செய்யிறவனுகளும் நேரத்திற்கு வீட்டிற்கு வந்திடுவானுகள். நேரத்திற்கொரு கோட்டும் சூட்டும் போட்டுட்டு ஊர் சுத்திட்டு வார உனக்கு இவ்வளவு நேரமா? ஏன்தான் பொறுப்பில்லாமல் சுத்தி றியோ தெரியாது. கைத்தொழில் எண்டாலும் பழகு. பின்னுக்குச் சோறு போடும்." வந்ததும் வராததுமாகச் சீறிய தாயை முறைத்துவிட்டு,

"ஏ/எல் பாஸ் பண்ணிட்டு என்னால கைத்தொழில் பழக முடியாது. நான் எப்படி யும் அரசாங்க வேலைதான் எடுப்பேன்!" பதிலுக்கு அவனும் இரைந்தான்.

"இப்படியே சொல்லிட்டு இரு. காலம் இப்படியே வீணாயிடும்." தாயின் வாதத்தைத் தொடர்ந்து விவாதிக்க விரும்பாத அவன் மௌனத்திடம் தஞ்சமடைந்தான்.

'வேலையொன்று கிடைத்துவிட்டால், முதல் வேலை விமலாவிடம் விருப்பம் கேட் பதுதான். வேலையொன்று இருக்குமானால் தைரியமா விருப்பம் கேட்கலாம். ம்..... நமக்குத்தான் அந்த அதிஷ்டம் இல்லையே....' பெருமூச் செறிந்தான் அவன்.

அவளது இடையைத் தாண்டிய கருநாகமும், நாவூற வைக்கும் ஆப்பிள் கன்னங்களும், மீண்டும்... மீண்டும் பார்க்கத் தூண்டும் இளமைகளும் அதைவிட அடக்கமான அவளது சுபா வமும், அவள் மீதுள்ள காதலை வளர்த்துச் செல் லும் உரமாகியது.

'வேலையொன்று இல் லையே' என்பதை நினைக்க.. வேகியது அவனது மனம்.

ஒருமாதம் அவளின் நினைவுகளோடு கரைந்து போனது.

"இன்டர்வியூக்குப் போனது என்னாச்சுடா?" அம்மா வழக்கமான எதிர் பார்ப்புடன் கேட்டார்.

"வேலை நிச்சயமாயிடுச்சிம்மா."

"ரொம்ப சந்தோஷம். உனக்கும் நல்ல தொரு செய்தி சொல்லப் போறன். தந்தையை இழந்து தவிச்ச அந்த விமலாவுக்கு, கல்யாணம் நிச்சயமாயிடுச்சி. மாப்பிள்ளை அவரோட வேலை பார்க்கிறவனாம். அவனுக்கென்ன? வேலையுமிருக்கு அழகு மிருக்கு அதிஷ்டமும் இருக்கு." அம்மா சிறிதும் கலப்படமற்ற சந்தோஷத்துடன் கூறினார்.

முரளி எதுவுமே பேசாமல் மௌனமாக அறைக்குள் சென்றான், 'அவளை மறப்பது எப்படி?' எனச் சிந்தித்தவாறு.

## நிரந்தரமில்லை

### களுவாஞ்சிக்குடி யோகன் –சுவிஸ்

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படும் என்பார்கள். ஆனால் முப்பத்தி ஐந்து வயதிலும் நேசனுக்கு அது நிச்சயிக்கப்படாமல்தான் இருக்கிறது. இப் பொழுதெல்லாம் அவன் இதையெண்ணி பெரிதாக மனதைக் குழப்புவது கிடையாது.

எந்தக் காரியத்திற்கும் ஒரு புறக்காரணி தூண்டுதல் இருக்கிறது என்பது ஐதீகம். ஒருவேளை தனக்கு அவைகள் எதுவும் இல்லாததால்தான் இதுநாள்வரை அது கைகூடவில்லை என்று அவன் நினைப்ப துண்டு. ஏனோ தெரியவில்லை அவனுக் கென்று சொந்தமென எந்தப்பொருளும் அமைந்து நிலைத்ததில்லை.

நேசன் பிறந்தபொழுதே தாய் மறைந்து விட்டாள். போக்குவரத்துச் சபையில் சாரதி யாகவிருந்தவர் தந்தை. அவனுக்குப் பத்து வயதானபோது அவர் ஒடிக்கொண்டுபோன பஸ் ஒரு லொறியுடன் மோதுப்பட்டு தகப்பன் அந்த இடத்திலேயே மரணித்துப்போனார்.

சொத்துக்களையும், அவனையும் அம் மம்மா பொறுப்பெடுத்தாள். அவளும் உயி ருடன் இல்லாமல் போனபோது நாட்டு நிலமையும் கோரமாகிப் போய்க்கொண்டி ருந்தது. பாதுகாப்புக்காக சுவிசுக்குத் தஞ்சம் கோரி வந்தவன்தான் நேசன்.

அவன் "அட்வான்ஸ்லெவல்" படிக்கும் காலத்தில் ஒரு பெண்ணை விரும்பினான். அவள் அப்போது பத்தாவது படித்துக் கொண்டிருந்தாள். தர்மினி என்றுபெயர். நேசன் நேசித்தானேயொழிய அவளுக்கு இதுபற்றி எதுவும் தெரியாது. தெரிவிக்க நினைக்கும் போதெல்லாம் அவனுள் ஒரு தயக்கம் தலைதூக்கும். ஒரு தலைக் காதலா கவே அப்போது அந்தக்காதல் இருந்தது.

ஆனால் அவன் சுவிசுக்கு வந்து மூன்றா வது வருடம் மிகவும் சிரமப்பட்டு அதே தர்மினியுடன் தொடர்பை ஏற்படுத்தினான். அவளிடமும், அவளது பெற்றோரிடமும் தனது விருப்பத்தைத் தெரியப்படுத்தினான்.

தர்மினி அவனது விருப்பத்தை ஏற்றுக் கொண்டாள். திருமணஞ் செய்வதாக வாக்குக் கொடுத்தாள். அதன்படி அவள் இங்குவர ஒழுங்குகள் செய்யப்பட்டது. நேசன் பெருந் தொகைப் பணம் கட்டி அவளை அங்கு அழைத்தான். அவள் சுவிஸ் வந்து சேர்ந்து அகதிமுகாமில் தங்கியிருந்தாள். அவன் தினமும் ஒரு தடவையேனும் அவளைக் காணப்போய் வருவான்.

ஒரு காலை அவன் முகாமிற்குப் போனபோது தர்மினி அங்கு இருக்கவில்லை. காணாமல் போயிருந்தாள். இன்றுவரை அவளை நேசன் சந்திக்கவேயில்லை. பக்கத்து நாட்டில் அவள் வாழ்ந்து கொண்டிருப்பதாக அறிந்தான். அவள் மறைந்து போன இந்த ஏமாற்றம் அவனை மிகவும் பாதித்தது. வாழ்க்கையில் ஒரு விரக்தி, வெறுப்புத் தன்மையை உண்டாக்கியது. நடைப்பிண மாகவே வாழ்ந்து கொண்டிருந்தான். வேலை யும், வீடும் இப்படியாகவே நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

அன்றைக்கு ஊர்க்காரர் ஒருவரின் திருமணவீடு. நேசன் கட்டாயமாக அதற்குப் போயே ஆகவேண்டும். வேண்டாவெறுப்பாக அந்த விருந்தில் கலந்துகொண்டான்.

அங்குதான் ஊர்ச் சிநேகிதர் ஒருவரைச் சந்திக்க நேரிட்டது. பார்க்கப்போனால் நேசனுக்கு அவர் தூரத்து உறவுக்காரராகவும் விளங்கினார். இருவரும் சிறிது நேரம் மனம்விட்டு உரையாடினர்.

"என்னதான் 'எஞ்ஜோய்' பண்ணி வாழ்ந் த்தாலும் குடும்பம், மனைவி என்ற பந்தத்திற் குள் கட்டுப்பட்டு வாழ்வதுதான் ஒரு நிறைவான வாழ்க்கை." நண்பர் சொன்னார்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஏதோ 'நான் 'எஞ்ஜோய்' பண்ணிக்கொண்டு திரிவ



தாக இவர் நினைக்கிறார்.' மனத்திற்குள்ளே சொல்லிக்கொண்டவன் "எனக்கு உங்களால் ஒரு பெண் பார்க்க முடியுமா?" என்று பேச்சு வாக்கிலே கேட்டான். அவர் உண்மை யாகவே அவனுக்கு ஒரு பெண்ணைத் தேடினார். அதில் வெற்றியும் கண்டார்.

பெண்ணின் படம் நேசனுக்குக் காட்டப் பட்டது. அவனுக்குப் பிடித்துப்போகவே மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடந்தது. மிகவும் கஷ்டப்பட்ட குடும்பமாம். அதனால் கூப்பிடும் பொறுப்பை நீரே ஏற்க வேணு மென்று அந்த நண்பர் சொன்னார்.

நேசனும் ஏற்றுக்கொண்டான். அவளை கொழும்பிற்கு வரவழைத்து "லொட்ஜில்" தங்க வைத்தான்.

அவள் சுவிஸுக்கு வருவதற்கு சகல ஏற்பாடுகளும் நடந்துமுடிந்தன. அவனின் வருங்கால மனைவி அன்று கொழும்பிலி ருந்து ரெலிஃபோனில் கதைத்தாள்.

"என்ன ரெலிஃபோனைத் தூக்கிவிட்டு எதுவுமே பேசாமல் நிற்கிறீர்? கதையுமன்?" என்றான் நேசன்.

"நீங்கள் தான் சொல்லவேணும்!" அவள் வார்த்தைகளை விழுங்கினாள்.

"கூச்சப்படுகிறீர் போலத்தெரியுது. நேரில் பாராமலே இவ்வளவு கூச்சமென்றால் என் னைப் பார்த்துவிட்டு ஊமையாகிவிடுவீர் போலத் தெரியுது," சிரிப்போடு சொன்னான்.

"இல்ல. அப்படியெல்லாம் இல்ல. நாளைக்கு "ஃபிளைற்" என்று சொல்லியிருக் கிறாங்க."

"இந்த ஏஜன்சிக்காரனுகள் இப்படி எத்தனை தடவை சொல்றானுகள்!"

"இல்ல. "ரிக்கற்" எல்லாம் தந்திட்டாங் கள். முதல்ல பம்பாய்க்குப்போக வேணுமாம். அதனால இன்றைக்கே உங்களுக்கு "பார் சலை" அனுப்பி வைக்கிறன். சூறச்சாறி, என்னுடைய சட்டைகள், உங்களுக்கு ஜீன்ஸ், நீங்கள் கேட்ட சேட் எல்லாம் அனுப்பிவைக்கிறன். நான்.....?" அவள் கதைத்துக் கொண்டிருக்கும்போதே ரெலிஃபோன் கட்டாகிவிட்டது.

"ஷைச"(தரித்திரம்) என்று அவன் ரெலிஃபோனை அடித்து வைத்தான்.

திருமணஞ் செய்யப்போகிறோம் என்றதுமே மேலதிகமாக ஒரு பொறுப்பு வந்து ஒட்டிக்கொள்வது இயற்கை. அந்தப் பொறுப்பு நேசனுக்கும் உருவாகி யிருந்தது. நீண்டநாட்களாக துப்பரவு செய்யப்படாமல் இருந்த வீட்டைக் "கிளீன்" பண்ணினான். கடைக்குப் போய் சாப்பாட்டுச் சாமான்கள் வாங்கி வந்து 'ஃபிறிஜ்ஜிலே' அடுக்கினான். அப்பொழுது ரெலிஃபோன் காதைக் கிழித்தது.

தூக்கி ஹலோ சொன்னபோது பெண் பார்த்துக் கொடுத்த அந்த நண்பர் பேசினார்.

செய்தி கேட்ட நேசன் ஆடிப்போனான். உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை உதறல் எடுத்தது.

"பம்பாயிலிருந்து வெளிக்கிட்ட விமா னத்தை அவுஸ்திரேலியாவிற்குத் திருப்பச் சொல்லி இரண்டு கடத்தல்காரர்கள் பிரச்ச னைப்பட்டார்களாம். விமானி கடைசியாக விமானத்தைத் தரையிறக்க முற்பட்டபோது, ஏதோ ஒரு தீவுக் கடலில் விமானம் வெடித்து அவளின் உயிரும் பிரிந்துவிட்டதாம்."

அந்த நபர் சொல்லிக் கொண்டிருந்தார்.

ரெலிஃபோனைத்தூக்கி எறிந்த நேசன் கட்டிலிலே போய் விழுந்து "ஐயோ" என்று அலறத் தொடங்கினான்.

## தூரத்துத் தண்ணீரும் துடிக்காத உறவுகளும்

### ஜெயமணி

வெடிச்சத்தம் பலமாக கேட்டது. ஹெலி தாழப்பறந்து சுற்றி வேவு பார்த்துக்கொண்டி ருக்க 'அவ்ரோ' விமானம் ஆக்ரோசத்துடன் குற்றி, நிமிர்ந்து குண்டுகளைத் தள்ளிக் கொண்டிருந்தது. வானை முட்டும் புகை மண்டலக்குவியல் எழுந்தது.

ரத்தினம் குடிசைவாசலில் பதட்டமாக நின்று கொண்டிருந்தான். தெருவில் ஜனங்கள் மூச்சைப் பிடித்தவர்களாக ஓடிவருவது தெரிந்தது.

வெளியே வந்தாள் மனைவி பூரணம்.

"என்ன இடிஞ்சுபோய் நிக்கிறியள். இதெல் லாம் நாங்கள் கண்டு, கடந்துவந்து, நின்று பார்க்கிறோம். நாளைக்கு நாங்கள் ஓடுவதை வேறு யாராவது நின்று பார்க்கலாம்" என்றாள்.

"அதுவல்ல பூரணம். வெடிகேக்கிற திக்கைப்பார்த்தால் தங்கைச்சி பரிமளம் இருக்கிற பக்கம்போல. என்னபாடோ என்ன ஆச்சோ யாருக்குத்தெரியும்!"

"ஓகோ. அதுவா சங்கதி? அவதான் நிறைய பணக்கார, படித்த கௌரவமான மனிசர்களைத் தேடிவைச்சிருக்கிறாளே? எதுக்கு பிச்சைக்காரனான நீங்கள் கவலைப் படுறீங்கள்? கவலைப்பட்டதாக அறிஞ்சாலே கேவலமாக நினைக்கப்போறா உங்க தங்கைச்சி. சூடு, சுரணை, ரோசம் இருந்தாத் தானே உங்களுக்கு!"

கோவமாக கூறிவிட்டு உள்ளே போனாள் அவன் மனைவி. அவளது கோபத்துக்கு காரணம் உண்டு. பத்துமாசங்களுக்கு முன் னர் இதேபோல அவனும் மனைவி பிள்ளை களுடன் அலமலந்து ஓடிவந்த அகதிகள்தான்.

யாழ்ப்பாணம் தன்னை இழந்து நின்ற வேளை. தாளாத துயரம், வறுமையுமாக வாடிக்கொண்டிருந்த அவனைப் போன்ற ஏழைகள் உயிருக்குப்பயந்து, ஒன்று மில்லாதவர்களாக ஓடி, ஓடிக் களைத்து போனவர்களாக கடைசி நம்பிக்கையையும் இழந்து வன்னியில் கால்பதித்தவேளை அதை விட, ஆகிறவரையில் அனுபவித்து அங்கேயே இறந்திருக்கலாம் என எண்ணத்தூண்டிய வேதனை நிறைந்த வேளை அது.

சின்ன வயசில் பெரிய சுமைகளைச் சுமந்து, கூடப்பிறந்தவர்களை ஆளாக்கப் பாடுபட்டு, ஒருவர் மாற்றி ஒருவராக அக்கா தங்கை இருவரையும் கல்யாணம் பண்ணிக் கொடுத்து, அவன் திருமணம் புரிந்து வாழ்க்கையைத் தொடங்கியபோது தன்கையை மட்டுமே நம்பித் தொடங்கினான்.

போகப்போக நாடு கண்ட அல்லோலத் தில் அவன் நிலை கோவிந்தாவானது. பஞ்சப் பாட்டுப்பரதேசியானான். பிள்ளைகள் வளர்ந்து வேலை செய்வதற்குள் எத்தனை ஊர் சொந்தவூரானது. எண்பத்தெட்டுகளி லிருந்து எட்டு வருடங்களாக ஆண்டுக்கொரு அகதிப்பட்டணம்.

தன் குடும்பச்சுமைகளோடு உழன்ற வனுக்கு வசதிபடைத்த சொந்தங்களுடன் உறவாடப் பொழுது இருக்கவில்லை. தகுதி யும் இல்லை என்பதை சகோதரிகள் தங்களது செயல்கள்மூலம் காட்டாமல் காட்டிக் கொண்டிருந்தனர். அத்தனை உதாசீனம். காரணம், வறுமை. எப்போதாவது ஒரு தடவை வந்து எட்டி நின்று பார்த்துப்போன தாக ஞாபகம். அதுக்காக இந்தமாதிரியான அந்தரிச்சவேளையில் பாராமுகமாக நடந்து கொள்வாள் தங்கையென கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. பேசினாலே கௌரவம் போய்விடும் என்பதுபோல் வேண்டா வெறுப் பாக ஒரு சில வார்த்தைகள். வெந்துபோய் வந்து நின்றவனின் புண்களை கிளறிப் பார்ப்பது போல என்னமாய் பேசிவிட்டாள்!

யாரையோ எதிர்பார்த்திருக்க, வேண்டாத விருந்தாளியாக இவன் வந்து நிற்கிறானே! என்கின்றமாதிரியான எரிச்சல் முகத்தில் கடுப்பைக் காட்டியது.

"சே, மூத்தவளின் மாமன் மாமியவை யாழ்ப்பாணத்திலை. அவர்கள் என்ன பாடோ? ஒரு தகவலும் தெரியேல்லை. கனடா விலிருந்து மருமகனும் கேட்டு எழுதிவிட்டார். ஏன் இன்னும் வரவில்லையோ? அவர்கள் வந்தா எங்கை தங்குகிறது? பார் அண்ணை எனக்கும் கவலைதான். குறை நினைக் காதை. இவர்கூட ஒரு மாதிரி சொல்லுறார். என்ன செய்யிறது? ஹெட் மாஸ்டரா இருந்தவர். நிறைய படிச்ச சிநேகிதர்கள். மகன்வேறு ஃபாதர். தெரிந்த ஃபாதர்மார் வருவதும் போவதுமாக ஒரே விசிட்டர்ஸ். இந்தமாதிரியான கோலத்திலை நீங்கள் இருந்தால்?

சின்னவளின் மாப்பிள்ளைவீட்டார்கூட இங்கேதான். அடிக்கடி வருவதுண்டு. என்ன நினைப்பார்கள். நீங்கள் சாப்பிட்டு விட்டு 'காம்ப்' பார்த்து தங்குவதுதான் நல் லது. சாமான்களும், தருவார்கள். உதவியும் கிடைக்கும்." சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டாள். அவள் கணவன் எதுவும் பேசாமல் ஈசிச்சேரில் சாய்ந்தவண்ணம் விட்டத்தை நோட்டம் விட்டுக்கொண்டிருந்தார்.

பரிமளத்தை தூக்கிப்போட்டு வளர்த்த மார்பு விண்டு வெடித்தது. ஷெல் ஒன்று இறுக்கி பிளந்துவிட்ட ரணவேதனையில் துடித்துப்போனான். முட்டை முடிச்சுக் களைப் பொறுக்கிக் கொண்டான். குனிந்த தலையை நிமிர்த்தி மனைவி, குழந்தைகளைப் பார்க்கவும் திராணியற்றவனாக வெளியேறி னான்.

'இப்போ மனைவியின் இந்தக்கோபம் தர்க்கரீதியாக நியாயமானதுதான். ஆனால் தர்ம நீதியில் எப்படி நியாயமாகும்? தசை துடிக்கிறதே என்ன ஆனாளோ? ஏது நடந்துதோ?' மனசு தவித்தது.

அங்கே!

"பரிமளம்! எல்லோரும் போய்க்கொண்டி ருக்கிறார்கள். சம்மந்தியாட்களும் வேளை யோட போயாச்சுது. வா, நாங்களும் போவம். வெடியும் கூடிக்கொண்டு வருது."

சொன்ன கணவனிடம் "பாருங்கோ யாழ்ப்பாணத்திலை ஓடாமல் இருந்தவர்கள் நல்ல நிம்மதியாகத்தான் இருக்கிறார்கள்.



ஓடுறதெல்லாம் பயித்தியக்கார வேலை." அபிப்பிராயத்தைக்கூறி மறுக்க முயன்றாள்.

"யாழ்ப்பாணம் கந்தலாய் கிழிஞ்சுபோய் காற்றோடு பறக்கிற சேதி தெரியாதாக்கும். பேசாமல் வா. சனத்தோடை சனமா இருந்தா தெம்பாயிருக்கும்!"

"எங்களுக்கென்ன குமரோ. இளந் தாரியோ– யாருக்கு காவல் வேண்டும்? அதோட இத்தனை வசதியோடை வாழ்ந்துட்டு காம்பு வளிய முடங்கிக்கிடக்க என்னால முடியாது." அவள் கூறி முடிப்பதற்குள் ஷெல் ஒன்று வீழ்ந்ததில் அதிர்ந்துபோய் கணவன்மீது சரிந்தாள். இருவரும் கீழே தள்ளப்பட்டார்கள். வீட்டின் ஒருபகுதி அப்படியே நெடுஞ்சாண் கிடை யாக விழுந்தடங்கியது. மிரண்டு போனவர்கள் விழித்தபோது கணவனின் காலிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அவளுக்கு தோளிலும் கையிலும் இலேசான காயங்கள்.

பயந்துபோனார்கள். யார் வரப்போகி றார்கள் துணைக்கு?

கணவனை கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு வீதிக்கு வந்தாள். எவரும் அவர் களைக் கண்டுகொண்டதாக இல்லை. அவர வர் பயம் அவரவர்க்கு. நாக்கைத்தொங்கப் போடும் பயம் விரட்ட ஓடிக்கொண்டிருந்தார் கள். ஹெலி வேறு சுழன்று கொண்டிருந்தது.

உதவி கேட்டு நின்றவளிடம் யாரும் நின்று பேசும் அளவிற்கு இல்லை. நின்று பேசினால் எங்கே பொறுப்பு தங்கள் மீது விழுந்து விடுமோ என அஞ்சியவர்கள் பட்டும்படாமல் பதில் சொல்லி போய்க்கொண்டிருந்தார்கள்.

"பரிமளம்! வாத்தியார் காலுக்கு இரத்தக் கசிவை நிறுத்த கட்டைப் போட்டுவிட்டு மெதுவா நடந்து வரப் பாருங்கோ. யார் தான் யாருக்கு இப்ப உதவுவது நாங்க ளும் உயிரைக்கையிலை பிடிச்சுக் கொண்டுதான் ஓடிக் கொண்டி ருக்கிறம்."

இளைய சம்பந்தி சொல்லி விட்டு போனார். இவர்களெல் லாம் அவள் வீட்டுப் பணக்காரத் தனத்துக்கு என்னமாய்ச் சுழன் றார்கள், இப்போ...?

துணி எடுக்க உள்ளே போக வும் பயமாக இருந்தது. புடவை யைக் கிழிச்சு கணவனின் கால் காயத்துக்குகட்டுப் போட்டாள். இரத்தம் போனதில் களைப்பு மொய்த்தது. வாசலோடு நின்ற பெரிய மாமரத்தின் மறைவில் சரிந்து கொண்டார்கள்.

விழித்துப்பார்த்த பரிமளம் தன் பக்க வாட்டில் இருந்த அண்ணனை யோசனை யுடன் பார்த்தாள். "நான், நான் இங்கே எங்கை வந்தன். அவர் எங்கை?" விழிகளைப் புரட்டியவண்ணம் கேட்டாள்.

"பரிமளம் பயப்பிடாதை. அவருக்கு பெரி சாக ஒண்டுமில்லை. இரத்தம் அதிக மாகப்போனதில் கொஞ்சம் மயக்கம். ஆஸ் பத்திரியில் விட்டிருக்கிறன். உனக்கு இப்ப எப்படி இருக்குது?"

அண்ணன் கேட்டபோது தோள் பட்டையை தடவிக்கொண்டவள் மீண்டும் அவனிடம் "நீ, எப்பிடி எங்களை கொண்டு வந்தாய். இந்தக்கரைச்சலுக்கை எப்பிடித் தெரிஞ்சது?" எனக் கேட்டாள்.

"பரிமளம் இங்கை கொண்டுவந்ததுக்கு கோவிக்காதை. நீ, வசதியாக வாழ்றவள். குடிசைதான் என்னுடையது. அதுவும் எனக் கெண்டு சொந்தமில்லை. ஏனென்றால் நான் அகதி. என்னிடம் உள்ளது பாசம் ஒன்று மட்டும்தான். உன் நண்பர்கள், கௌரவமான உறவினர்கள் அத்தனைபேரும் முகாமுக்கு வந்துவிட்டார்கள். நீயும், புருசனும்மட்டும் வரவில்லை. விசாரித்ததில் காயம்பட்டுக் கிடப் பதை சொன்னார்கள். மகனும் நானும் சயிக்கிள் எடுத்துவந்து ஆஸ்பத்திரியில் சேர்த்தோம்." சொன்ன அண்ணனை நிமிர்ந்து பார்க்கவும் தைரியம் இல்லாமல் போனது பரிமளத்திடம்.

உயிருக்கு உறவு இப்படிக்கூடத் துடிக்க முடியுமா? பேசமுடியாமல் ஏதோவொரு உணர்ச்சி நெகிழவைத்தது. அவளது பேசாத மௌன உறவு என்பதை தெரிவித்துவிட் டேனோ என கவலைப்படுகிறாள் போலும், என்ற எண்ணத்தை தூண்டியது அவனுள்.

"பரிமளம் வீணாகக் கவலைப்படாதே! உன் அண்ணன் என்று சொல்லவில்லை. திரும்பிப்போக முடிஞ்சால் வீட்டுக்குப்போ. இல்லை உன் மனிதர்களுடன் சேர்ந்துகொள். இப்ப ஓய்வாக இரு. மனசைக் குழப்பாதை" என்றான் பரிவுடன்.

பரிமளத்துக்கு அந்த வார்த்தை என்ன வோபோல் இருந்தது. 'இதே அண்ணனை எப்படி நிர்த்தாட்சண்ணியமாக விரட்டி னோம். ஆனால் அவனோ அதையும் மறந்த வனாக.. எத்தனை அன்பு வைத்திருந்தால் மன்னிக்க முடிந்திருக்கும்!' குற்ற உணர்வில் குறுகிப்போனாள்.

'வெறும் பணப்பெருமை, பீத்தல் பெருமை, கௌரவம் பார்த்து தேடியலைந்து சொந்தம் கொண்டாடிய மனிதர்களுக்காக உண்மையான இந்த உறவைத் துரத்தி னேனே. ஆபத்துக்கு உதவாத தூரத்துத் தண்ணீரான பிள்ளைகளது வெளிநாட்டுப் பெருமையும், துடிக்கிறபோது சேர்ந்து துடிக்க மறுக்கும் உறவுகளையும் பெரிதாக எண்ணி அண்ணனின் வறுமையை கேவல மாக நினைத்து ஒதுக்கி.... 'சே' என்ன கீழ்த் தரமான செயல்!' தனக்குத்தானே கசந்து போனாள். சிறுமையாக நினைத்த அந்த ஏழ்மைக்கரங்கள் பெருமைக்குரியதாகத் தெரிந்தன. மன்னிப்புத் தேடும் பாவனை யோடு அவன்கரங்களை எடுத்து தன்கரங் களுக்குள் வைத்துக்கொண்டாள் பரிமளம். அங்கே துடிப்பு இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து துடிப்பது தெரிந்தது.



படிப்பகம்

## இலக்கிய நயம்

# நினைத்தால் இனிக்கும்!

தருவது ரசிகன்



பைத்தியம் என்றார்கள் அவனை.
பரிகாசம் செய்தார்கள் அவனை.

வைத்தியம் செய்ய ஒருவரை
அழைத்து வந்தார்கள்.

"உன் பெயர் என்ன?"
உரத்துக் கேட்டார் வைத்தியர்.

"அமுதா!" என்றான் அவன்.
"பெண் பெயராக இருக்கிறதே
உன் பெயர் உதயன் அல்லவா!"

மீண்டும் அவன் அழுத்திச் சொன்னான்;
"என் பெயர் அமுதா, என்பெயர் அமுதா!"

வைத்தியருக்குப் புரிந்துவிட்டது,
"உன் காதலி எங்கே இருக்கிறாள்?"

"இதோ இங்கேதான் இருக்கிறாள்"
"ஓஹோ நீ எங்கே இருக்கிறாய்?"
"நான் எப்போதோ தொலைந்து போனேன்!"
"எப்படித் தொலைந்தாய்?"
"அந்தப் புதிருக்குத்தான் நானும்
விடை தேடிக் கொண்டிருக்கிறேன்!"
வைத்தியர் சற்றே யோசித்தார்.

"விடையைத் தேடுவது இருக்கட்டும்
முதலில் சிறிது உணவு உண்ணலாமா?"
"எனக்கு எதற்கு உணவு?"

"உயிர்வாழ உணவு வேண்டாமா?"
"வேண்டாம், உணவாகவும்
என் சுவாசமாகவும் அவள்தான் இருக்கிறாள்!"

"உன் காதலியை கண்டுபிடிக்கலாம்
முதலில் நீ உன்னைக் கண்டுபிடி!"

"என்னைக் கண்டுபிடித்தால்
நான் இறந்து போவேன்!
கறந்த பால் முலைக்கேறாது
தொலைந்த மனம் திரும்ப வராது!"

"காதல் அத்தனை புனிதமானதா?"
"புனிதம் மட்டுமல்ல, விடையே
கண்டுபிடிக்க முடியாத கணிதம் அது!"

"கனவு காண்கிறாயா அப்பனே!"
"கண்களை மூடினால்தானே கனவு வரும்
கண்களே அவளாயிருக்க
கனவு எப்படி வரும்?"

"வசீகரமாகப் பேச எங்கே
கற்றுக் கொண்டாய்?
"நான் பேசுவது
அவள் உதடுகளால்தானே!"

"நீ உறங்கி எத்தனை நாள்?"
"நினைவுகளை வைத்திருக்க மட்டுமே
என் இதயம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
நாட்களை எண்ணிவைத்திருக்க
இங்கே ஏது இடம்?"

"அவள் நினைவாக என்னவைத்திருக்கிறாய்?
பரிசுகள் தந்தாளா பத்திரப்படுத்திக் கொள்ள?"
"அவளையே தந்துவிட்டுப் போய்விட்டாள்
வேறென்ன பரிசு வேண்டும்?"

"அமுதாவை அழைத்து வரவா?"
"அமுதா இங்குதான் இருக்கிறாள்
என்னைத்தான் அழைத்து வரவேண்டும்!"

"பைத்தியம் என்கிறார்களே
ஊரார் உன்னை!"
"பாவம் காதலிக்கத் தெரியாதவர்கள்.
காதலிக்க முடியவில்லையே
என்று வருந்தும் கையாலாகாதவர்கள்!
காதலுக்கு எதிராக கொடிபிடித்தால்
கண்ணியவான் எனப் பெயரெடுக்கலாம்
என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள்!"
"காதல் இல்லாமல் வாழமுடியாதா?"
"சுவாசிக்காமல் எப்படி வாழமுடியும்?"

"அமுதா என்ன அத்தனை அழகியா?
ஆயிரம் அழகிகள் கொண்டுவரவா?"
"உங்கள் நாசியால் என்னை
சுவாசிக்கச் சொல்கிறீர்களா?
உருவத்தில் அழகியர் பலர் வரலாம்
உள்ளத்தால் அழகி அவள் மட்டுமே!"

"உலகில் அவள் மட்டும்தான்
உயர்ந்தவள் என்றால்
உதைக்க வருவர் பிறபெண்கள்!"
வைத்தியர் எச்சரித்தார்.

"எனக்கு என் தாய் அழகு
முடமானாலும் அவள்தான் பெரிது
உனக்கு உன்தாய் அழகு
எதற்கு இங்கே பொறாமை வருகிறது?"

"தாயும் காதலியும் ஒன்றாக முடியுமா?"
"முடியும்! இதயமுள்ள
காதலி கிடைத்தால்!"
"இதயமில்லாத காதலிகளும்
இருக்கிறார்களா அப்பனே?"
"இருக்கிறார்கள்-அதனால்தானே
காதலர்கள் பலர் கண்ணீர்விடுகிறார்கள்!"

"அம்பிகாபதியைப் பற்றி
என்ன நினைக்கிறாய்?"
"புலமை இருந்தளவுக்கு
திறமை இல்லை அவனிடம்!"
"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"திறமை இருந்திருந்தால்
அமராவதியைக் கடத்திக்கொண்டு
போய் கல்யாணம் செய்திருப்பான்
கண்முன்பாக காவு கொடுத்திருப்பானா?"

"தந்தையின் கட்டளையை
மீறமுடியவில்லை!"
"தந்தையைக் கேட்டா
காதலை விதைபோட்டு வளர்த்தான்!"
"அது வாலிப வேகம்!"
"அந்த வேகத்தோடு
இல்லாமல் போய்விட்டதே விவேகம்!"
"இல்லையப்பா காதல் என்பதே
வயசுக் கோளாறுதானே!"
"இல்லை-காதல்தான்
மனித வரலாறு!

"எப்படிச் சொல்கிறாய்?"
வைத்தியர் புருவம் நெரித்தார்.

"குரங்காய் இருந்தவன்
உழைப்பைக் காதலித்தான்
மனிதனாகினான்.
பூமியின் செழிப்பைக் கண்டவன்
அதனைக் காதலித்தான்
புதிய தேசமாக்கினான்.
பெண்ணைக் கண்டவன்
அவளைக் காதலித்தான்
வாழ்வை வாசமாக்கினான்!"

"பெண் என்பதே
ஒரு புதிர்தானே?"
"ஆணுக்குப் பெண் புதிர்
பெண்ணுக்கு ஆண் புதிர்!"
"புதிர் எப்போது விடுபடுவது
புதிரை யார்தான் விடுவிப்பது?"
"விடுவிக்கக்கூடாது
விடுவித்தீர்கள் என்றால்
வாழ்க்கை வசீகரமாக இருக்காது!"

"உனக்கு வாழ்க்கை
வசீகரமாக இருக்கிறதா?"
"ஆம்! நான் அமுதாவாக
மாறிய பின்னால்!"

"உன்னிடம் இருப்பது
காதலா? காமமா?"
"பூவை நேசிப்பது காதல்-அந்த
பூவுக்கும் இதமாக
தேனெடுக்க நினைப்பதே காமம்!
காதல் இல்லாத காமம் இனிக்காது"

புரட்டிப் படித்த நூலை
மூடிவைத்தாள் தேவி.
"காதல் கதையா?" என்று
காதோரம் கேட்டபடி-அவள்
கன்னத்தில் முத்திரை இட்டான் மாறன்.

"காதலைப் பற்றிய கதை" என்றாள்
அவன் கரத்தை தடுத்தபடி!
"நீ படித்துக் கொண்டிருந்தாய்
இப்போது நான் படிக்க வேண்டாமா?
புரட்டவிடு. நூலை படிக்கவிடு!"
என்றான் மயக்கமான குரலில்.

"கள்ளுண்டதுபோல் கண்களில்
என்ன இத்தனை மயக்கம்?"
என்றாள் அவன் விஷமத்தை ரசித்து.

"கள்ளுண்டால்தான் போதைவரும்
களிப்போடு ஆசை கொண்டால்
உன்னை நினைத்தாலும் போதைவரும்
நேரில் கண்டாலும் போதைவரும்.
உண்ணாமலே களிப்புவரும்.
கள்ளிலும் பெரியது காமம்"
என்றான் கள்ளன் மாறன்.

**"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு"**
*அதிகாரம்-129-குறள்-1281*

## ஸ்போர்ட்ஸ்

### டைட்டன் விருது

இந்தியக் கிரிக்கெட் அணியின் கப்டன் டெண்டுல்கர், முன்னாள் கப்டன் அசாருதீன், வெங்கடேஷ் பிரசாத் ஆகியோருக்கு 'டைட்டன் ட்ருகிரிட்' விருது வழங்கப்பட்டுள்ளது.


தென்னாபிரிக்காவில் நடைபெற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளின் அடிப்படையிலேயே இந்த விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

கேப்டவுனில் தென்னாபிரிக்க- இந்திய அணிகள் விளையாடிய இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முடிவில், இந்திய அணியின் முன்னாள் கப்டன் கவாஸ்கர் இந்த விருதுகளை அறிவித்தார் என்று டைட்டன் நிறுவனம் கூறியுள்ளது.

கிங்ஸ்மீட்டில் நடந்த முதலாவது டெஸ்ட்டில் வெங்கடேஷ் பிரசாத் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இரண்டாவது டெஸ்ட்டில் டெண்டுல்கர், அசாருதீன் ஆகியோர் சதம் அடித்தனர்.

இவர்களுக்கு தலா ரூபா. 50 ஆயிரம் பரிசளிக்கப்படும். மேலும் டெஸ்ட் தொடரில் திறமையான வீரருக்கு ரூபா ஒரு இலட்சம் பரிசளிக்கப்படும்.

### தொடரில் தோல்வி



தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து வரும் இந்திய அணி டெஸ்ட் தொடரில் 0-2 என்ற கணக்கில் பின்தங்கியுள்ளது.

இதைத் தொடர்ந்து, ஒருநாள் போட்டித் தொடர்களில் இந்திய அணியில் சில மாற்றங்கள் செய்யப்படும் என்று அணியின் மனேஜர் சுனில் தேவ் கூறியுள்ளார்.

தமிழக வீரர் ரொபின் சிங், கர்நாடக வீரர் சுனில் ஜோஷி, ஹரியானா வீரர் அஜய் ஜடேஜா ஆகியோர் தென்னாபிரிக்கா செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே அணிகளுடன் இந்தியா இணைந்து விளையாடும் மூன்று நாடுகள் தொடர் இம்மாதம் 25ம் திகதி தொடக்கம் பெப்ரவரி 12ந் திகதி வரை நடைபெறும்.

## சிந்தியா பதில்கள்

# கைகொடுப்பாரா கவுடா?

கவுடாவா இங்கே கண்ணீர் துடைக்க கை நீட்டப்போகிறார்?!

* முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நகைகள் மைசூர் மகாராஜா கொடுத்தவை என்கிறார்களே? நம்பலாமா?

சி.ஜெகசோதி, கம்பளை.

கொஞ்சூண்டு நம்பலாம். மகாராஜாக்களுக்கு எப்போதுமே ரசனை கொஞ்சம் அதிகம்தான். அதனால் பரிசாகக் கொடுத்திருக்கலாம். ஆனால் எல்லாமும் அவர் கொடுத்தார் என்பதுதான் நம்பமுடியாத சமாச்சாரம்.

* டியர் சிந்தியா! ஜெயலலிதாவின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும்

எம்.ரகுநாத், கொழும்பு-09.

அனுதாபம் தேடுவது! இனிமேல் நகையே அணியமாட்டேன் என்று சூளுரைத்திருக்கிறார். அம்மா என்ன சும்மாவா?

* ஜனாதிபதி சந்திரிக்கா இந்தியா சென்றதின் பின்னணியில் இந்தியாவின் தலையீட்டுக்கான அறிகுறி தெரிகிறதா சிந்தியா?

மா. வெற்றிவேல், வவுனியா.

அதொன்றும் சிதம்பர இரகசியமல்ல. இந்திய மத்திய அமைச்சர் சிதம்பரம்தான் பட்டென்று சொல்லிப்புட்டாருங்களே: இந்தியா தலையிடும் சான்ஸே இல்லையாம். அவர்களுக்கு தங்கள் பாட்டைக் கவனிக்கவே நேரம் இல்லேங்களே!

* இனப்பிரச்சனைத் தீர்வுக்கு எதிர்ப்பில்லை என்று சொல்லியிருக்கிறாரே எதிர்க்கட்சித் தலைவர்?

கா. பாலசுந்தரம், கொழும்பு-12.

'எதிர்ப்புத்தான்' என்று சொல்லுமளவுக்கு அவர் விவேகமில்லாதவர் என்றா நினைத்தீர்கள்?!

* ஹாய் சிந்தியா! தென்னாபிரிக்காவில் இந்திய அணியின் ஆட்டம் எப்படி?

செல்வி. சி. சர்மிளா, நீர்கொழும்பு.

ரொம்பவும் ஆடித்தான் போனார்கள்.

* எம்.ஜி.ஆரின் பிறந்தநாள் எப்போது?

ஆர். நிலாம்டீன், கல்முனை.

ஜனவரி 17.

* டியர் சிந்தியா! தை பிறந்துவிட்டது: இனி வழி திறக்குமா?

திருமதி வசுமதி கிரிதரன், தெகிவளை.

அதுதான் புதிது புதிதாகத் திறந்து கொண்டுதானே இருக்கிறது- நான் போருக்கான வழிகளைச் சொல்கிறேன்!

* டியர் சிந்தியா! ஒரு கடி ஜோக் சொல்லுங்கள்?

வி.நரேஸ், மட்டக்களப்பு.

நடிகை சங்கீதா ஒரு பேட்டியில் சொன்ன கடி இது:

"உங்கப்பாவுக்கு ரெண்டு பையன்கள். ஒருத்தர் அமெரிக்காவிலே இருக்கார். இன்னொருத்தர் எங்கே இருக்கார்?" என்று நிருபரைக் கேட்டார் சங்கீதா. நிருபர் 'திரு திரு'வென்று முழித்தார்.

சங்கீதாவே மீதியையும் புரியவைத்தார்.

"உங்கப்பாவுக்கு ரெண்டு பையன்கள் என்றால் நீங்களும் ஒருத்தர்தானே. ஒருத்தர் அமெரிக்காவிலே இருக்கார். இன்னொருத்தர் நீங்கதானே!"

சங்கீதாவின் கடி எப்படி நரேஸ்!

* ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது மட்டும்தான் புத்திசாலித்தனமா?

எம்.எம். ஜெனிபர், புத்தளம்.

தீவிரமாக முயன்றால் அதிகமாகவே அடிக்கலாம்.

ஓர் ஊரில் ஒரு பிச்சைக்காரன். காலும் கிடையாது. காதும் கேட்காது. பிச்சை எடுத்துத்தான் மனைவி மக்களைக் காப்பாற்றினான்.

கோவிலின் முன் இருந்துதான் பிச்சை எடுப்பான். யாரும் இல்லாதபோது இறைவனிடம் மன்றாடுவான்.

ஒருநாள் கடவுள் மனமிரங்கி அவன் முன்பாக தோன்றினார்.

"என்ன வரம் வேண்டும் கேள் தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை ஒரே ஒருவரம்தான் கேட்கவேண்டும்!" என்றார் கடவுள்.

பிச்சைக்காரன் யோசித்தான். பணத்தைக் கேட்பதா? பார்வை தருமாறு கேட்பதா? செவியைக் கேட்க வைக்கச் சொல்லலாமா? கால்களைக் கேட்பதா? இறுதியாக ஒரு முடிவுக்கு வந்த பிச்சைக்காரன் கேட்டான்:

"சுவாமி! எனக்குச் சொந்தமான செல்வம் நிறைந்த மாளிகையில், மூன்றாவது மாடியில் நின்று கொண்டு, தங்கமும் வைரமும் அணிந்து விளையாடும் என் பேரப்பிள்ளைகளின் செல்ல மொழிகளைக் கேட்டபடி, அவர்கள் விளையாட்டை நான் பார்ப்பதற்கு வரம் வேண்டும்!" என்றான்.

கடவுள் அசந்து போனார். அதன்பின்னர்தான் பூமிக்கு வருவதையே நிறுத்திக் கொண்டாரோ தெரியவில்லை.

* தமிழக முதல்வர் மு.கருணாநிதி இறுக்கிப் பிடித்தால், பிரதமர் தேவகவுடா நம் பிரச்சனையில் கரிசனம் காட்டத்தானே வேண்டும்?

அ. தனஞ்சயன், திருக்கோணமலை.

அப்படியா நினைக்கிறீர்கள்? கலைஞர் கருணாநிதி, கவுடா அரசை ஆதரித்தும்கூட, கவுடாவின் சொந்தமாநிலமான கர்நாடகாவில் உள்ள காவிரித் தண்ணீரைக்கூட கவுடாவால் பெற்றுத்தர முடியவில்லை. பேச்சுத் தோல்வியில் முடிந்திருக்கிறது. தமிழக மக்களுக்குத் தண்ணீரே கொடுக்காத

* முட்டாள்கள் உருவாக யார் காரணம்?

செல்வி. எஸ். விமலா, கண்டி

"ஒவ்வொருவரும் தன்னை ஒரு அறிஞர் என்று நினைக்கிறார்கள். அதனால்தான் உலகில் இத்தனை முட்டாள்கள் இருக்கிறார்கள்." இது எங்கேயோ படித்த ஞாபகம்.

* கலப்படத்தை நிறுத்தவே முடியாதா? எங்கும் கலப்படம், எதிலும் கலப்படம் என்றாகிவிட்டதே?

திருமதி பாத்திமா அன்வர், சாய்ந்தமருது.

கஷ்டம்தான்! சமீபத்தில் படித்த ஒரு புதுக்கவிதை ஒன்றுதான் நினைவுக்கு வருகிறது.

"தற்கொலை
செய்யலாம் என்று
விஷம் குடித்தேன்,
ஆனால்-பிழைத்துக் கொண்டேன்;
அதிலும் கலப்படம்!"

* பொங்கல் படங்களில் அசத்தப்போவது எது?

கி.பரணிதரன், மாத்தளை.

அநேகமாக பிரமாண்டத்தில் 'இருவர்.'

* சமயோசிதமாகப் பேசுவது என்றால் என்ன சிந்தியா?

பா. ஆறுமுகம், ஹட்டன்.

ஆங்கிலேயர்களுக்கும் இந்திய அரசியல் தலைவர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது. அப்போது ஆங்கிலேயர் ஒருவர்- மிடுக்கான தோரணையில்:

"சூரியன் ஒருபோதும் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியத்தை நாங்கள் பெற்றுள்ளோம்!" என்று சொன்னார்.

அப்போது இந்தியத் தலைவர்களில் ஒருவரான சத்தியமூர்த்தி எழுந்து என்ன சொன்னார் தெரியுமா?

"ஆமாம். பிரிட்டிஷ்காரனை இருட்டில் விட்டுவைக்க கடவுளுக்குக்கூட அவநம்பிக்கையாக இருந்திருக்கிறது.!"

* ரம்பாவின் முன்னேற்றத்திற்கு என்ன காரணம்?

எம். கணேசன், குருநாகல்.

நீங்கள் ஆராய வசதியாக ஒரு படம் பிரசுரமாகியுள்ளது.

* கலைஞரின் இடத்தை அவரது மகன் ஸ்டாலின் பிடிப்பாரா?

வெ. சசிகரன், மட்டக்களப்பு.

பிடிக்கவைக்க வேண்டும் என்பதற்காகத்தானே தனக்கு பிடிக்காதவர்களையெல்லாம் ஓரம் கட்டிக் கொண்டிருக்கிறார் கலைஞர்.





படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 66



இராமநாமத்தை ஜெபித்த வண்ணம் விசுவரூபமெடுத்து வானுக்கும் பூமிக்கும் ஏற்படுத்தப்பட்ட பாலம்போல் நின்ற அனுமனைக் கண்ட சீதாப் பிராட்டியார் உள மகிழ்ந் தார். இத்தகைய பேராற்றல் பெற்ற ஒரு தூதனை அனுப்பி வைத்த இராமபிரானை மனதாரப் போற்றி வணங்கினார். தனக்கு விடுதலை கிடைக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பதை உணர்ந்து கொண்டார்.

ஆஞ்சநேயர் மீண்டும் தனது உருவத்தைக் குறுகிய தாக்கிக்கொண்டு சீதாப்பிராட்டியாரைக் கை கூப்பி வணங்கியபடி நின்றார். தன்னைப் பற்றியும் தன்னைச் சார்ந்தவர்கள் பற்றியும் எடுத்துக் கூறினார். விரைவில் இராமபிரானிடம் சென்று பிராட்டியாரைத் தான் கண்டதைக் கூறவிருப்பதாகவும் தெரிவித்தார். இருப்பினும், சீதாப் பிராட்டியார் மனத்தில் அடிக்கடி ஐயப்பாடுகள் தோன்றுவதையும் ஆஞ்சநேயர் அவதானித்தார். "தாயே! தாங்கள் இனிமேல் கவலைகொள்ள வேண்டிய அவசியமே இல்லை. எண்ணிறந்த வானரப்படைகள், அரக்கர்கோனையும், அரக்கர் இனத்தையும் அடியோடு அழித்தொழிக்கக் கங்கணம் கட்டிய வண்ணம் காத்து நிற்கின்றன. ஆகவே விசனம் தவிர்த்து சில காலம் பொறுமையுடன் காத்திருங்கள்!" என்றார் ஆஞ்சநேயர்.

இதனைச் செவியுற்ற பிராட்டியார், "அனுமனே! உம்மைக் கண்டதும் எனக்கு ஓரளவு நிம்மதி பிறந்திருக்கிறது. இருப்பினும் இராவணனும் அவனுடைய ஆட்களும் அபரிமிதமான பலம் கொண்டவர்கள்; மந்திரம்-மாயம் போன்ற சக்திகளைக் கையாள்பவர்கள். இவர்களுடன் போரிட்டு வென்று என்னை மீட்டெடுப்பது அவ்வளவு சுலபமாக இருக்கும் என்று எண்ணிப்பார்ப்பது கடினமாகவே இருக்கிறது. போர் தொடுத்து என் பிரபு வருவதற்கு முன்னரே இராவணன் தரும் தொல்லைகளை என்னால் தாங்கிச் சகித்துக் கொள்ளும் வல்லமை இருக்கும் என்பது சந்தேகமாகவே இருக்கிறது." என்றார்.

## தர்மமாகாது

"அவ்வாறானால் அன்னையே! இன்றே-இப்பொழுதே என்னுடன் புறப்படுங்கள்! தங்களை என் தோள் மீது தாங்கி, வான்மீது தாவிச் சென்று எனது அண்ணலிடம் சேர்த்து விடுகிறேன்!" என்று கூறிய அனுமன்- மேலும் தன் உடலை வளைத்து பிராட்டியாரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். அனுமனின் கோரிக்கைக்கு நன்றி கூறிய பிராட்டியார், "ஆஞ்சனேயா! உமது வீரபராக்கிரமத்தில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. அவ்வாறு நான் திருட்டுத்தனமாக இங்கிருந்து தப்பிச் செல்வது சத்திரிய குலத்தவளான எனக்கு ஏற்புடையதல்ல. அரக்கர்க்கரசன் தந்திரமாக என்னைச் சிறைப்பிடித்தாலும் அதே முறையில் நான் வெளியேறுவது தர்மமாகாது. என் கணவர்தான் வந்து, தனது வீரத்தால் எதிரியை வீழ்த்தி எனக்கு விடுதலை தரவேண்டும். ஆனால் இடையிலுள்ள கடலைத்தாண்டி, அரக்கர் கோட்டை-அணிகளைத் தகர்த்து, இலங்கேஸ்வரனை வெல்ல முடியுமா என்பதில் ஏனோ என்மனம் ஐய அலைகளை எழுப்பிய வண்ணமே உள்ளது," என்றார்.

ஆஞ்சநேயர் மெல்லிய புன்னகையை உதிர்த்த வண்ணம் பிராட்டியாரிடம், "அன்னையே! தங்கள் கணவர் இராமச்சந்திரப்பிரபுவின் வீரதீரச் செயல்களை மூவுலகமும் போற்றுகின்றன. விசுவாமித்திர மாமுனிவரின் வேள்விகளை நாசம் செய்ய முற்பட்ட அரக்கர்களை அழித்தொழித்த கதைகளைத் தாங்கள் அறிவீர்கள். வில்லெடுத்து வீரச் சமர் புரிவதில் வல்லவர் என்பதனால் கோதண்டராமர் என்று பெயர் பெற்றவர். பல்லாயிரக்கணக்கான சத்திரியர்களைக் கொன்று குவித்த பரசுராமரே, இராமபிரானிடத்தில் தலை கவிழ்ந்ததைத் தாங்கள் கண்ணாரக் கண்டவர்கள். எமது குலத்தில் மாபெரும் வீரனானவனும் மூவுலகிலுமே ஈடிணையுமில்லாதவனுமான வாலியை தன் ஒரே பாணத்தினால் சாய்த்தவர் எம்பெருமான். இந்த இராவணனைவிட பன்மடங்கு வலிமை பொருந்தியவன் வாலி. இராவணனை ஒருதடவை வாலி தன் வாலினால் சுருட்டிக் கட்டி, இழுத்து வீதிகள்வழி சென்றிருக்கிறான். இதனால், வாலியின் பெயர் கேட்டாலே இராவணன் நடுங்குவான். அந்த வாலியை வீழ்த்திய தங்கள் தலைவரின் வீரத்தில் தாங்கள் சந்தேகம் கொள்வது தகாது தாயே!

இளையபெருமாள் இலக்குவனும் இலேசானவர் அல்லவே! எங்கள் மன்னர் சுக்கிரீவனின் ஏவலாளன் யான். என்னைவிட ஆற்றல் மிக்க இலட்சக்கணக்கானோர் எங்கள் படையில் திரண்டு நிற்கின்றனர். ஆகவே, அரக்கர் இனமே அழியும் காலம் தூரத்தில்லை என்பதனை உணர்ந்து, இன்னும் சில காலம் பொறுமையைக் கடைப்பிடித்திருங்கள் அன்னையே!"

## வாலியை வதைத்த வீரர்

அனுமன் தன்னுடைய வரலாற்றை சீதாப்பிராட்டியாருக்கு எடுத்துரைக்கும் போது, வாலியை இராமபிரான் வதம் செய்த கதையையும் கூறுவதாக கவிச்சக்கரவர்த்தி கம்பநாடார் மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

**மற்று அவன் முன்னோன் வாலி**
**இராவணன் வலிதன் வாலின்**
**இற்று உகக் கட்டி எட்டுத்**
**திசையிலும் எழுந்து பாய்ந்த**
**வெற்றியன் தேவர் வேண்ட**
**வேலையை விலங்கல் மத்தில்**
**சுற்றிய நாகம் தேய.**
**அமுது எழக் கடைந்த தோளான்.**

*(சுந்தர காண்டம்-517)*

**இராஜகுமாரன்**

*(இப்பாடலுக்கு முன்வரும் பாடலில் சூரியன் மகனான சுக்கிரீவனைப் பற்றிக் கூறியமையினால்-அதன் தொடர்ச்சியாக-'மற்று அவன் முன்னோன் வாலி' என்று இப்பாடல் தொடங்குகிறது)*

பொருள்:

*அவ்வாறான சுக்கிரீவனின் அண்ணனான வாலி இராவணனின் கர்வத்தை அடக்கும் நோக்குடன் இராவணனை தன் வாலினால் இறுகச் சுற்றிக் கொண்டு எட்டுத் திசைகளிலும் இழுத்துச் சென்று* ***தன் வலிமையை*** *நிலை நிறுத்தினான். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலிலிருந்து அமுதத்தைக் கடைந்தெடுப்பதற்காக மந்திர மலையை மத்தாக நட்டு வாசுகி எனும் பாம்பைக் கயிறாகக் கட்டி இழுத்துக் கடையும்போது அப்பாம்பு தேய்ந்து துன்பப்பட, மந்திரமலை கடலுள் அமிழ்ந்தது. தேவர்களின் வேண்டு கோளை ஏற்று தன் தோள்களைக் கொடுத்து மலையைத் தாங்கி, அமுதம் கிடைக்க வழி செய்தவன் வாலி.*

# "சிரஞ்சீவியாக வாழ்க!"

✻ ✻ ✻

**அன்னவன் தன்னை உம் கோன்**
**அம்பு ஒன்றால் ஆவி வாங்கி**
**பின்னவர்க்கு அரசு நல்கி**
**துணையெனப் பிடித்தான் எங்கள்**
**மன்னவன் தனக்கு நாயேன்**
**மந்திரத்து உள்ளேன் வானின்**
**நந்நெடுங்காலின் மைந்தன்**
**நாமமும் அனுமன் என்பேன்.**

*(சுந்தர காண்டம்-518)*

பொருள்:

*"அப்பேர்ப்பட்ட வீரம்பொருந்திய வாலியை தங்கள் கணவனான இராமபிரான் ஒரேயொரு கணையினால் வீழ்த்தி அவனுடைய தம்பியாகிய சுக்கிரீவனுக்கு ஆட்சியைக் கையளித்தார். இதனால் இராமபிரானும் சுக்கிரீவனும் நண்பர்களானார்கள். அந்தச் சுக்கிரீவனின் அமைச்சனான நாயை* ஒத்தவனான யான் வாயு தேவனின் புத்திரனாவேன், என் பெயர் அனுமன்."

## அனுமனின் கோரிக்கை

அனுமனின் கதைகளைக் கேட்டபின்னர் பிராட்டியாரின் முகத்தில் தனியானதொரு மகிழ்ச்சி ஒளியினை அனுமனால் காணநேர்ந்தது. இதனால் அவருடைய உள்ளத்திலும் உவகை பொங்கிற்று. "அன்னையே! நான் கூறிய கருத்துக்கள் தங்களுக்கு நம்பிக்கையைத் தந்திருக்கின்றன, என்பதனைக் கண்டு எனக்கு இப்பொழுது ஒரு புதுவேகம் பிறந்திருக்கிறது. இனிமேல் எவ்வித தங்கு தடையுமின்றி நான் என் பிரபுவைக்காண ஓடிச் செல்ல வேண்டும். "கண்டேன் தங்கள் ஜானகியை" என்று அன்னாரிடம் கூற வேண்டும். ஆகவே, தங்களை நான் கண்டேன் என்பதற்கு அடையாளமாக பல கருத்துக்களைக் கூற வேண்டுமே!

இராவணனால் தாங்கள் கவர்ந்து வான் வழியே கொண்டு செல்லப்படும்போது தங்கள் அணிகலன்களை ஒரு துணியில் முடிச்சாகக் கட்டி கீழே எறிந்தீர்கள். அந்நகைகளை நாங்களே கண்டெடுத்தோம். பின்னர் அவற்றை இராமபிரானிடம் காட்டியபோது, அவர் மனம் வருந்திக் கண்ணீர்சொரிந்தார். அதுமட்டுமல்லாமல், தங்களுக்கும் அவருக்குமிடையிலான பல அந்தரங்கங்களை என்னிடம் கூறினார். அவையெல்லாம் தங்களுக்கு நினைவிருக்கிறதா என்று கேட்கும்படி கூறினார். தங்களை இலகுவில் அடையாளம் கண்டு கொள்வதற்கு ஏதுவாக தங்கள் அங்க அடையாளங்களையெல்லாம் அவர் என்னிடம் விபரித்தார். ஆகவே, அண்ணலிடம் நான் என்னென்ன விபரங்களைக் கூற வேண்டும் என்பதனை என்னிடம் கூறுவீர்களாக," என்று வினயமாகக் கோரினார்.

அனுமனின் ஆற்றல்களை அனுமானித்து உணர்ந்து கொண்ட பிராட்டியார், இராமபிரானுக்கும் தனக்குமிடையில் இடம் பெற்ற பல சம்பவங்களைக் குறிப்பாகக் கூறினார். அனுமனைக் கண்டதுமுதல் தன் மன நிலையில் ஏற்பட்ட நல்ல மாறுதல்களைக் குறிப்பிட்டார். தனது துயரத்தைக் களைந்தமையினால் மாருதி என்ற பெயருடைய அனுமனை வாழ்த்தினார்.

"வலிமைமிக்க பருத்த தோள்களை உடைய வள்ளலே! ஈரேழு பதினான்கு உலகங்களும் அழிகின்ற காலம் வந்தாலும் நீ என்றும் சிரஞ்சீவியாக வாழ்வாயாக!"

இத்தகைய வாழ்த்தினைப் பெற்ற அனுமன் மேலும் பெருமகிழ்ச்சியுடன் சீதாப் பிராட்டியாரின் தாள் பணிந்தார்.

(தொடர்ந்து வரும்)

---

**இராமாயணப் போட்டி: 64**

**சரியானவிடை:- இராவணனைக் கொன்றுவிட நினைத்தார்.**

1. பி. நவநீதகேசி, 30 3/1, கல்பொத்த வீதி, கொழும்பு-13.
2. எஸ்.ரி. இராஜா, 43, சிறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
3. டி.கே.என். ரிஷாதா, தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை.
4. சிதம்பரநாதக்குருக்கள் ஸ்ரீரவி, 213, பிரதான வீதி, இரத்தினபுரி.
5. பி. பிரியந்தி, ஏ3/எஃப்4, புளூமெண்டால் தொடர்மாடி, கொழும்பு-13.

**போட்டி இல. 66** கேள்வி:- வீரத்தில் சிறந்தவன் வாலியா, இராவணனா?

ஜனவரி. 25 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி-இல.66, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

---

**ராஜீவ் கொலையை விசாரிக்கும் ஜெயின் கமிஷன் முன்னால் கலைஞர் கருணாநிதி சாட்சியம் அளித்தார் அல்லவா? அதற்குப் போட்டியாக நம் காதிலை பூ கந்தசாமியார் செயின் கமிஷன் முன்பாக கலைஞரை குறுக்கு விசாரணை செய்கிறார்.**

# செயின் கமிஷன் கலைஞர் சாட்சி

**காதிலை பூ கந்தசாமி**



நீதிபதி: மிஸ்டர் கருணாநிதியை நோக்கி வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாக உங்கள் கேள்விகள் தொடுக்கப்படலாம்.

கா.பூ.க: மன்னிக்கவேண்டும். மோட்டாரிலிருந்து புறப்படும் ஷெல்லாகத்தான் என் கேள்விகள் பாயும்.

நீதிபதி: கூரையைப் பிய்த்துக்கொண்டா உங்கள் கேள்விகள் கொட்டப்போகின்றன? பலே பலே!
- குறிதான் தவறப்போகிறது ஜாக்கிரதை!

கா.பூ.க: உங்கள் பெயர்?

கலைஞர்: உங்கள் பெயருக்கும் முதல் எழுத்து 'க'.என் பெயருக்கும் முதல் எழுத்து 'க'. 'க' என்ற எழுத்தில்தான் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற ஒப்பற்ற வார்த்தைகளும் உதயமாகின்றன.

கா.பூ.க: நீங்கள் எங்கோ போகிறீர்கள்.

கலைஞர்: எங்கும் போகவில்லை. இங்குதான் இருக்கிறேன். நான் இங்கே இருக்கிறேன் என்றால் பேரறிஞர் அண்ணாவும் இங்கு தான் இருக்கிறார். பெருந்தகையாம் பேராசான் பெரியாரும் இங்குதான் இருக்கிறார் என்றுதான் பொருள்.

கா.பூ.க: *(முடியைப் பிய்த்துக் கொள்கிறார்)* நன்று. நன்று, நீங்கள்தானே முதலமைச்சர் கருணாநிதி.

கலைஞர்: இல்லை, ஆம்!

கா.பூ.க: புரியவில்லையே!

கலைஞர்: கருணாநிதி என்பது நான்தான்! முதலமைச்சர் என்றீர்கள் அதுதவறு! நான் முதலமைச்சர் அல்ல அண்ணா என்ற முதலை இழந்த அமைச்சர். பல்லாண்டுகள் முன்பாக பதவியேற்றபோதே நான் இதை பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

கா.பூ.க: அண்ணாவை அரசியலுக்கு முதலீடாக்கி விட்டீர்கள் என்று கருதலாமா?

கலைஞர்: நான் அவ்வாறு நடந்துகொள்ளக் கூடியவன் அல்ல என்று நாற்பதாண்டுகளுக்கு முன்னரே நண்பர் எம்.ஜி.ஆர் சொல்லியிருக்கிறார். இதோ அவர் பேசி பத்திரிகைகளில் பிரிண்டாகி வந்த கட்டிங் பேப்பர்ஸ். *(ஒரு கத்தையாக பத்திரிகைத் தொகுப்பை சமர்ப்பிக்கிறார்)*

கா.பூ.க: எம்.ஜி.ஆரை மலையாளி, அரிதாரம் பூசிய கோமாளி என்றெல்லாம் வசைபாடியும் இருக்கிறீர்கள் அல்லவா?

கலைஞர்: அது வசைபா அல்ல வாழ்த்துப்பா. மலையாளி என்றேன், மறுக்கவில்லை! அது அவர் பிறப்பைக் குறித்துச் சொன்ன வார்த்தைகளல்ல. அவர் சிறப்பைக் குறித்துச் சொன்ன வார்த்தை! மலைக்கு நிகரான மனஉறுதி கொண்ட ஆள் என்பதை சுருக்கினால் மலையாளி என்று வரும்! அரிதாரம் பூசிய கோமாளி என்றேன், உண்மைதான்! தன் அழகான முகத்தில் மக்களுக்காக அரிதாரம் பூசிய அரசன் என்ற அர்த்தத்தில்தான் சொன்னேன். 'கோ' என்றால் அரசன் என்று பொருள்! கோமாளியில் 'கோ' இருக்கிறது!

கா.பூ.க: கோமாளியில் உள்ள 'கோ' அரசனைக் குறிக்கிறது ஓ.கே. மீதியுள்ள மாளியை என்ன செய்வது?

கலைஞர்: மறப்போம், மன்னிப்போம் என்றார் அண்ணா.

கா.பூ.க: ராஜீவ் கொலை தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?

கலைஞர்: என் ஆசான் பேரறிஞர் அண்ணா உயிருடன் இருந்தால் என்ன நினைத்திருப்பாரோ, அதுதான் என் நினைப்பும்!

கா.பூ.க: ராஜீவ் கொலையைக் கண்டிக்கிறீர்களா?

கலைஞர்: கண்டிக்கவேண்டியவற்றை கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிக்கவேண்டிய முறையில் கண்டித்து வளர்ந்த இயக்கம்தான் கழகம்!

கா.பூ.க: விடுதலைப் புலிகளுடன் நெருக்கமாக இருந்தீர்கள் என்கிறேன் நான்.

கலைஞர்: என் இனிய நண்பர் எம்.ஜி.ஆர் புலிகளுடன் நெருக்கமாக இருந்தார் என்கிறேன் நான்.

கா.பூ.க: புலிகளுக்கு நீங்கள் ஆதரவு கொடுத்தீர்களா இல்லையா?

கலைஞர்: என் நாற்பதாண்டுகால நண்பர் எம்.ஜி.ஆர் பல கோடிகளைப் புலிகளுக்குக் கொடுத்தார் என்பதை ஆதாரபூர்வமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கா.பூ.க: புலிகளை நீங்கள் சந்தித்தீர்களா?

கலைஞர்: ராஜீவ் காந்தி சந்தித்திருக்கிறார். ஜெயலலிதா சந்தித்திருக்கிறார். அதற்கான ஆதாரங்கள் கழகத்தின் ஆவணப் பகுதியில் இருக்கின்றன!

கா.பூ.க: நீங்கள் சந்தித்தீர்களா இல்லையா?

கலைஞர்: சந்தித்தேனா என்பதைவிட அவர்களைப் பற்றி என்ன சிந்தித்தேன் என்பதை நான் சொல்லவேண்டிய அவசியமே இல்லாமல், செல்வி ஜெயலலிதாவே ஆறாண்டுகளுக்கு முன்னர் அழகாகச் சொல்லியிருக்கிறார். புலிகள்தான் தமிழர்களின் பிரதிநிதிகள், கலைஞர் செய்யும் உதவிகள் போதுமானதல்ல என்று செல்வி பேட்டி கொடுத்திருக்கிறார். அந்தப் பேட்டி நம் அயல்மொழியாம் ஆங்கிலத்தில்கூட வெளியாகியது.

கா.பூ.க: அப்படியானால் நீங்கள் புலிகளை ஆதரிக்கவே இல்லையா?

கலைஞர்: ஆதரிக்கவில்லை என்று ஜெயலலிதா அம்மையார் சொல்லியிருக்கிறார்.

கா.பூ.க: உங்கள் கழகத்தில் இருந்து வை.கோபால்சாமி சென்று பிரபாகரனைச் சந்தித்தார் அல்லவா?

கலைஞர்: அதையெல்லாம் சிந்தித்துப் பார்த்த காரணத்தினால்தான் அவரை நிந்தித்து வெளியேற்றி இருக்கிறோம்.

கா.பூ.க: வை. கோபால்சாமியை போர்வாள் என்று புகழ்ந்தது நீங்கள்தானே?

கலைஞர்: அது புகழ்ச்சி அல்ல, இகழ்ச்சி! பச்சைப் பயிர்களுக்குள் நின்று கொண்டு களை இருக்கிறது என்று சொன்னால், அது களையைப் புகழ்வதாக அர்த்தமாகாது. களையைப் பிடுங்கி எறிய இனம் கண்டுவிட்டோம் என்றுதான் பொருள். அண்ணல் காந்தி வழி வந்த கொள்கையைக் கண்ணாகக் கருதும் கழகத்தில் போர்வாள் ஒன்று புகுந்துவிட்டது என்றால், அது வீசியெறியப்பட வேண்டும் என்றுதான் பொருள்! அன்று கண்டதைச் சொன்னேன்! இன்று அதைக் கையிலெடுத்து வீசியெறிந்துவிட்டேன்!

கா.பூ.க: கொலைவாளினை எடடா கொடியோர் செயல் அறவே என்று பாரதிதாசன் பாடியிருக்கிறாரே!

கலைஞர்: பாரதிதாசன் எனது பத்தாண்டுகால நண்பர்! அவர் அந்தப் பாடலைப் பாடும்போது நான் அவர் பக்கத்தில்தான் இருந்தேன். நம்மை கொலைவாள் ஏந்துமாறு அவர் சொல்லவில்லை, எதிரியிடம் இருக்கின்ற கொலைவாளை தந்திரமாகப் பேசி எடுத்தெறிந்திட வேண்டும் என்பதுதான் அந்தப் பாடலின் பொருள்!

கா.பூ.க: தமிழ் ஈழம் வேண்டும் என்று சொன்னீர்களா?

கலைஞர்: ஈழத் தமிழ்த் தலைவர்கள்தான் சொன்னார்கள்!

கா.பூ.க: நீங்களும் அதனை ஆதரித்து முன்னர் பேசியிருக்கிறீர்களே?

கலைஞர்: அவர்கள் சொன்னதைச் சொன்னேனே தவிர நானாகச் சொன்னதில்லை.

கா.பூ.க: புலிகளை எதிர்காலத்தில் ஆதரிப்பீர்களா?

கலைஞர்: பாட்டாளி மக்கள் கட்சி ஆதரிக்கும்.

கா.பூ.க: நான் உங்கள் கட்சி பற்றிக் கேட்கிறேன்?

கலைஞர்: நான் பாட்டாளி மக்கள் கட்சி பற்றிக் கூறுகிறேன்.

கா.பூ.க: இலங்கைத் தமிழர் பிரச்சனையில் உங்கள் நிலைப்பாடு என்னவோ?

கலைஞர்: கழகம் ஒரு ஜனநாயக இயக்கம். பொதுச் செயலாளருடன் கலந்துபேசி, பொதுக்குழுவில் கூடி முடிவெடுத்துத்தான் நிலைப்பாடுகளை வெளிப்பாடாக்க முடியும் என்கின்ற காரணத்தால், நேரடியாக இக் கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை.

கா.பூ.க: இலங்கைத் தமிழர்களின் துன்பம் தீர என்ன செய்யப் போகிறீர்கள்?

கலைஞர்: வருத்தத்தோடு கவனிப்போம்! மத்திய அரசிடம் முறையிடுவோம்!

கா.பூ.க: இதுவரை முறையிடவே இல்லையா?

கலைஞர்: முறையிடலாம் என்று சென்ற நேரத்தில், முன்னாள் முதல்வரின் முறைகேடுகளை முறையிட்டு முடிக்கவே முப்பது மணிநேரம் ஆகிவிட்ட காரணத்தாலும், அந்த முப்பது மணிநேரத்திற்குள் பிரதமரின் நாற்காலிக்கு ஆபத்து வந்துவிட்ட காரணத்தால், அவர் தன்னைக் காப்பாற்ற தோழமைக் கட்சிகளிடம் முறையீடு செய்ய செல்ல வேண்டிய காரணத்தாலும், இலங்கைத் தமிழர் பிரச்சினையை முறையிட முடியவில்லையே என்ற மனக்குறையுடன் திரும்பிவரும்போது, மந்திரி சிதம்பரம் என் முன்னால் வந்தார் என்றாலும் அவரிடமும் முறையிட முடியாதளவுக்கு, முன்னாள் முதல்வரின் ஊழல்களைப் பற்றி அவர் என்னிடம் முறையிட ஆரம்பித்துவிட்ட காரணத்தால், அவரிடமும் இலங்கைத் தமிழர் பிரச்சனையை முறையிட முடியவில்லையே என்ற மாறாத குறையுடன், முன்னாள் முதல்வரின் ஊழல்களில் எனக்கு தெரிந்தவற்றையும் அவரிடம் முறையிட்டுவிட்டு திரும்பி வரவேண்டிய இக்கட்டான நிலைக்கு உள்ளானேன் என்ற காரணத்தால்,

காதிலை பூ கந்தசாமியார் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கிறார். நீதிபதியின் இருக்கையும் காலியாக இருக்கிறது. அவர் முன்கூட்டியே தலைமறைவாகிவிட்டார்.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/24/NEWS/96)

www.padippakam.com




அருள் ஜுவலரிஸ்
ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

436331

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# ஹெலியில் சுற்றுலா



→ பூமி தன்னைத்தானே ஒரு தடவை சுற்றிவர எடுக்கும் நேரம் 24 மணிநேரம் என்பது தெரிந்த செய்தி. அதே பூமியை நாம் சுற்றிவர எவ்வளவு நேரம் எடுக்கும் என்கிறீர்கள்?

அமெரிக்காவைச் சேர்ந்த றோன் போவெர் என்பவர் 24 நாட்களில் பூமியை ஒரு சுற்று சுற்றி முடித்து புறப்பட்ட இடத்துக்கே சென்று சேர்ந்தார்.

அதிவேக ஜெட் விமானத்தில் சுற்றியிருப்பாராக்கும் என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. சாதாரண ஹெலிகொப்டரில்தான் தனியாகப் பறந்து ஒரு ரவுண்ட் அடித்திருக்கிறார். அதனால்தான் அவரது முயற்சி உலக சாதனையாக கின்னஸில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பூமியைச் சுற்றி தான் புறப்பட்ட இடத்துக்கே அவர் வந்துசேர எடுத்துக்கொண்ட சரியான நேரம்: 24 நாட்களும், 4 மணித்தியாலமும், 36 நிமிடம் 24 செக்கன்களும் ஆகும். ஹெலிகொப்டர் ஓட்டியான றோன் பொவர் 1994ல் இந்த உலக சாதனையைப் படைத்தார் (படத்தில் இருப்பவர்தான் றோன் பொவர்) அதிகுறைந்த நேரத்தில் ஹெலியில் உலகைச் சுற்றிய மனிதர் இவர்தான்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

323657

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# உலகம் சுற்றிய வாலிபி



← ஹெலிகொப்டரில் உலகம் சுற்றியவரைப் பற்றி அறிந்துவிட்டோம். பொடி நடையாகவே உலகம் சுற்றியிருக்கிறார் ஒரு வாலிபி. இதுவரை உலகைச் சுற்றியவர்களில் அதிக தூரம் நடந்து உலகை சுற்றிய பெண்மணி இவர்தான்.

இடையே கடல் வழிகள் குறுக்கிடும்போது விமானத்தில் பயணம் செய்து, பின்னர் கால் நடையாக சென்றார். அதனால் தனது பயணத்தை ஐந்து கட்டங்களாகப் பிரித்து நான்கு கண்டங்களை கடந்து 20 நாடுகளில் நடந்து சென்று சாதனை படைத்தார்.

1983 ஆகஸ்ட் 16ம் திகதி இங்கிலாந்தில் இருந்து புறப்பட்டு 1994 அக்டோபர் 14ல் புறப்பட்ட இடத்தை வந்தடைந்தார்.

மொத்தமாக 31 ஆயிரத்தி 521 கிலோ மீட்டர் தூரம் (19,586 மைல்கள்) இவர் நடந்துள்ளார்.

11 வருடகால பொடி நடைமூலம் வித்தியாசமான அனுபவங்களை விதம்விதமாக சேகரித்துக் கொண்டு திரும்பினார். இந்த உலகைச் சுற்றிய வாலிபியின் பெயர்: எஃபியோனா கம்ப்பெல். என்னமாய் புன்னகைக்கிறார் பாருங்கள். நாடு பல கண்ட நங்கையல்லவா!

# ஒரே ஒரு வாழையில்



↑ இது ஒரு உள்நாட்டு ஆச்சரியம். வழக்கமாக எல்லா வாழைகளும் பல கன்றுகள் போடும். ஆனால் எந்த வாழையும் ஒரு குலைதான் தரும். இந்த வாழையில் மட்டும் எந்த வாழையிலும் இல்லாத ஒரு ஆச்சரியம். ஒரு குலை பெரிதாக இருக்க, அந்தக் குலையில் நாலு குலைகள் இருக்கின்றன.

இந்த அதிசய வாழை வவுனியா பெரியகுளத்தில் இருக்கிறது. வேலுப்பிள்ளை என்பவரின் வீட்டுத் தோட்டத்தில் இதனைக் கிளிக் செய்து அனுப்பியவர் ஸ்ரீபராஜன். வவுனியா இளைஞர் சேவை அதிகாரி க. குணநாதன் இதனை நேரில் பார்த்து உறுதி செய்து தகவல் தந்துள்ளார்.

# நானூறில் ஒன்று



→ பிரமாண்டமாக மிரட்டும் இந்தச் சுறா ஒரு புலி. கடலில் 400 வகையான சுறாக்கள் இருக்கின்றன. அதில் ஒன்று சான்ட் டைகர் சுறா அதாவது மண்புலிச் சுறா.

இதுவரை பிடிபட்ட மண்புலிச் சுறாக்களில் முக்கிய புள்ளி இதுதான். அதனால் இதன் மகத்துவத்தை கின்னஸில் பொறித்து வைத்திருக்கிறார்கள்.

1986 மே மாதம் அமெரிக்காவில் உள்ள வட கலிபோர்னியா கடலில் இது பிடிபட்டது.

இதன் எடை 144.24 கிலோ. (316 இறாத்தல்) தூக்கிச் சுமந்தால் மூர்ச்சையாகிப் போவீர்கள்.

அதிக எடை மட்டுமல்ல, இது ஆபத்தான சண்டைச் சுறாவும்தான்.

**சுறாவில் சூரன்**
**எடை மட்டும் 318 இறாத்தல்!**
**லேசில் மாட்டாது**
**நாம் மாட்டினால் தொலைந்தோம்**

# 2 வது பிறந்த நாள் வாழ்த்து

## பாதிமா ஷப்னா



கம்மல்பிடிய, பஸ்யாலையைச் சேர்ந்த சுஹைல் ஹிஸ்மியா தம்பதிகளின் செல்வப் புதல்வி பாதிமா ஷப்னா 18.01.97 அன்று தனது 2வது பிறந்தநாளைக் கொண்டாடினார். பாதிமா ஷப்னாவை உம்மா, வாப்பா, பலப்பிட்டியைச் சேர்ந்த பாட்டி, பாணந்துறையைச் சேர்ந்த உம்மும்மா, அப்பா, ஆன்டிமார்களான பர்ஸானா, றம்ஸியா, மில்ஹானா, அர்ஹாம் அங்கிள், அரபாத் அங்கிள், லைலாப் பாட்டி–பாத்தும்மா பாட்டி குடும்பத்தினர்கள், ஸருக் மாமா–நவ்வி சாச்சா குடும்பத்தினர்கள், அப்பா, வாப்பும்மா, பாஹிர் பெரியப்பா–அமான் பெரியப்பா– சவூதி ஹிதாயத் பெரியப்பா–ஜீனத் மாமி–சுமையா மாமி–உனைஸ் சாச்சா குடும்பத்தினர்கள், வத்தல்பொலையைச் சேர்ந்த மின்ரியா வாப்பும்மா–தருவேஸ் அப்பா–இனா வாப்பும்மா குடும்பத்தினர்கள், திக்கலையைச் சேர்ந்த நவ்பல் அப்பா குடும்பத்தினர்கள், ஜெகன்யா ஆன்டி, நர்தினா ஆன்டி, றியாமா ஆன்டி, பபா ஆன்டி, முபஷ்ஷிரா ஆன்டி, ஸஹதுல்லா அங்கிள், ஜெஸ்மின் அங்கிள், ஹிஸ்மி அங்கிள், ஹஸ்மத் அலி அங்கிள், ஆஸிம் அங்கிள், ஹகீம் அங்கிள், அன்வர் அங்கிள், கரேஷ் அங்கிள், நிபாத் அங்கிள், சவூதி இல்யாஸ் அங்கிள், இர்ஷான் அங்கிள் ஆகிய அனைவரும் பாதிமா ஷப்னாவை பல்கலையும் கற்று பணிவன்புடன் இன்புமுற்று வாழ இனிதே வாழ்த்துகிறார்கள்.

அர்ஹாம் அங்கிள்

# கிரேக்கப் பைங்கிளி

→ இந்தியாவில் உலக அழகிப் போட்டி நடத்தியதை கண்டித்தவர்களின் வசைமாரிகளை எல்லாம் வாங்கிக் கட்டிக் கொண்டவர் அமிதாப்பச்சன்.


ஆனால் இந்தியாவில் அழகிப்போட்டி நடத்துவதற்கு முக்கிய காரணமாக இருந்தது யார் தெரியுமா? ஒரு பெண்மணி! பாமேஸ்வர்கோத்றெஜ்.

இந்தியாவில் சிந்தோல், குட்நைட் போன்ற சோப் வகைகள் மற்றும் அழகு சாதனப் பொருட்களை தயாரிக்கும் நிறுவனத்தின் உரிமையாளர்தான் கோத்றெஜ். அமிதாப்பச்சனின் நிறுவனம் செய்ததெல்லாம் கோத்றெஜ் மேற்கொண்ட முயற்சிகளுக்கு உதவியது மட்டும்தான். அதற்கான ஒரு கூலியையும் பெற்றுக் கொண்டது அமிதாப்பின் நிறுவனம்.

புற்றுநோயாளர்களுக்கு உதவும் நிறுவனம் ஒன்றையும் நடத்திவருகிறார் கோத்றெஜ். இந்தியாவில் நடந்த உலக அழகிப்போட்டியின் வருமானத்தில் பெரும்பகுதியை அதற்காக ஒதுக்கியுள்ளார்.

உலக அழகிப் போட்டியை தொலைக்காட்சியில் ஒளிபரப்பச் செய்தது மூலம் உலகின் 200 கோடி மக்களின் கண்களை இந்தியா நோக்கி ஈர்த்தவர் கோத்றெஜ் என்று பாராட்டுக்கள் குவிந்துள்ளன. கண்கள் எல்லாம் இந்தியாவை எங்கே பார்த்தன. மெல்லிடை மங்கையரின் மேனிகளில்தான் லயித்தன என்கிறார்கள் எதிர்ப்பாளர்கள்.

(படத்தில் இந்தி நடிகர் அக்ஷய் குமாருடன் இடதுபுறம் நிற்பவர்தான் கோத்றெஜ். வலது புறம் உலக அழகி கிரேக்கத்துப் பைங்கிளி இறெனி இஸ்க்லிவா. மேலும் சுவையான சமாச்சாரம் பக்கம் 8 இல்)






படிப்பகம்